# அரச கணக்குகள் குழுவின் தலைவராக திஸ்ஸ விதாரண



02 பக்கம்

Follow us:

தமிழன்

THAMILAN

தமிலன்

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

மலர் : 02, இதழ் : 452 பிலவ வருடம், தை மாதம் 29ஆம் திகதி வெள்ளிக்கிழமை (11.02.2022) ஹிஜ்ரி - 1443, ரஜப் - 09, 0115886187 - பக்கங்கள் 16

விலை ரூ.30



சுமார் 2 வருடங்கள் தடுப்புக்காவலில் இருந்து பிணையில் விடுவிக்கப்பட்ட மனித உரிமைகள் செயற்பாட்டாளர் சட்டத்தரணி ஹிஜாஸ் ஹிஸ்புல்லா, இல்லத்தில் தனது மகளுடன் குலாவும் காட்சி.

# கொக்கிளாய் கிராம மக்களின் பூர்வீக நிலம் பறிபோகும் அபாயம்



10 பக்கம்



## தேர்தலை நடத்துவோம்; வெற்றியும் பெறுவோம்!

### அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ சபையில் சூளுரை

யோ.தர்மராஜ்

உரிய நேரத்தில் தேர்தல் நடத்தப்படும். அதற்கு எதிர்க்கட்சிகள் தயாராக இருங்கள். தேர்தலை நடத்துவது மாத்திரமல்ல அதில் நாங்களே அமோக வெற்றிபெறுவோம் என ஆளுந்தரப்பு பிரதான கொறடா, அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ தெரிவித்தார். 02 பக்கம்

# ஞானசார தேரரால் பேராபத்து வரும்!

## நாடாளுமன்றத்தில் எச்சரித்தார் ரிஷாட் எம்.பி.



ஒரே நாடு, ஒரே சட்டம் என்ற செயலணிக்காக நியமிக்கப்பட்டுள்ள தலைவரை தயவுசெய்து மாற்றுங்கள். அவரை வைத்து எதிர்காலத்தில் அரசியல் செய்யலாம் என நீங்கள் நினைத்தால் அது பெரிய ஆபத்தை உருவாக்கும் என அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரிஷாட் பதியுதீன் நாடாளுமன்றத்தில் நேற்று எச்சரிக்கை விடுத்தார்.

பயங்கரவாதத் தடைச்சட்ட திருத்தத்தில் எந்தவிதமான மாற்றங்களையும் நாம் காணவில்லை எனவும், இதன்மூலம் சர்வதேசத்தை ஏமாற்றி விட முடியும் என்று நினைக்காமல் பாதிக்கப்பட்டவர்களின் நலன்களை முன்னிறுத்தி, ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை மேற்கொள்வதே காலத்தின் தேவை எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

பயங்கரவாதத் தடைச்சட்டத்தில் திருத்தங்களை மேற்கொள்வதற்கான சட்டமூலம், வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸினால் நேற்று நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது. இதன்போது உரையாற்றிய ரிஷாட் எம்.பி. மேலும் கூறியதாவது,

“இன்று சமர்ப்பிக்கப்பட்டுள்ள பயங்கரவாதத் தடைச்சட்டம் தொடர்பான திருத்தத்தை நான் வாசித்துப் பார்த்தேன்.

அதில் எந்தவொரு பெரிய மாற்றத்தையும் காணவில்லை. ஒரே ஒரு விடயத்தில் மாத்திரம்தான். அதாவது, சந்தேகநபர் ஒருவரை மூன்று மாத காலம்... 02 பக்கம்

## எந்தத் தேர்தல் நடந்தாலும் ராஜபக்ஷ அரசு மண் கவ்வும்!

### சஜித் பிரேமதாச ஆரூடம்



எந்தத் தேர்தல் நடந்தாலும் ராஜபக்ஷ அரசு படுதோல்வியடைவது உறுதி என்று எதிர்க்கட்சித் தலைவரும் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவருமான சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.

மாகாண சபைத் தேர்தலை நடத்துவதில் ஏற்பட்டுள்ள சட்டச் சிக்கல் நிலை காரணமாக விரைவில் உள்ளூராட்சி சபைத் தேர்தலை நடத்துவது தொடர்பில் அரசு பரிசீலித்து... 02 பக்கம்

## விகிதாசார முறையில் மாகாணத் தேர்தல்!

### யோசனையை அரசுக்கு முன்வைக்க தமிழ் முற்போக்குக் கூட்டணி தீர்மானம்

மாகாண சபைத் தேர்தல் சட்டத்தை திருத்தி, பழைய விகிதாசார முறையில் மாகாண சபைத் தேர்தலை நடத்தும்படியான யோசனையை அரசுக்கு முன் வைக்க தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் எம்.பி. தெரிவித்துள்ளார். நீண்டநாட்களுக்குப் பிறகு நேற்று கூடிய தேர்தல் முறைமை சீர்திருத்தக் குழுவில் இத்தீர்மானம் எடுக்கப் பட்டதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். 02 பக்கம்

## சண்முகா கல்லூரி அபாயா சர்ச்சை; ஆசிரியை பஹ்மிதா - ஹக்கீம் சந்திப்பு



13 பக்கம்

## அறிகுறிகளற்ற நோயாளர்களுக்கு ஒருவார கால தனிமைப்படுத்தல்

### பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் ஹேமந்த ஹேரத்



கொவிட் தொற்றுக்கு உள்ளானோருக்கான தனிமைப்படுத்தல் காலம் 07 நாட்களாக குறைக்கப்பட்டுள்ளதாக பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் விசேட வைத்திய நிபுணர் ஹேமந்த ஹேரத் தெரிவித்துள்ளார்.

சுகாதார மேம்பாட்டு பணியகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் வைத்து அவர் இந்த விடயத்தை கூறியுள்ளார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,... 02 பக்கம்

### கமெண்ட் கந்தர்..



தேர்தலை நடத்துவோம் வெற்றியும் பெறுவோமெண்டா விளங்கேல்ல... கூட்டுறவு சங்க தேர்தலையா?

## சர்வதேசம் கூறும் வகையில் நீதிமன்றத்தை வழிநடத்தோம்

### நீதி அமைச்சர் அலி சப்ரி



யோ.தர்மராஜ்

கட்சி பேதமின்றி நீதிமன்றத்தின் சுயாதீனத்திற்காக நாங்கள் பாடுபட வேண்டும். ஆனால், நாட்டின் இறையாண்மையையும் சுயாதீனத்தையும் சவாலுக்குட்படுத்தும் வகையிலும் சர்வதேசம் கூறும் வகையிலும் நீதிமன்றத்தை வழிநடத்துவதற்கு நாங்கள் தயாரில்லை என நீதியமைச்சர் அலி சப்ரி தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற குற்றவியல்... 02 பக்கம்

## பயங்கரவாதத் தடைச் சட்ட திருத்தத்திற்கு அரசு முக்கியத்துவம் வழங்கவில்லை!

### நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன்



பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் திருத்தச் சட்டமூலத்திற்கு அரசாங்கம் முக்கியத்துவம் வழங்கவில்லை என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தை திருத்துவதற்கான சட்டமூலம் நாடாளுமன்றில் நேற்று வெளிவிவகார அமைச்சரினால் சமர்ப்பிக்கப்பட்டது. இதனையடுத்து, உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

02 பக்கம்

## ஹம்பாந்தோட்டை மேயர் பதவி இராஜினாமா!



ஹம்பாந்தோட்டை மேயர் எராஜ் பெர்னாண்டோ மேயர் பதவியிலிருந்து விலகுவதாக நேற்று அறிவித்துள்ளார்.

ஹம்பாந் தோட்டை மாநகர சபையின் கூட்டத்தின்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இந்தக் கூட்டத்தின்போது, ஹம்பாந்தோட்டை மாநகர சபையின் தலைவர் பதவியில் இருந்து விலகுவதாக எராஜ் பெர்னாண்டோ தெரிவித்தார்.

தனது முடிவை அறிவித்த பெர்னாண்டோ, தனிப்பட்ட காரணங்களுக்காக தனது பதவியை இராஜினாமா செய்ய தீர்மானித்துள்ளதாக தெரிவித்தார். 02 பக்கம்

## கைதிகளை வீட்டுக்காவலில் வைக்க திட்டம்; சிறைச்சாலைகள் திணைக்களம் யோசனை!

02 பக்கம்

## டிக்டொக் உட்பட சமூக வலைத்தளங்களை ஒழுங்குபடுத்த வேண்டும்

### அமைச்சர் நிமல்



சமூக ஊடகங்களை ஒழுங்குபடுத்த வேண்டிய தருணம் வந்துள்ளதாக தொழில் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.

குற்றவியல் நடைமுறை திருத்தச் சட்டமூலம் உட்பட பல சட்டமூலங்கள் மீதான விவாதத்தில்... 02 பக்கம்

### உஷ்



ஆளுங்கட்சியின் அரசியல் கூட்டமொன்று அநுராதபுரத்தில் நடந்ததல்லவா?

அந்த கூட்டத்திற்கு விவசாய அமைச்சர் மஹிந்தானந்த ஏன் செல்லவில்லை என்ற கேள்வி எழுந்துள்ளது.

விவசாயிகளின் எதிர்ப்பு வரும் என்ற காரணத்தினால் அவர் அநுராதபுரத்திற்கு செல்லவில்லையென உள்வீட்டு செய்திகள் சொல்கின்றன.

## எரிபொருள் பாவனையை குறைப்பதே அதன் விலை அதிகரிப்பின் நோக்கம்

### பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் தலைவர் சுமித் தெரிவிப்பு



02 பக்கம்

## பயங்கரவாதத் தடைச்சட்டத்தில் திருத்தங்கள் செய்வதற்கான சட்டமூலம் சமர்ப்பிப்பு

பயங்கரவாதத் தடைச் சட்டமூலத்தில் புதிய திருத்தங்களை செய்வதற்கான சட்டமூலமொன்றை வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் நேற்று நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்தார். ... 02 பக்கம்

## அரச கணக்குகள் குழுவின்...

ஒன்பதாவது நாடாளுமன்றத்தின் இரண்டாவது கூட்டத்தொடருக்கான அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவின் தலைவராக நாடாளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் திஸ்ஸ விதாரண தெரிவுசெய்யப்பட்டார்.

நாடாளுமன்ற வளாகத்தில் நேற்று (10) கூடிய அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவில் இராஜாங்க அமைச்சர் தயாசிறி ஜயசேகர, நாடாளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் திஸ்ஸ விதாரணவின் பெயரை முன்மொழிந்ததுடன், நாடாளுமன்ற உறுப்பினர் அஸோக அபேசிங்ஹ வழிமொழிந்தார்.

பேராசிரியர் திஸ்ஸ விதாரண ஒன்பதாவது நாடாளுமன்றத்தின் முதலாவது கூட்டத்தொடரில் அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவின் தலைவராகக் கடமையாற்றியிருந்தார்.

நாடாளுமன்றத்தின் 119 (1) நிலையியற் கட்டளைக்கு அமைய இந்தக் குழுவுக்கான உறுப்பினர்கள் அண்மையில் தெரிவுக்குழுவினால் நியமிக்கப்பட்டனர்.

இதன்படி, அமைச்சர் உதய கம்மன்பில, இராஜாங்க அமைச்சர்களான துமிந்த திசாநாயக்க, தயாசிறி ஜயசேகர, லசந்த அலகியவன்ன, வைத்திய கலாநிதி சுதர்ஷினி பெர்னாண்டோபுள்ளே, ஷெஹான் சேமசிங்க, பிரசன்ன ரணவீர, நாடாளுமன்ற உறுப்பினர்களான திஸ்ஸ அத்தநாயக்க, ஹரின் பெர்னாண்டோ, நிரோஷன் பெரேரா, அசோக அபேசிங்க, புத்திக பத்திரண, கே. காதர் மஸ்தான், மொஹமட் முஸம்மில், சிவஞானம் சிறீதரன், ஹேஷா விதானகே, வைத்தியகலாநிதி உபுல் கலப்பத்தி, பீ.வை.ஜீ. ரத்னசேகர, வீரசுமன வீரசிங்ஹ, பேராசிரியர் ரஞ்சித் பண்டார, கலாநிதி ஹரினி அமரசூரிய ஆகியோர் ஏனைய உறுப்பினர்களாவர்.

அரசாங்கச் செலவுகளை எதிர்நோக்குவதற்காக நாடாளுமன்றத்தால் வழங்கப்பட்ட ஒதுக்கீட்டுத் தொகைகளைக் காட்டுகின்ற கணக்குகளையும் குழு தனக்கெனக் கருதும் நாடாளுமன்றத்தின் முன்னிடப்படும் பிற கணக்குகளையும் கணக்காய்வாளர் தலைமையதிபதியின் உதவியுடன் பரிசோதனை செய்வது அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவின் கடமையாகும்.

நேற்றைய கூட்டத்தில் அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவின் உறுப்பினர்களான இராஜாங்க அமைச்சர்களான துமிந்த திசாநாயக்க, தயாசிறி ஜயசேகர, ஷெஹான் சேமசிங்க, பிரசன்ன ரணவீர, நாடாளுமன்ற உறுப்பினர்களான திஸ்ஸ அத்தநாயக்க, நிரோஷன் பெரேரா, அசோக அபேசிங்க, மொஹமட் முஸம்மில், சிவஞானம் சிறீதரன், வைத்திய கலாநிதி உபுல் கலப்பத்தி, பீ.வை.ஜீ. ரத்னசேக்கர, வீரசுமன வீரசிங்க, பேராசிரியர் ரஞ்சித் பண்டார ஆகியோர் கலந்துகொண்டனர்.

## விகிதாசார முறையில்...

இது தொடர்பில் மேலும் தெரிவிக்கையில்,

உள்ளூராட்சித் தேர்தல் முறையிலும் சில சீர்த்திருத்தங்களை செய்யவும் யோசனையை அரசுக்கு முன்வைக்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. மேலும், இத் தீர்மானம் குறித்து அடுத்த கூட்டம் எதிர்வரும் 22ஆம் திகதி நடைபெறும்போது, இவை பற்றி ஆய்வு செய்து முடிவுகள் எடுக்கப்படும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

## டிக்டொக் உட்பட...

நாடாளுமன்றத்தில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

சமூக ஊடகங்களால் இன்று ஏற்பட்டுள்ள கலாசார, தேசிய மற்றும் சமூகப் பேரழிவுகளை கவனத்தில் கொள்ள வேண்டும் என்றும் அவர் கூறினார்.

இன்று டிக்டொக் என்ற சமூக வலைத்தளம் இயங்கி வருவதாகவும் சமூக ஊடகங்களில் இவ்வாறு ஏற்படும் சம்பவங்கள் தொடர்பில் அரசாங்கம் கவனம் செலுத்த வேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

எனினும், சமூக ஊடகங்களை தடை செய்ய வேண்டும் என்றோ, இதனை ஒழுங்குபடுத்துவதற்கான வேலைத்திட்டம் வகுக்கப்பட வேண்டும் என்றோ அவர் கூறவில்லை.

## பயங்கரவாதத் தடைச் சட்ட...

பயங்கரவாதத் தடைச் சட்ட திருத்த சட்டமூல விவாதத்தில் அரசாங்கத் தரப்பின் உறுப்பினர்கள் மிகக்குறைவான எண்ணிக்கையில் கலந்து கொண்டுள்ளனர் என்றும் அவர் இதன்போது சுட்டிக்காட்டினார்.

மேலும், இந்த சட்ட மூலமானது நீதியமைச்சரால் முன்வைக்கப்பட்டிருக்க வேண்டும் என்றபோதிலும் வெளிவிவகார அமைச்சினால் முன்வைக்கப்பட்டுள்ளதாக தெரிவித்த சுமந்திரன், இதன்மூலம் இந்த சட்டம் குறித்து அரசாங்கம் முக்கியத்துவம் வழங்கவில்லை என்பது புலனாகிறது எனவும் குற்றம் சுமத்தினார்.

## தேர்தலை நடத்துவோம் ...

நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற பயங்கரவாதத் தடைச் சட்டத்திருத்த மசோதா மீதான விவாதத்தில் கலந்துகொண்டபோது, எதிர்க்கட்சி உறுப்பினர் ரோஹண பண்டார எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போதே இவ்வாறு தெரிவித்தார்.

எதிர்க்கட்சி உறுப்பினர் ரோஹண பண்டார,

உள்ளூராட்சி மன்றத்துக்கான காலம் நிறைவடைந்துள்ள நிலையில், வர்த்தமானி அறிவித்தல் ஊடாக அதன் கால எல்லையை ஒரு வருடத்துக்கு நீடித்துள்ளீர்கள். குறிப்பாக, கொரோனா தொற்று காரணமாக தேர்தலை நடத்த முடியாது என்றே ஆரம்பத்தில் அரசாங்கம் கூறியது.

ஆனால், நேற்றுமுன்தினம் (09) அநுராதபுரத்தில் அரசின் மாநாடு நடத்தப்பட்டது. ஆகவே, தற்போது கொரோனா தொற்று அச்சுறுத்தல் இல்லை என்பதால் தேர்தலை நடத்தலாம் என்றே நினைக்கின்றோம். எனவே, விரைவில் உள்ளூராட்சித் தேர்தலை நடத்துமாறு கேட்டுக் கொள்கின்றோம் - என்றார்.

இதற்கு பதிலளித்த அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ,

எவ்வேளையிலும் தேர்தலுக்கு நாங்கள் தயார். நீங்கள் கேட்பதால் நாங்கள் தேர்தலை நடத்துவோம். எதற்கும் தயாராக இருங்கள். உரிய நேரத்தில் தேர்தல் நடத்தப்படும். தேர்தல் நடத்தப்படுவது மட்டுமல்லாது, ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன வரலாற்று வெற்றியையும் பெறுவோம் - என்றார்.

## கைதிகளை வீட்டுக்காவலில்...

சிறிய குற்றங்களுக்காக கைதிகளை சிறையில் அடைக்காமல் வீட்டுக்காவலில் வைக்கும் முறையை நடைமுறைப்படுத்துவது குறித்து சிறைச்சாலைகள் திணைக்களம் கவனம் செலுத்தி வருகிறது.

சிறைச்சாலைகளில் கூட்ட நெரிசலைக் குறைப்பதும், அவர்களுக்காக அரசாங்கம் செலவிடும் பெரும் தொகையைச் சேமிப்பதும் இந்தத் திட்டத்தின் முக்கிய நோக்கமாகும்.

இந்த ஏற்பாட்டின் கீழ், வீட்டுக் காவலில் உள்ள நபர்கள் அங்கீகரிக்கப்பட்ட நடவடிக்கைகளுக்காக மட்டுமே வீட்டை விட்டு வெளியேற அனுமதிக்கப்படுவார்கள்.

வேலை வாய்ப்புகள் மற்றும் சுகாதாரத் தேவைகள் உள்ளிட்ட அத்தியாவசிய விடயங்களுக்கு மட்டுமே தங்கள் வீட்டை விட்டு வெளியேற அனுமதிக்கப்படுவார்கள்.

அவர்களின் பயணம் உள்ளிட்ட நடவடிக்கைகள் சிறை அதிகாரிகளால் கண்காணிக்கப்பட்டு, வீட்டுக் காவலில் உள்ளவர்களின் உடலில் எங்காவது ஒரு மின்னணு சாதனம் பொருத்தப்பட்டு, அத்தகைய கண்காணிப்பை எளிதாக்குகிறது.

சிறைச்சாலைகள் திணைக்களத்தினால் நடைமுறைப்படுத்தப்பட்ட ஐந்தாண்டு சீர்த்திருத்த வேலைத்திட்டத்தின்கீழ் வீட்டுக் காவலில் வைக்கும்முறை நடைமுறைப்படுத்தப்படுகிறது.

சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம் துஷார உபுல்தெனிய, நீதியமைச்சர் அலி சப்ரியிடம் இந்த திட்ட முன்மொழிவை கையளித்ததாக சிறைச்சாலைகள் ஊடகப் பேச்சாளர் ஆணையாளர் சந்தன ஏக்கநாயக்க தெரிவித்தார்.

சிறைச்சாலையில் ஏற்பட்டுள்ள இடநெருக்கடிக்கு தீர்வாக சில நாடுகள் இம்முறையை நடைமுறைப்படுத்தி வருவதாக பேச்சாளர் மேலும் தெரிவித்தார்.

## ஹம்பாந்தோட்டை மேயர்...

2014ஆம் ஆண்டு ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்த குழுவொன்று, மஹிந்த ராஜபக்ஷ சர்வதேச விமான நிலையத்தை பார்வையிட சென்றிருந்த வேளையில், எராஜ் பெர்னாண்டோ கைத்துப்பாக்கியை காண்பித்து அக்குழுவினர் அச்சுறுத்தியிருந்தார்.

அதன்பின்னர் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின்போது, தான் ஏந்திவந்தது கைத்துப்பாக்கி அல்ல, விளையாட்டுத் துப்பாக்கியென அவர் தெரிவித்திருந்தார்.

## பயங்கரவாதத்...

இந்த சட்ட மூலம் பின்னர் விவாதிக்கப்பட உள்ளது. சட்டமூலத்தை அமைச்சர் சமர்ப்பித்த பின்னர் உரையாற்றிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன், தனியான சட்டமூலமொன்றைக் கொண்டுவருவதாகக் கூறிய நீதியமைச்சர் ஏன் திருத்தச் சட்டமூலத்தை முன்வைத்தார் என கேள்வி எழுப்பினார்.

இச்சட்டமூலம் நிலையியற் கட்டளைகளுக்கு அமையவே முன்வைக்கப்பட்டதாக பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் உரையாற்றினார்.

இந்த வரைபை யாராவது எதிர்த்தால் உயர் நீதிமன்றம் செல்லலாம் என்றும் அவர் கூறினார்.

இதன்போது சுமந்திரனுக்கும் ஆளும் கட்சி உறுப்பினர்களுக்கும் இடையில் காரசாரமான விவாதம் இடம்பெற்றது.

## எந்தத் தேர்தல் நடந்தாலும்...

வருகின்றது என வெளியாகியுள்ள செய்தி குறித்து ஊடகங்களிடம் கருத்துத் தெரிவிக்கும் போதே எதிர்க்கட்சித் தலைவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். இது தொடர்பில் மேலும் தெரிவித்ததாவது,

"எந்தத் தேர்தலையும் எந்த வேளையிலும் எதிர்கொள்ள ஐக்கிய மக்கள் சக்தி தயாராகவுள்ளது. ஆனால், ராஜபக்ஷ அரசுக்கு தேர்தலை எதிர்கொள்ளும் திராணி இல்லை. அதனால்தான் உள்ளூராட்சி சபைகளின் பதவிக் காலத்தை ஓராண்டுக்கு இந்த அரசு நீடித்தது.

இப்போது விரைவில் உள்ளூராட்சி சபைத் தேர்தலை நடத்துவது தொடர்பில் அரசு பரிசீலித்து வருகின்றது என வெளியாகியுள்ள செய்தி வேடிக்கையாகவுள்ளது.

மாகாண சபைத் தேர்தலை நடத்துவதில் எந்தச் சட்டச் சிக்கலும் வராது. ஏனெனில், தேர்தலை நடத்துவதற்கான சட்டமூலத்தை நாடாளுமன்றத்தில் நிறைவேற்றிவிட்டு மாகாண சபைத் தேர்தலை இந்த அரசு நடத்த முடியும்.

தோல்விப் பயம் காரணமாகவே மாகாண சபைத் தேர்தலை நடத்த இந்த அரசு பின்னடிக்கின்றது. தேர்தல் பயம் காரணமாகவே உள்ளூராட்சி சபைகளின் பதவிக் காலத்தையும் இந்த அரசு ஓராண்டுக்கு நீடித்தது எனவும் இதன்போது கருத்து தெரிவித்துள்ளார்.

# தாதியர் சங்கத்தின் போராட்டத்துக்கு நீதிமன்றம் இடைக்காலத் தடை

அரச தாதியர் சங்கம் மேற்கொண்டுள்ள பணிப்பகிஷ்கரிப்பை தொடர்ந்து முன்னெடுப்பதை தடுக்கும் வகையில் நீதிமன்றம் நேற்று இடைக்கால தடையுத்தரவு பிறப்பித்துள்ளது.

அரச தாதியர் சங்கம் மற்றும் அதன் தலைவர் சமன் ரத்னபிரிய ஆகியோருக்கு எதிராக சட்டமா அதிபர், மேற்படி சங்கத்தின் தொழிற்சங்க நடவடிக்கையை உடனடியாக இடைநிறுத்துமாறு நீதிமன்றத்திடம் உத்தரவு பிறப்பிக்கக் கோரி வழக்குத் தாக்கல் செய்திருந்தார்.

சட்டமாஅதிபர் திணைக்களம் நீதிமன்றத்தில் முன்வைத்த விடயங்களை ஆராய்ந்த போதே நீதவான் இந்த உத்தரவை பிறப்பித்துள்ளார்.

இந்த தொழிற்சங்க நடவடிக்கை காரணமாக வைத்தியசாலைகளில் நோயாளர் பராமரிப்பு சேவைகள் பாதிக்கப்பட்டுள்ளதாக சட்டமா அதிபர் சார்பில் மேலதிக சொலிசிஸ்டர் ஜெனரல், ஜனாதிபதி சட்டத்தரணி விக்கும் டி ஆப்ரூ நீதிமன்றத்தில் சுட்டிக்காட்டினார்.

இதனையடுத்து, கொழும்பு நீதவான் அருண அளுத்கே இடைக்கால தடையுத்தரவை பிறப்பித்துள்ளார். தாதியர்கள், நிறைவுகாண் மருத்துவ சேவைகள், மேலதிக வைத்திய சேவை உள்ளிட்ட 18 சுகாதார தொழிற்சங்கங்கள் இணைந்து ஆரம்பித்துள்ள பணிப்பகிஷ்கரிப்பு நான்காவது நாளாக நேற்றும் தொடர்ந்தது.

ஆசிரியர்களின் சம்பள முரண்பாடு நீக்கப்பட்டதன் பின்னர் சுகாதார ஊழியர்களின் சம்பளத்தில் பாரிய முரண்பாடு உருவாகியுள்ளதாக சுகாதார தொழிற்சங்கங்கள் கூறுகின்றன.

சம்பள முரண்பாடு நீக்கப்பட்டதன் பின்னர் பயிற்சிபெறாத ஆசிரியர் ஒருவருக்கு கிடைக்கும் சம்பளம் தொழில்சார் பட்டப்படிப்பை பூர்த்தி செய்த தாதியரின் சம்பளத்தை விடவும் அதிகரித்திருக்கும் என அவர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

எனவே, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு தயாரித்துள்ள சம்பளம் தொடர்பிலான வரைபை ஏற்றுக்கொள்ளுமாறு தொழிற்சங்கங்கள் கோரிக்கை விடுத்துள்ளன.

## அறிகுறிகளற்ற...

நாட்டில் தற்போது எவ்வித தொற்று அறிகுறிகளும் அற்ற, உடலில் மிகக் குறைவான வைரஸ் காணப்படும் தொற்றாளர்களே பெருமளவில் காணப்படுகின்றனர்.

எனவே தான் கொவிட் தொற்றுக்குள்ளானோருக்கான தனிமைப்படுத்தல் காலம் 7 நாட்களாக குறைக்கப்பட்டுள்ளது.

மேலும் தொற்றுக்குள்ளானோருடன் தொடர்புகளைப் பேணியவர்கள் முழுமையாக தடுப்பூசியைப் பெற்றிருப்பார்களாயின் அவர்கள் தனிமைப்படுத்தலுக்கு உட்படத் தேவையில்லை.

கொவிட் தொற்று முதன் முதலாக இனங்காணப்பட்டபோது அது எத்தனை நாட்களுக்கு மனித உடலில் தங்கும் என்று தெரியாது. எனவே தான் 14 நாட்கள் தனிமைப்படுத்தல் காலமாக குறிப்பிடப்பட்டது.

எனினும், தற்போது ஓமிக்ரொன் பரவல் காணப்படுகின்றபோதிலும், தொற்றாளர்களிடம் வைரஸின் வீதம் மிகக் குறைவாகவே காணப்படுகிறது.

இலங்கையில் மாத்திரமின்றி சர்வதேச மட்டத்தில் பெற்றுக் கொள்ளப்பட்ட ஆய்வு தரவுகளின் அடிப்படையில் தற்போது 7 நாட்கள் தனிமைப்படுத்தல் காலம் போதுமானதாக கண்டறியப்பட்டுள்ளது.

அத்தோடு கொவிட் தொற்றுக்குள்ளானோருடன் தொடர்புகளைப் பேணியவர்கள் முழுமையாக தடுப்பூசியைப் பெற்றிருந்தால் தனிமைப்படுத்தலுக்கு உட்படத் தேவையில்லை.

காரணம் அவர்கள் கொவிட் தொற்றுக்கு உள்ளாகும் வீதமும், ஏனையோருக்கு தொற்றினை பரப்பும் வீதமும் மிகக் குறைவாகும்.

எவ்வாறிருப்பினும், தொற்றுறுதியானவர்கள் 07 நாட்கள் தனிமைப்படுத்தல் இன்றி வெளியிடங்களுக்கு செல்ல முடியும் என்று கூறப்படவில்லை எனவும் இதன்போது தெரிவித்துள்ளார்.

## எரிபொருள் பாவனையை...

**யோ.தர்மராஜ்**

எரிபொருளின் விலையை அதிகரித்து எரிபொருள் பாவனையை குறைப்பதே எங்களுடைய பிரதான நோக்கம். எனினும், அந்த நோக்கம் நிறைவேறவில்லை என இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்தின் தலைவர் சுமித் விஜேசிங்க தெரிவித்துள்ளார்.

மக்கள் தாங்களாகவே எரிபொருள் பாவனையை குறைத்துக் கொள்ள வேண்டுமெனவும் அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

எரிபொருள் விலையை அதிகரிப்பது குறித்து ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

எரிபொருள் விலையை அதிகரிப்பதன் முக்கிய நோக்கம் எரிபொருள் விநியோகத்தை குறைப்பதாகும். ஆனால் கடந்த முறை விலை உயர்வின்போது எங்களுடைய அந்த நோக்கம் நிறைவேறவில்லை.

எரிபொருள் விநியோகத்தை கட்டுப்படுத்தும் நிரந்தர வேலைத்திட்டங்கள் எம்மிடமில்லை. சுயமாகவே எரிபொருள் பாவனை குறைக்கப்பட வேண்டும். சட்டங்களை கொண்டுவந்து எங்களால் எரிபொருள் பாவனையை குறைக்க முடியாது. மின்சாரப் பாவனையை குறைப்பதற்கு பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்துவது சிறந்தது. இதனூடாக, எரிபொருளும் சேமிக்கப்படும் - என்றார்.

## சர்வதேசம் கூறும்...

நடவடிக்கை முறை சட்டக்கோவை திருத்தச்சட்ட மூலத்தின் மீதான விவாதத்தில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

ஜனநாயகத்தை உறுதிபடுத்த வேண்டுமாக இருந்தால் ஜனநாயகத்தின் மூன்று தூண்களான ஜனாதிபதி, நாடாளுமன்றம் மற்றும் நீதிமன்றத்தை சமமாக பலப்படுத்த வேண்டும் என்பன விவாதங்களின்றி அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டிய விடயமாகும்.

நீதிமன்றம் தொடர்பாக நாங்கள் கூறியதை திரிபுப்படுத்தி பேசிய, எதிர்க்கட்சியின் பிரதம கொறடா, நாங்கள் முன்வைத்திருப்பது சில்லறை சட்ட மூலம் எனக் கூறினார். இது சில்லறை சட்ட மூலமல்ல. மாறாக, குற்றவியல் நடவடிக்கை முறை சட்டக்கோவையை முற்றாக மாற்றும் சட்டமூலமாகும்.

எதிர்க்கட்சியினர் நீதிமன்றத்தின் சுயாதீனம் தொடர்பாக பேசினாலும், அவர்களுக்கு ஏதேனும் குற்றம் நடந்தால் அவர்கள் நீதிமன்றத்தையே நாடுகின்றனர். போராட்டங்கள், பேரணிகளை தடை செய்தால் நீதிமன்றத்திற்கே செல்கின்றனர். சாட்சியமளிக்க அழைத்தாலும் அவர்களுடைய கட்சிக்குள் ஏதேனும் பிரச்சினைகள் ஏற்பட்டாலும் நீதிமன்றத்தையே நாடுகின்றனர்.

எனவே, கட்சி பேதமின்றி நீதிமன்றத்தின் சுயாதீனத்துக்காக நாங்கள் பாடுபட வேண்டும். ஆனால், நாட்டின் இறையாண்மையையும் சுயாதீனத்தையும் சவாலுக்குட்படுத்தும் வகையிலும் சர்வதேசங்கள் கூறும் வகையில் நீதிமன்றத்தை வழிநடத்துவதற்கு நாங்கள் தயாரில்லை. நாட்டின் அரசியலமைப்பை பாதுகாக்கும் வகையிலேயே எங்களுடைய நீதிமன்றங்களை வழிநடத்துவோம்.

குற்றவியல் நடவடிக்கை முறை சட்டக்கோவையில் சில சில திருத்தங்களை கொண்டு வருவதாகக் கூறினால், அது போதுமானதல்ல என எதிர்க்கட்சியினர் கூறுகின்றனர். ஆனால், ஆட்சியில் இருந்த உங்களால் இதனைக் கூட செய்ய முடியவில்லை.

சர்வதேசத்தை திருப்திப்படுத்துவதற்காக நாங்கள் இதனை செய்யவில்லை. மாறாக, தனிநபரின் சுதந்திரம் மற்றும் தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்காகவே சட்டத்திருத்தங்களை கொண்டுவருகின்றோம். இதுவே, எங்களுடைய பொறுப்பாகும். குற்றம் செய்யப்பட்டவரை குற்றவாளியாக ஏற்றுக்கொள்ளும் வரை தடுத்து வைத்திருப்பது ஜனநாயக சமூகம் ஏற்றுக்கொள்ள முடியாத விடயமாகும். எனவே, தனி நபரின் சுதந்திரத்தையும் பாதுகாப்பையும் உறுதிப்படுத்தவே இதனை கொண்டுவந்துள்ளோம். இதனை நகைச்சுவையாக்குவதற்கு இடமளிக்க முடியாது - என்றார்.

## ஞானசார தேரரால்...

என்ற அடிப்படையில், 18 மாத காலம் தடுத்து வைப்பதற்கு பாதுகாப்பு அமைச்சருக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தை 12 மாதங்களாக குறைத்துள்ளனர். இது மாத்திரம்தான் நாம் இங்கே காண்கின்ற மாற்றமாகும்.

ஆனால், அதன் பின்னர், பிரிவு 07இன் கீழ் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருப்பவர்களாக இருந்தால், வழக்கு முடியும்வரை அவர்களை சிறையில் வைக்க முடியும். எந்தவொரு நீதிமன்றத்துக்கும் அதன் பிறகு பிணை வழங்கும் அதிகாரம் கிடையாது. அவ்வாறான பாணியிலேதான் இந்தத் திருத்தம் இருக்கின்றது.

எனவே, சுமார் 18 அல்லது 20 வருடங்களாக தமிழ் இளைஞர்கள் இந்தப் பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு சிறையில் வாடுகின்றனர். அவர்கள் இதுவரை குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்படாமல் அல்லது வழக்கு முடியாமல் சிறையிலே வாடுகின்றனர். நான் சிறையில் இருந்தபோது இதனைக் கண்ணால் கண்டேன். ஆயுதம் ஏந்திய போராளிகள் பலர் மன்னிப்பு வழங்கப்பட்டு, அவர்கள் விடுதலை செய்யப்பட்ட பின்னரும் சமூகவலைத்தளங்களில் சில விடயங்களை பகிர்ந்தார்கள் என்ற குற்றச்சாட்டில் மீண்டும் சிறைவைக்கப்பட்டுள்ளனர். இவர்கள் பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு, வருடக் கணக்கில் சிறையில் உள்ளனர். அவ்வாறானவர்களுக்கு இந்த திருத்தச் சட்டத்தில் எந்தவிதமான நிவாரணங்களும் வழங்கப்படவில்லை.

சஹ்ரான் என்ற நயவஞ்சகன் செய்த பாதகச் செயலினால், முழு முஸ்லிம் சமூகமும் தலைகுனிந்து நிற்கின்றது. பொருளாதார ரீதியிலும் பல்வேறுபட்ட விவகாரங்களிலும் ஏகப்பட்ட பிரச்சினைகளுக்கு முகங்கொடுத்து வருகின்றது.

இருபது வருடங்களுக்கு மேலாக நாடாளுமன்றத்தை தொடர்ச்சியாக பிரதிநிதித்துவம் செய்யும் என்னையும், எந்தவிதமான காரணமும் இன்றி பல மாத காலம் சிறையில் அடைத்தனர். குண்டுத் தாக்குதலை காரணமாக வைத்து இந்த நடவடிக்கையை எடுத்தனர். எனவே, இந்தச் சட்டத்துக்கு எல்லோருமே பலியாகி வருகின்றனர். பாதுகாப்பு அமைச்சர் நினைத்தால் கையொப்பத்தை இட்டு, சந்தேகம் என்று சிறையில் வைக்க முடியும் என்ற இந்தச் சட்டம் நாட்டுக்கு ஒரு சாபக்கேடு.

சிரேஷ்ட சட்டத்தரணியான ஹிஜாஸ் ஹிஸ்புல்லாஹ் நேற்று(நேற்று முன்தினம்) பிணையில் விடுதலை செய்யப்பட்டார். அவரைக் குற்றவாளியாக ஆக்க வேண்டும் என்பதற்காக, சகீன் மௌலவி என்ற புத்தளம் கரம்பையை சேர்ந்த ஒருவரையும், கனமூலையைச் சேர்ந்த லுக்மான் மௌலவி மற்றும் வசீர் மௌலவி என்பவர்களையும் கைது செய்தனர். இவர்கள் புத்தளம் கரத்தீவில் உள்ள அரபுக் கல்லூரி ஒன்றில் கற்பித்து வந்தவர்கள். சட்டத்தரணி ஹிஜாஸ் ஹிஸ்புல்லா 2018இல் அங்கு சென்று மார்க்கப் பிரசாரம் செய்ததாக மாணவர் ஒருவர் சாட்சியளித்தார் என்ற குற்றச்சாட்டின் அடிப்படையிலேயே, இவர்கள் அனைவரையும் கைது செய்து ஒரு வருடத்துக்கு மேலாக இன்னுமே வைத்திருக்கின்றனர். அவர்கள் சிறையில் இருந்தபோது, "ஹிஜாஸ் ஹிஸ்புல்லா, இந்த அரபுக் கல்லூரிக்கு வருகை தந்திருந்தார்" என்று சொன்னால் உங்களை விடுதலை செய்வோம். இல்லாவிட்டால் 10 அல்லது 15 வருடங்கள் நீங்கள் சிறையிலே வாட வேண்டி நேரிடும் என்று, அங்கு வந்திருந்த சி.ஐ.டி உத்தியோகத்தர்கள் பலவந்தப்படுத்திய போதும், அவர்கள் மறுப்புத் தெரிவித்து, ஹிஜாஸ் ஹிஸ்புல்லாவை கண்ணால் காணவே இல்லை என்று கூறியிருந்தார்கள்.

அண்மையில் சில பெண்கள் கைது செய்யப்பட்டனர். ஒருவர் நான்கு மாத கர்ப்பிணித் தாய். மற்றையவர் நான்கு மாதக் குழந்தை உள்ள தாய். அத்துடன், ஒரே குடும்பத்தில் நான்கு பிள்ளைகள் இவ்வாறு அநியாயமாகக் கைது செய்து, அவர்களிடமிருந்து பொய்யான வாக்குமூலங்களை பெற முயற்சிக்கின்றனர். ஹிஜாஸ் ஹிஸ்புல்லாவை பழிவாங்க வேண்டும் என்பதற்காக இவ்வாறான அப்பாவிகளை கைது செய்துள்ளனர். இவர்கள் வழக்கு பேசுவதற்கு கூட எந்தவிதமான வழியும் இல்லாத ஏழைகள்.

இவ்வாறு இந்த குண்டு வெடிப்புக்கு பின்னர் 300க்கும் மேற்பட்டவர்கள் கைது செய்யப்பட்டனர். 25 பேர் அளவிலேயே குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. ஏனையவர்கள் சிறையிலே வாடுகின்றனர்.

"இவர்கள் குற்றவாளிகளாக இருந்தால் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யுங்கள்" என சட்டமா அதிபர் திணைக்களத்திடம் வேண்டுகோள் விடுக்கின்றோம். வெறுமனே, இவர்களை சிறையில் அடைத்து உங்கள் சொந்த இருப்புகளை பாதுகாக்க நினைக்காதீர்கள்.

குற்றஞ்செய்தவர்கள் எவராயினும் தண்டிக்கப்பட வேண்டும். அதற்காக அப்பாவிகளை, அதிகாரங்களை பயன்படுத்தி அநியாயமாக பழிவாங்குவது எந்த வகையிலும் ஏற்றுக்கொள்ள முடியாது.

பயங்கரவாத தடைச் சட்டத்திருத்தம் என்ற போர்வையில் ஒன்றைக் கொண்டு வந்து, ஐரோப்பிய ஒன்றியத்தை அல்லது சர்வதேசத்தை ஏமாற்றலாம் என்று நினைக்காமல், சர்வதேச சட்டங்களையும் நியமங்களையும் மதித்து, மக்கள் ஏற்றுக்கொள்ளும் முறையில் அவர்களைப் பாதுகாக்க, சட்ட நிவாரணம் வழங்க நடவடிக்கை எடுங்கள்.

அசாத் சாலியின் கைதும் விடுதலையும் இதற்கு நல்ல சான்றாக இருக்கின்றது. இந்தச் சட்டத்தினால் நானும் பாதிக்கப்பட்டிருக்கின்றேன். எனது சகோதரர் உட்பட எந்தவிதமான குற்றமும் செய்யாத அப்பாவி தமிழ், முஸ்லிம் இளைஞர்கள் பாதிக்கப்பட்டனர். இன்னும் பலர் பலவருடங்களாக சிறையில் வாடுகின்றனர். இவர்களை நிபந்தனையின் அடிப்படையில் விடுதலை செய்து குற்றப்பத்திரிகையை தாக்கல் செய்யுங்கள்.

அத்துடன், "ஒரே நாடு, ஒரே சட்டம்" என்ற செயலணிக்காக நியமிக்கப்பட்டுள்ள தலைவரை தயவு செய்து மாற்றுங்கள். அவரை வைத்து எதிர்காலத்தில் அரசியல் செய்யலாம் என நீங்கள் நினைத்தால். அது ஒரு பெரிய ஆபத்தை உருவாக்கும். அத்துடன், சிறுபான்மையை அச்சப்படுத்துவதற்காகவும், பெரும்பான்மையை சந்தோஷப்படுத்துவதற்காகவும் இவ்வாறான மோசமான கைங்கரியங்களை செய்ய வேண்டாம் எனக் கோருகின்றேன். மேலும், "ஒரே நாடு, ஒரே சட்டம்" என்ற செயலணி நாட்டுக்கு அவசியம் என நீங்கள் கருதினால், நல்லதொரு தலைவரை நியமித்து, எல்லா இனங்களையும் பாரபட்சமின்றி நடத்துவதற்கான செயன்முறைகளை மேற்கொள்ளுங்கள். அதற்காக நாங்களும் ஒத்துழைப்பு வழங்க தயாராக உள்ளோம்" என்று கூறினார்.

# இன்றைய ராசி பலன்

11.02.2022 வெள்ளிக்கிழமை தை 29

**ஜோதிடர் நற்பவி**

தொலைபேசி இலக்கம் : 0715346213/0714037141

**நட்சத்திரம்: மிருகசீரிடம்**
அ.கா 3.32 - 12.02. 2022 காலை 6.38 வரை

**யோகம்: வைதிருதி**
இரவு 7.50 வரை

**விஷ்கம்பம்**
இரவு7.50 -12.02. 2022 இரவு 8.41 வரை

**திதி: பூர்வ பட்ச தசமி**
பிற்பகல் 1.52 வரை

**பூர்வ பட்ச ஏகாதசி**
பி.ப 1.52 - 12.02. 2022 மாலை 4.27 வரை

**முற்கரணம்: கரஜம்**
அ.கா 12.30 - பி.ப 1.52

**பிற்கரணம்: வணிஜம்**
பி.ப 1.52 - 12.02. 2022 அதிகாலை 3.11 வரை

**சுப நேரங்கள்**
காலை 6.28 - 7.56
மாலை 5.20 - 6.21

**அசுப நேரங்கள்**

**ராகு காலம்**
காலை 10.56 - பி.ப 12.25

**குளிகை காலம்**
காலை 7.57 - 9.27

**எமகண்ட காலம்**
மாலை 3.23 - 4.52

**துர் முகூர்த்தம்**
காலை 8.51 - 9.39
பிற்பகல் 12.49 - 1.36

லோகநாயகி ஸஹஸ்ர சீர்ஷ வதனா அன்னை ப்ரத்யங்கிராவின் கருணையாலே நற்பவி நற்பவி நற்பவி

**மேஷம்:** புதிய தொழில் தொடங்க இன்று சாதகமான நாள் இல்லை. தொழில் பயணம் ஏற்படலாம். பணியிடங்களில் சக ஊழியர்களால் சிறிய பிரச்சினைகள் உண்டாகலாம். சமூக மதிப்பு மேம்படும்.

**ரிஷபம்:** புதிய பணிகள் கிடைக்கப் பெறலாம். உங்கள் கடுமையான உழைப்பிற்கு பலன் கிடைக்கலாம். சமூகத்தில் பிரபலமானவர்களிடம் உங்கள் செல்வாக்கு மேம்படலாம். மறைந்திருக்கும் திறமைகளை வளர்ப்பதோடு, சிறு தவறுகளையும் திருத்திக் கொள்வது நன்மை பயக்கலாம்.

**மிதுனம்:** வணிகத்தில் எதிர்பார்த்த இலாபங்கள் கிடைக்காமல், புதிய மாற்றங்களுக்கான முயற்சி ஏற்படலாம். திருமணத்துக்கு புறம்பான விடயங்களில் ஒதுங்கியிருப்பது நன்மை. சில மனக் கவலை தோன்றலாம். யாரையும் குறைத்து மதிப்பிட வேண்டாம். இறைவணக்கம் தேவை.

**கடகம்:** இன்று கிடைக்கப்பெறும் சுபச் செய்திகளால் உங்கள் தன்னம்பிக்கை மேம்படும். புதிய சாத்தியமான வணிக விற்பனை ஒப்பந்தங்கள் கிடைக்கலாம். ஆன்மீக நிகழ்வுகளில் பங்கேற்பால் மன அமைதி கிடைக்கலாம். சில தடைப்பட்ட செயல்களின் நிறைவேற்றத்திலும் மன மகிழ்ச்சி ஏற்படலாம்.

**சிம்மம்:** திருமணத்துக்கு காத்திருப்போருக்கு திருமண சுபங்கள் ஏற்படலாம். பிள்ளைகளுடன் இனிய பயணங்கள் உண்டாகலாம். காதலில் மகிழ்ச்சி நிலவும். வருவாய்க்கான நல்வழி உண்டாகலாம்.

**கன்னி:** உணவகங்கள் சம்பந்தப்பட்ட தொழில் இலாபங்கள் அதிகரிக்கலாம். உயர்கல்வி பெறும் மாணவர்களுக்கு சிறந்த நன்மை கிடைக்கலாம். எதிர்மறை எண்ணங்கள் நீங்கத் தொடங்கும். புதிய தொழில் அல்லது வேலை தொடங்க உங்கள் நலம் விரும்புபவர்களின் ஆலோசனை நன்மை தரும்.

**துலாம்:** பணம் சம்பந்தப்பட்ட விடயங்களில் கவனம் தேவைப்படலாம். உங்களை சுற்றியுள்ள சிலரிடமும் கவனம் தேவைப்படலாம். தேவையற்ற செலவுகளை குறைப்பது நல்லது. காதல் உறவில் நம்பிக்கை ஒளி தோன்றலாம்.
**சந்திராஷ்டமம்: விசாகம் நட்சத்திரம் பாதம் 1/2/3க்கு மாலை 5.06 வரை**

**விருச்சிகம்:** நண்பர்களின் உதவியால் நிதி நெருக்கடி நீங்கலாம். மின் சாதனங்களை பயன்படுத்துவதில் கவனம் தேவைப்படலாம். மகிழ்ச்சியை தந்த சில விடயங்களில் கவலை தோன்றலாம். அரசியல் சம்பந்தப்பட்டவர்களின் புகழ் மேம்படும்.
**சந்திராஷ்டமம்: விசாகம் நட்சத்திரம் பாதம் 4க்கு மாலை 5.06 - இரவு 11.52 அனுஷம் நட்சத்திரத்துக்கு இரவு 11.52 - 13.02.2022 அதிகாலை 2.47 வரை கேட்டை நட்சத்திரத்துக்கு 13.02.2022 அ.கா 2.47 - 14.02.2022 அ.கா 5.19**

**தனுசு:** திருமணப் பேச்சு விடயங்களில் முன்னேற்றம் உண்டாகலாம். பங்குச்சந்தை இலாபங்கள் அதிகரிக்கலாம். பணியிட சூழ்நிலை சாதகமாக இருந்தாலும் உங்கள் பணியை மற்றவர்கள் செய்ய கட்டாயப்படுத்துவதை தவிர்ப்பது நல்லது. புதிய வருவாய் கிடைக்கலாம்.

**மகரம்:** வாகனம் செலுத்துவதில் சிறிய கவனம் தேவைப்படலாம். புகையிலை சம்பந்தப்பட்ட பயன்பாட்டை தவிர்ப்பது உடல்நலத்திற்கு நல்லது. வேலைத்தளங்களில் வணிக இலாபங்கள் மேம்படும். பணித்திறனால் மேலதிகாரிகளுக்கு மகிழ்ச்சி உண்டாகலாம்.

**கும்பம்:** நிர்வாகப் பணிகளில் இருப்பவர்களுக்கு நல்ல நாளாக அமையலாம். சிலரின் மீது வைத்துள்ள நம்பிக்கையில் கவனம் தேவைப்படலாம். சுய மரியாதை குறையலாம். தேவையற்ற விடயங்களில் காலத்தை வீணாக்காமல் ஒதுங்கி இருப்பது நன்மை.

**மீனம்:** சுற்றுலாத்துறை அல்லது தொழில் சம்பந்தப்பட்டவர்களுக்கு நன்மை அதிகரிக்கலாம். தொழில் விரிவாக்க முயற்சி உண்டாகலாம். காதலில் மகிழ்ச்சியான நாளாக அமையலாம். வேலைத்தளங்களில் புதிய நண்பர்கள் கிடைக்கப் பெறலாம்.

# அரசாங்கப் பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழுவின் தலைவராக பேராசிரியர் சரித ஹேரத் மீண்டும் தெரிவு




ஒன்பதாவது நாடாளுமன்றத்தின் இரண்டாவது கூட்டத்தொடருக்கான அரசாங்கப் பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழுவின் தலைவராக நாடாளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் சரித ஹேரத் மீண்டும் தெரிவுசெய்யப்பட்டார். நாடாளுமன்ற வளாகத்தில் நேற்று (10) கூடிய அரசாங்கப் பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழுவில் அமைச்சர் கலாநிதி சரத் வீரசேகர பேராசிரியர் சரித ஹேரத்தின் பெயரை முன்மொழிந்ததுடன், நாடாளுமன்ற உறுப்பினர் சுசில் பிரேமஜயந்த இதனை வழிமொழிந்தார்.பேராசிரியர் சரித ஹேரத் ஒன்பதாவது நாடாளுமன்றத்தின் முதலாவது கூட்டத்தொடரில் அரசாங்கப் பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழுவில் தலைவராகக் கடமையாற்றியிருந்தார்.

நாடாளுமன்றத்தின் 120 (1) நிலையியற் கட்டளைக்கு அமைய இந்தக் குழுவுக்கான உறுப்பினர்கள் அண்மையில் தெரிவுக்குழுவினால் நியமிக்கப்பட்டனர். இதன்படி, அமைச்சர்களான மஹிந்த அமரவீர, மஹிந்தானந்த அளுத்கமகே, ரோஹித அபேகுணவர்தன, கலாநிதி சரத் வீரசேகர, இராஜாங்க அமைச்சர்களான ஜயந்த சமரவீர, டி.வீ. சானக, இந்திக அனுருத்த ஹேரத், கலாநிதி நாலக கொடஹேவா நாடாளுமன்ற உறுப்பினர்களான ரவூப் ஹக்கீம், கலாநிதி சுசில் பிரேமஜயந்த, அநுரகுமார திசாநாயக்க, பாட்டளி சம்பிக்க ரணவக்க, ஜகத் புஷ்பகுமார, கலாநிதி ஹர்ஷ டி சில்வா, இரான் விக்கிரமரத்ன, நளீன் பண்டார ஜயமஹ, எஸ்.எம். மரிக்கார், பிரேம்நாத் சி. தொலவத்த, சாணக்கியன் ராஜபுத்திரன் இராசமாணிக்கம், மதுர விதானகே, சாகர காரியவசம், பேராசிரியர் சரித்த ஹேரத் ஆகியோர் இக்குழுவுக்கு நியமிக்கப்பட்டுள்ளனர்.

கடந்த கூட்டத்தொடரில் கோப் குழுவின் உறுப்பினராக இருந்த முன்னாள் இராஜாங்க அமைச்சர் அஜித் நிவாட் கப்ராலுக்குப் பதிலாக நாடாளுமன்ற உறுப்பினர் சாகர காரியவசம் இம்முறை நியமிக்கப்பட்டுள்ளார்.இதில் ஒன்பதாவது நாடாளுமன்றத்தின் முதலாவது கூட்டத்தொடரின் இறுதிக் காலப் பகுதியில் முன்னெடுக்கப்பட்ட விசாரணைகள் மற்றும் அரசாங்கப் பொறுப்பு முயற்சிகள் குழுவினால் தயாரிக்கப்பட்ட மூன்றாவது அறிக்கை இக்கூட்டத்தொடரில் சமர்ப்பிப்பதற்கும் உறுப்பினர்கள் அனுமதி வழங்கினர்.

கடந்த கூட்டத்தொடரில் கோப் குழுவுக்கு அழைக்கப்பட்ட நிறுவனங்கள் பல்வேறு காரணங்களால் பிற்போடப்பட்ட நிலையில், அந்நிறுவனங்களை மீண்டும் அழைப்பதற்கும் குழுவில் அனுமதி வழங்கப்பட்டது.

எதிர்காலக் கூட்டத்துக்கு அழைக்கப் படும் நிறுவனங்கள் தொடர்பில் முன்னுரிமைப் பட்டியலைத் தயாரிப்பது குறித்தும் இங்கு முன்மொழியப்பட்டது.

நாடாளுமன்றத்தின் முன்னிடப்படும் பகிரங்கக் கூட்டுத்தாபனங்கள், அரசாங்கத்தினால் முழுமையாக அல்லது பகுதியளவில் நிதியளிக்கப்பட்ட நிறுவனங்கள் மற்றும் ஏதேனும் எழுத்திலான சட்டத்தினால் அரசாங்கத்துக்கு உரித்தாக்கப்பட்ட ஏதேனும் தொழிலின் அல்லது வேறு பொறுப்பு முயற்சியின் கணக்குகளை கணக்காய்வாளர் தலைமையதிபதியின் உதவியுடன் பரிசோதனை செய்வது அரசாங்கப் பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழுவின் கடமையாகும்.

நேற்றைய கூட்டத்தில் அமைச்சர்களான ரோஹித அபேகுணவர்தன, கலாநிதி சரத் வீரசேகர, இராஜாங்க அமைச்சர்களான ஜயந்த சமரவீர, டி.வீ. சானக, இந்திக அனுருத்த ஹேரத், கலாநிதி நாலக கொடஹேவா நாடாளுமன்ற உறுப்பினர்களான சுசில் பிரேமஜயந்த, பாட்டளி சம்பிக்க ரணவக்க, ஜகத் புஷ்பகுமார, கலாநிதி ஹர்ஷ டி சில்வா, இரான் விக்கிரமரத்ன, பிரேம்நாத் சி. தொலவத்த, சாணக்கியன் ராஜபுத்திரன் இராசமாணிக்கம், மதுர விதானகே, சாகர காரியவசம் ஆகியோர் கலந்துகொண்டனர்.

# யாழில் பெண்ணொருவருக்கு அடுப்பு தீப்பற்றி காயம்

யாழ்ப்பாணத்தில் மண்ணெண்ணெய் அடுப்பு தீப்பற்றியதில் இளம் குடும்பப் பெண்ணொருவர் தீக்காயமடைந்துள்ளார்.

யாழ்ப்பாணம், ஆறுகால்மடம் பகுதியில் நேற்று முன்தினம் (09) இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

அன்றையதினம் இரவு உணவு தயாரித்துக் கொண்டிருந்த போது, மண்ணெண்ணெய் அடுப்பில் மண்ணெண்ணெய் தீர்ந்துள்ளது.

இதையடுத்து, மண்ணெண்ணெய் ஊற்றியபோது, தீ விபத்து ஏற்பட்டது.

சம்பவத்தில் 30 வயதுடைய ஆ.தர்ஷிகா என்ற பெண்ணே காயமடைந்து யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

# தோட்டத் தொழிலாளர் சம்பளத்தில் கோதுமைக்கான கட்டணம் அறிவிடப்பட்டும் மா வழங்கப்படவில்லை

## கோணக்கலை மக்கள் விசனம்

(நடராஜா மலர்வேந்தன்)

பசறை கோணக்கலை மேற்பிரிவு தோட்ட தொழிலாளர்கள் அரசாங்கத்தினால் மானிய அடிப்படையில் வழங்குவதாக கூறிய கோதுமை மாவை உடனடியாக பெற்றுத் தருமாறு கோரிக்கை விடுத்துள்ளனர். ஐம்பதுக்கும் மேற்பட்ட தொழிலாளர்களுக்கான கோதுமை மாவுக்கான கட்டணமாக தோட்ட நிர்வாகத்தினால் ஜனவரி மாத சம்பளப்பட்டியல் அறிக்கையிலிருந்து 80 ரூபா என்ற ரீதியில் 15 கிலோகிராமுக்கு ஆயிரத்து 200 ரூபா அறவிடப்பட்டிருந்தபோதும் இதுவரையிலும் கோதுமை மா கிடைக்கவில்லை என தோட்டத் தொழிலாளர்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

மற்றும் அரசாங்கத்தினால் ஆயிரம் ரூபா நாளாந்த கொடுப்பனவு தருவதாக கூறி இருந்தும் 80 ரூபாவில் 15 கிலோ கிராம் கோதுமை மா தருவதாகக்கூறி இருந்தபோதிலும், அவை அனைத்தும் செயலற்று போயுள்ளதாகவும் தொழிலாளர்கள் தெரிவித்தனர்.








ஊழியர் சேமலாப நிதிக்கு வரி விதிக்கும் நிதி அமைச்சின் தீர்மானத்துக்கு எதிராக அனைத்து நிறுவனங்களின் ஊழியர் சங்கத்தினால் கொழும்பிலுள்ள தொழில் அமைச்சுக்கு முன்பாக நேற்று (10) பாரிய ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது. இதன்போது தொழில் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா ஆர்ப்பாட்டக்காரர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தினார்.

(படப்பிடிப்பு: ஏஷான் தசநாயக்க)

# ஊழியர் சேமலாப நிதி மீதான வரிவிதிப்பை உடனடியாக தடைசெய்ய நடவடிக்கை வேண்டும்

## அசோக அபேசிங்க எம்.பி. ஜனாதிபதியிடம் கடிதம் மூலம் கோரிக்கை

அதிக வாழ்க்கைச் செலவினால் தவிக்கும் உழைக்கும் மக்கள், தாங்கள் சம்பாதித்த பணத்தில் சேமித்த நிதிக்கு வரி விதிப்பது மேற்கொண்டமைக்கு எவ்வித தார்மீகமும் அதேபோல் நியாயமும் இல்லை என்பதை இந்தத் தருணத்தில் சுட்டிக்காட்டுகிறோம்.

எனவே இந்த வரி விதிப்பை உடனடியாக நிறுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறோம் என ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் அசோக அபேசிங்க ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பில் அவர் கடிதம் மூலம் வேண்டுகோள் விடுத்துள்ளார். அந்தக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

2022ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்ட முன்மொழிவுகள் வருடாந்தம் 2000 மில்லியனுக்கும் அதிகமான இலாபம் ஈட்டும் நிறுவனங்கள் மற்றும் தனிநபர்கள் மீது 25வீத மிகைக் கட்டண வரி விதிப்பை முன்மொழிந்துள்ளது.

உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் வரையறையின் பிரகாரம் ஊழியர் சேமலாப நிதியம், ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியச் சபை, ஓய்வூதியக் கொடுப்பனவு




நிதியம், ஓய்வூதிய நிதி நிறுவனங்கள் மேற்கூறிய வரையறையில் அடங்கும்.

மேற்கூறிய அனைத்து நிதிகளும் நமது நாட்டின் உழைக்கும் மக்கள் தங்கள் அறிவையும் உழைப்பையும் வியர்வையையும் சிந்தி தங்கள் எதிர்கால பாதுகாப்புக்காக திரட்டிய நிதியாகும். இந்த நிதிகள் ஒருபுறம், சமூக பாதுகாப்பு நிதியங்களாகும். இத்தகைய நிதியங்களுக்கு வரி விதிக்காமல், வரியிலிருந்து விலக்கு அளிக்கப்படுவதே மேற்கொள்ளப்பட்டிருக்க வேண்டிய விடயமாகும். இந்த நிதியங்களுக்கு பங்களிக்கும் உறுப்பினர்களாக அரச நிறுவனங்கள், கூட்டுத்தாபனங்கள், அதிகாரசபைகள் மற்றும் தனியார்த்துறை ஊழியர்கள் ஆகும்.

இம்மக்கள் தாம் பெறும் சம்பளத்தை அடிப்படையாகக் கொண்டு தமது வாழ்வாதாரத்தை மேற்கொள்கின்றனர். இவர்களுள் பெரும்பாலானவர்களுக்கு வேறு வருமானம் வழிகள் இல்லை. ஆனால், அவர்கள் பல மறைமுக வரிகளுக்கு பங்களிக்க வேண்டியுள்ளது. உணவு, மின்சாரம், எரிவாயு மற்றும் தண்ணீர் உள்ளிட்ட அத்தியாவசிய பொருட்கள் மற்றும் பிற சேவைகளுக்கும் அவர்கள் வரி செலுத்த வேண்டிய நிலைக்கு ஆளாகியுள்ளனர்.

தற்போதைய அரசாங்கம் ஆட்சிக்கு வந்தவுடன் உடனடியாக வழங்கப்பட்ட வரிச்சலுகைகளால் பாரிய வர்த்தக நிறுவனங்கள் பயனடைந்தபோதிலும், மக்களுக்கு எவ்வித நன்மையும் இதனால் கிடைக்கவில்லை.

அரசின் வருமானம் சரிந்து நாடு கடும் பாதாள நிலைக்கு சென்றதே இதன் மூலம் நடந்ததாகும்.

அரசாங்கம் எடுக்கும் தவறான முடிவுகளுக்கு இந்த நாட்டில் உழைக்கும் மக்கள் விலைபோக வேண்டிய தேவைப்பாடு இல்லை. மேற்கண்ட நிதியில் உள்ள உறுப்பினர்களே இந்த வரி விதிப்பால் பாதிக்கப்படுகின்றனர்.

அதிக வாழ்க்கைச் செலவில் தவிக்கும் உழைக்கும் மக்கள், தாங்கள் சம்பாதித்த பணத்தில் சேமித்த நிதிக்கு வரி விதிப்பது மேற்கொண்டமைக்கு எவ்வித தார்மீகமும் அதேபோல் நியாயமும் இல்லை என்பதை இந்தத் தருணத்தில் சுட்டிக்காட்டுகிறோம்.

எனவே, இந்த வரி விதிப்பை உடனடியாக நிறுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறோம். இல்லாவிடின் உழைக்கும் மக்களைப் பிரதிநிதித்துவப் படுத்தும் அனைத்து தரப்பினர்களுடனும் ஒன்றிணைந்து இந்த வரி அறவீட்டுக்கு எதிர்ப்புத் தெரிவிப்போம் என்பதையும் தெரிவிக்கிறோம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பெண் பொலிஸ் சார்ஜன்ட் கணவரால் தீமூட்டி கொலை

(கெமுனு சந்திரலால்)

காலியில் கணவரால் பெற்றோல் ஊற்றி தீ வைத்து எரிக்கப்பட்டதில் பலத்த காயமடைந்த மனைவியான பொலிஸ் சார்ஜன்ட் சிகிச்சைப் பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இவ்வாறு உயிரிழந்த பெண் பலபிட்டிய-கோனாபீனுவல பகுதியைச் சேர்ந்தவர் என பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்த பெண்ணின் கணவர் இராணுவத்திலிருந்து ஓய்வுபெற்று மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டு வருகிறார்.

இருவருக்கும் இடையே வாக்குவாதம் ஏற்பட்டதையடுத்து, கணவர் அவரை அடித்து, அவர் மீது பெற்றோல் ஊற்றி தீ வைத்ததாகத் தெரியவருகிறது.

இச்சம்பவத்தில் கைது செய்யப்பட்ட சந்தேக நபரை எதிர்வரும் 18ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு பலபிட்டிய நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

தமிழன்
THAMILAN தமிழன்
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்
இல. 91, விஜேராம மாவத்தை, கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42.
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 077 172 1880
மின்னஞ்சல் : thamilaneditorial@gmail.com/ thamilaneditor@gmail.com
2022, பெப்ரவரி 11ஆம் திகதி, வெள்ளிக்கிழமை

# சமாளிக்கும் இலங்கை!

இலங்கை அரசாங்கம் முன்மொழிந்துள்ள பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் மீதான திருத்தங்களை வரவேற்றுள்ள ஐரோப்பிய ஒன்றியம், இது தொடர்பில் வெளியாகியுள்ள வர்த்தமானியில் முக்கிய விடயங்கள் இடம்பெற்றிருக்கவில்லை என்று சுட்டிக்காட்டியுள்ளது.

மேலும், சர்வதேச மனித உரிமைகள் பேரவை மற்றும் அதன் பொறிமுறைகளுடன் ஒத்துழைப்பையும், ஈடுபாட்டையும் இலங்கை தொடரவேண்டும் எனவும் ஐரோப்பிய ஒன்றியம் வலுவான விதத்தில் வலியுறுத்தியுள்ளது. பயங்கரவாதத் தடைச்சட்டத்தை பயன்படுத்துவதை இலங்கை குறைக்கவேண்டும் எனவும் ஐரோப்பிய ஒன்றியம் வலியுறுத்தியுள்ளது.

ஐரோப்பிய ஒன்றியமும், இலங்கையும் தங்களின் கூட்டு ஆணைக்குழுவின் 24ஆவது கூட்டத்தை 8ஆம் திகதி பிரஸ்ஸல்ஸில் நடத்தின.

சிநேகபூர்வ திறந்த சூழ்நிலையில் இடம்பெற்ற இந்தச் சந்திப்பு, இருதரப்பு உறவுகள் குறித்தும், நல்லாட்சி, நல்லிணக்கம், மனித உரிமைகள், வர்த்தகம், காலநிலை மாற்றம், சூழல் பாதுகாப்பு, பயங்கரவாதம் உட்பட இருதரப்பு நலன்களுடன் தொடர்புடைய பலதரப்பட்ட விடயங்கள் குறித்து கருத்துகளைப் பரிமாறியது.

பெருந்தொற்றினால் தீவிரமடைந்துள்ள பலவீனங்கள், சமத்துவமின்மைகளுக்கு தீர்வு காணவேண்டியதன் அவசியத்தை வலியுறுத்திய ஐரோப்பிய ஒன்றியம், கொவிட் தடுப்பூசிகள், வருமானம் குறைந்த – நடுத்தர வருமானம் பெறும் நாடுகளுக்கு நியாயமான – சமமான முறையில் கிடைப்பதை உறுதிசெய்வதற்கான தனது அர்ப்பணிப்பையும் வலியுறுத்தியுள்ளது.

ஜனநாயகம், நல்லாட்சி, சட்டத்தின் ஆட்சி, மனித உரிமைகள், சிறுபான்மையினத்தவர்களின் உரிமைகள், கருத்துச் சுதந்திரம், ஒன்றுகூடுவதற்கான சுதந்திரம் போன்றவை குறித்து கலந்துரையாடல்களின் போது கவனம் செலுத்தப்பட்டது.

இலங்கை நல்லிணக்கம் மற்றும் சுயாதீன ஸ்தாபனங்கள் ஆகியவற்றில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம் குறித்து எடுத்துரைத்தது. குறிப்பாக, காணாமல்போனவர்களின் அலுவலகம், இழப்பீட்டுக்கான அலுவலகம்,தேசிய ஐக்கியம், நல்லிணக்கத்திற்கான அலுவலகம், இலங்கையின் மனித உரிமைகள் ஆணைக்குழு ஆகியவை குறித்து இலங்கை சுட்டிக்காட்டியது. ஆனால், இலங்கையானது, மனித உரிமைகள் பேரவை மற்றும் அதன் பொறிமுறைகளுடன் ஈடுபாட்டையும், ஒத்துழைப்பையும் தொடரவேண்டும் என வலுவான விதத்தில் ஐரோப்பிய ஒன்றியம் வலியுறுத்தியுள்ளது.

இந்தச் சூழமையில் ஐரோப்பிய ஒன்றியம் சுயாதீன அமைப்புகள் சுதந்திரமாகவும், சிறப்பாகவும் செயற்படுவதன் அவசியத்தை வலியுறுத்தியுள்ளது. சிவில் சமூகத்தை வலுப்படுத்தவேண்டியதையும், அது அதன் முழுமையான பன்முகத்தன்மையுடன் செயற்படுவதற்கான தளத்தை வழங்கவேண்டியதன் முக்கியத்துவத்தையும் ஐரோப்பிய ஒன்றியமும், இலங்கையும் ஏற்றுக்கொண்டிருக்கின்றன.

இலங்கை அரசாங்கம் முன்மொழிந்துள்ள பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் மீதான திருத்தங்களென சமர்ப்பிக்கப்பட்டவற்றை ஐரோப்பிய ஒன்றியம் வரவேற்றாலும், வர்த்தமானியில் வெளியாகியுள்ள திருத்தப்பட்ட சட்டமூலத்தில் முக்கியமான கூறுகள் இடம்பெற்றிருக்கவில்லை எனவும் அது சுட்டிக்காட்டியுள்ளது.

பயங்கரவாதத் தடைச்சட்டத்தை சர்வதேச தராதரத்திலானதாக மாற்றுவதற்காக மேற்கொள்ளப்படவேண்டிய மேலதிக நடவடிக்கைகள் குறித்து ஐரோப்பிய ஒன்றியம் முன்வைத்த கருத்துகளை கவனத்திற்கொள்வதாக இலங்கை உறுதியளித்துள்ளது.

ஐரோப்பிய ஒன்றியம் இலங்கையை பயங்கரவாதத் தடைச்சட்ட பயன்பாட்டை குறைக்குமாறு கேட்டுக்கொண்டுள்ளதுடன், குற்றச்சாட்டுகள் சுமத்தப்படாமல் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின்கீழ் தடுத்துவைக்கப்பட்டுள்ளவர்களை பிணையில் விடுதலைசெய்வதற்கான நடைமுறை சாத்தியமான நிர்வாக நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் கேட்டுக்கொண்டுள்ளது.

ஐரோப்பிய ஒன்றியத்தின் இந்த ஆலோசனைகளை இலங்கை கேட்டு அதன்படி நடக்குமா என்பது தெரியவில்லை. ஆனால், இலங்கை ஆட்சியாளர்களின் கடந்தகால வரலாறுகளை நோக்கினால் இப்படியான சர்வதேச சமூகத்தின் ஆலோசனைகளைக் கமுக்கமாகக் கேட்டாலும் அதன்பின்னர் அதனை ஒழுகி நடக்கும் வரலாறு இல்லை.

தேசிய பாதுகாப்பு என்ற போர்வையில் இலங்கையில் தமிழ் பேசும் மக்கள் மீதான அடக்குமுறை தொடர்ந்துகொண்டே இருக்கிறது. இப்போதுகூட நீதியமைச்சினால், முன்மொழியப்பட்ட பயங்கரவாதத் தடைச்சட்டத் திருத்தத்திலும் முன்பிருந்த விதிகளே முன்கொண்டு வரப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக, குற்ற ஒப்புதல் என்ற விடயத்தில் எவ்வித மாற்றங்களும் ஏற்படுத்தப்படவில்லை. சித்திரவதைகளுக்கு உட்பட்டுள்ள ஒருவர், அதிகாரிகளால் கூறப்படுகின்ற இடங்களில் கையொப்பமிடும் முறையே மீண்டும் கொண்டுவரப்பட்டுள்ளது.

இலங்கை ஆட்சியாளர்களைப் பொறுத்தவரை பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வை வழங்குவதை விடுத்தது, தற்காலிக ஏற்பாடொன்றை செய்துவிட்டு, பின்னர் அந்தப் பிரச்சினையை வைத்து எவ்வாறு அரசியல் ஆதாயம் தேடுவது என்ற கோட்பாட்டிலேயே இருப்பதாகத் தெரிகிறது. காலங்காலமாக இதுவே நடக்கிறது. ஆட்சிக்கு வருவோர் மாறி மாறி ஆளுக்காள் விமர்சனங்களை முன்வைத்து அவற்றுக்கு ஒவ்வொரு நியாயம் கற்பித்துக்கொள்கிறார்களே தவிர பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வை தருவோர் எவருமில்லை. சமாளிப்பு என்பது ஒரு கலை என்றால் இலங்கை அதில் பிக்காஸோ!

# பாடிப் பறந்த குயில்!



ஏழு தலைமுறைகளாக இந்திய வானில், தனது காந்தக் குரலால் தேவகானங்களை மிதக்கவிட்ட பாட்டுக்குயில் - லதா மங்கேஷ்கர், மும்பை பிரிட்ச்கேண்டி மருத்துவமனையிலிருந்து, பிறந்த கூட்டிற்கே திரும்பச் சென்றுவிட்டது. கொவிட்-19 எனும் கொடிய பாவிக்கு சங்கீத ஞானம் இருந்திருந்தால், அந்த மெல்லிசையின் ராணியைக் கவர்ந்து சென்றிருக்காது.

1962இல் இந்தியாவின் மீது சீன அரக்கன் போர் தொடுத்தான். ஒருநாள் போரில் இரண்டு பெட்டாலியன் போர்வீரர்களை சீன இராணுவம் கொன்று குவித்தது. அதனை செவிமடுத்த இந்தியர்களின் இதயம் நடுங்கியது. அந்தத் துயத்தைத் தாங்கமுடியாத பண்டித நேரு, தழுதழுத்த குரலில் வானொலி மூலம் ஆற்றிய உரை, அனைவருடைய நாடிகளையும் தளரச் செய்தது.

அந்த உரையைக் கேட்ட பிருதிவிராஜ் என்னும் கவிஞர், 'ஆ ஏய் மேரெ வாதன் கி லோகோ' எனத் தொடங்கும் பாடலை எழுதினார். இந்தப் பாடல் லதாவின் கைகளுக்குக் கிடைத்தவுடன், அதனை சி.இராமச்சந்திரா எனும் இசையமைப்பாளரிடம் கொடுத்து, இசையமைத்து வாங்கினார். 1963ஆம் ஆண்டு ஜனவரி 26ஆம் திகதி, குடியரசு தின விழாவின்போது, பண்டித நேரு தேசிய கொடியை ஏற்றிவைத்தவுடன், லதா அந்தப் பாடலைப் பாடினார். அப்பாடலைக் கேட்ட பிரதமர் நேரு, மேடையிலேயே கண்ணீர் விட்டு அழுதார்.

அந்தப் பாடலை லதா மங்கேஷ்கர் தம் வாழ்நாளில் 33 அரங்குகளில் பாடியிருக்கிறார். அப்பாடலைப் பாடத் தொடங்குவதற்கு முன்னர், ''அனைவரும் எழுந்துநின்று தேசிய கொடிக்கு வணக்கம் செலுத்துவதுபோல் நின்றால்தான் பாடுவேன். இல்லாவிட்டால் பாடமாட்டேன்'' எனச் சொல்லி, வாழ்நாள் முழுமையும் தேசப்பற்றைப் போற்றியவர், அந்த வீரமங்கை.

லதா மங்கேஷ்கர் உச்சத்தில் பறந்த வானம்பாடியாக இருந்தாலும், மனிதநேயத்தில் அவர் ஓர் அன்னை தெரேசாவாகத் திகழ்ந்தார். இளமைக்காலத்தில் அவருடைய தந்தை நோய்வாய்ப்பட்டு இறந்ததைப் பார்த்து, அதே துன்பத்தை மற்ற மனிதர்களும் படக்கூடாது என்பதற்காக தம் தந்தை தீனாநாத் பெயரில் ஒரு மருத்துவமனையை புனே நகரில் நிறுவி, அவருடைய குடும்பமே தற்போதுவரையில் பராமரித்து வருகின்றது.

2005ஆம் ஆண்டு காஷ்மீரில் ஒரு பூகம்பம் ஏற்பட்டு, நூற்றுக்கணக்கான மக்கள் அதில் மாண்டு போயினர். பாமர மக்கள் திக்கற்றுத் தெருவில் நின்றனர். ஒரு வைரக் கம்பெனிக்கு ஐந்து வைரங்களின் பரிமாணத்தை வரைந்து கொடுத்தார் 'லதாஜி'. அவை பல இலட்சங்களுக்கு விற்பனையாகின. அந்தத் தொகை முழுவதையும் லதா, காஷ்மீர் மக்களுக்கு வழங்கி அவர்களின் துயரைத் துடைத்தார்.

மேலும், லதா தம் வாழ்நாள் முழுவதும், கொல்லாமை விரதத்தைக் கடைப்பிடித்த அகிம்சைவாதியாகவும் திகழ்ந்தார். அவர் சென்னைக்கு எப்பொழுது வந்தாலும் நடிகர் திலகம் சிவாஜி கணேசன் வீட்டிற்கு வருகை தருவதுண்டு. சிவாஜியை லதா தனது உடன்பிறவாத சகோதரராகவே பாவித்தார். சிவாஜி லதாவைச் சொந்த சகோதரிபோல் நினைத்துப் பழகி வந்தார். சிவாஜியின் இல்லத்தில் ஒருநாள் சாப்பாட்டு மேசையில் அமர்ந்த லதா, ஆசாரமான குடும்பத்திலிருந்து வந்ததால் அதிர்ச்சியடைந்தார். நடப்பன, நீந்துவன, பறப்பன எல்லாம் மேசையில் பரப்பப்பட்டிருந்தன. அதில் ஒன்றைக் காட்டி, "இது என்ன?" எனக் கேட்டார் லதா.

அதற்கு சிவாஜி, "இது குயில் கறி. நான் குயில் கறியை விரும்பி சுவைத்து சாப்பிடுவேன்" என்றார். உடனே லதா, "தாங்கள் என்னை இசைக்குயில் என்கிறீர்கள். என்னைக் கொன்று மேசையில் குவித்திருக்கிறீர்களே, இது நியாயமா?" என்றார். அந்த நிமிடத்திலிருந்து நடிகர் திலகம் சிவாஜி, குயில் கறி சாப்பிடுவதை முற்றாகக் கைவிட்டுவிட்டார்.

தம் வாழ்நாளில் 36 மொழிகளில் 30,000 பாடல்களுக்கு மேல் பாடியவர் லதா மங்கேஷ்கர். இசையுலகில் இசைவாணி எம்.எஸ்.சுப்புலட்சுமிக்கு அடுத்ததாக, வாழும்போதே 'பாரத் ரத்னா' அங்கீகாரத்தைப் பெற்றவர். 'தாதாசாகிப் பால்கே' விருதை லதா பெற்றதால், அவ்விருது பெருமையடைந்தது. லண்டனிலுள்ள ரோயல் எல்பர்ட் அரங்கில் 1974ஆம் ஆண்டு முதன்முதலில் பாடிய பெண் பாடகர் லதா மங்கேஷ்கர்தான். பிரான்ஸின் உச்சபட்ச விருதைப் பெற்றவரும் அவரே!

லதா பிறந்தவுடன் அவருடைய தந்தை தீனாநாத் வைத்த பெயர் 'ஹேமாவதி' என்பதாகும். ஆனால், பின்னர் அவருடைய பெயரை 'லதா' என மாற்றியவரும் தந்தையாரே. தீனாநாத் தான் நடித்த நாடகத்தில் இடம்பெற்ற 'லத்திகா' எனும் பெண் பாத்திரம் அவர் மனதுக்குப் பெரிதும் பிடித்திருந்தது. தீனாநாத்தின் பூர்வீகம் கோவாவிலுள்ள 'மங்கேஷ்கர்' எனும் சிறு நகரமாகும். அதனால், அந்தப் பெண் பாத்திரத்தின் பெயரும், ஊர்ப்பெயரும் சேர்ந்து வரும்படியாக லதா மங்கேஷ்கர் என மாற்றினார்.

தொடக்கப் பாடசாலைக்குப் போகும்போது லதா தம்முடைய தங்கை ஆஷா போஸ்லேவையும் அழைத்துக்கொண்டு போனதால், ஆசிரியர் அவரைப் பாடசாலைக்குள் அனுமதிக்கவில்லை. அத்தோடு பாடசாலைப் படிப்பை முடித்துக் கொண்டார் லதாஜி.

தமது தந்தையிடமும், தாய் மாமன்களிடத்தும் அம்மாநிலத்தின் நாட்டுப்புறப் பாடல்களைக் கற்றார். அவர் மும்பைக்கு வந்தபிறகு பிரபல வித்துவான் உஸ்தாத் அமான் அலிகானிடம் இந்துஸ்தானி சாஸ்திர சங்கீதத்தையும் கற்றார். தந்தையார் இறந்து, அவருடைய நாடகக் கம்பெனியும் கடனில் மூழ்கியதால், குடும்பத்தைக் கரை சேர்ப்பதற்காக நாடகங்களிலும், சில திரைப்படங்களிலும் நடித்தார். பிற்காலத்தில் சில திரைப்படங்களுக்கு இசையமைப்பாளராகவும் மாறினார்.

புகழ்வானில் உயர உயரப் பறந்தாலும், தொடக்கக் காலத்தில் லதா இடறி விழுந்த பள்ளங்களும் உள்ளன. அவருடைய பெற்ற தந்தை தீனாநாத் மற்றும் வளர்ப்புத் தந்தை விநாயக் தாமோதர் ஆகியோர் காலமான பின்னர், இசை இயக்குநர் குலாம் ஹைதர் அவருடைய காப்பாளரானார். குலாம் ஹைதர், லதாவை அழைத்துக்கொண்டு போய் அப்பொழுது புகழோடு இருந்த ஷஹாதார் முகர்ஜியிடம் அறிமுகப்படுத்தி, அவருக்கு வாய்ப்பு நல்குமாறு வேண்டினார்.

தன்முனைப்புப் படைத்த முகர்ஜி, லதாவின் குரல் மிகவும் மெல்லியதாக இருப்பதாகக் கூறி, வாய்ப்பளிக்க மறுத்தார். அதனைக் கேட்டு ஆத்திரமடைந்த குலாம் ஹைதர், "முகர்ஜி, ஒரு காலத்தில் இசையமைப்பாளர்களும், தயாரிப்பாளர்களும், லதாவின் காலில் விழுந்து கெஞ்சித் தம் படங்களில் பாட வருமாறு அழைக்கும் காலம் விரைவில் வரும்" எனக் கூறி வெளியேறினார்.

பிறதொரு சமயத்தில் நடிகர் திலிப்குமார், "லதாவின் பாடல்களில் உருதுச்சொற்கள் சரியாக உச்சரிக்கப்படுவதில்லை" என்றதொரு குற்றச்சாட்டைச் சுமத்தினார். அன்றிலிருந்து லதா, சாஃப்பி எனும் உருது ஆசிரியரிடம் பயிற்சியெடுத்துப் பிற்காலத்தில், நடிகர் திலிப்குமாரே புகழும்படியாகப் பாடினார். அடுத்து, லதா மங்கேஷ்கர் 25,000 பாடல்களைப் பாடிய பின்னர் கின்னஸ் புத்தகத்தின் பதிவிற்காக விண்ணப்பித்தார். அதைத் தெரிந்துகொண்ட முகம்மது ரஃபி, ''நான் லதாஜியைவிட அதிகமாகப் பாடியிருக்கிறேன், எனக்குத்தான் கின்னஸ் புத்தகத்தில் பதிவு தர வேண்டும்'' என்று வாதிட்டார். அதனால், கசப்படைந்த கின்னஸ் நிறுவனம், இருவருக்குமே கின்னஸ் பதிவு கிடையாது என்று மறுத்துவிட்டது.

1999ஆம் ஆண்டு மத்திய அரசு லதாஜிக்கு நாடாளுமன்ற உறுப்பினர் (மாநிலங்களவை) பதவியை வழங்கியது. என்றாலும், உடல்நலக்குறைவாலும், பாடல் பதிவுகளினாலும் அவரால் நாடாளுமன்றத்திற்கு சரியாக செல்ல முடியவில்லை. அதனால் துணை அவைத் தலைவர் நஜ்மா ஹப்துல்லாஹ், பிரணாப் முகர்ஜி, சஃப்னா ஆஸ்மி போன்றவர்கள் லதாஜியின் மேல் குற்றச்சாட்டுகளை அடுக்கத் தொடங்கினர். அதற்குப் பின்னர் லதாஜி நடந்துகொண்ட பெருமிதத்தை அனைவரும் பாராட்டினர். "நான் நாடாளுமன்ற உறுப்பினர் பதவிக்குத் தகுதியற்றவள். அதனால், நாடாளுமன்ற உறுப்பினருக்கான மாத ஊதியத்தையோ, பயணப்படியையோ நான் பெற்றதில்லை. வீடு ஒதுக்கித் தரும்படியாகக்கூடக் கேட்டதில்லை" எனக் கூறியதும், அவருடைய கண்ணியத்தை அனைவரும் வியந்து பாராட்டினர்.

92 ஆண்டுகள் இசையுலகத்தை ஆண்டுகொண்டிருந்த அந்த மகாராணி, கடைசியாகப் பாடியது, 'இந்தியாவின் பாரம்பரியத்தையும் தனித்துவத்தையும்' வியந்து பாடிய பாடலாகும். நாதமும், கீதமுமாக வாழ்ந்த அந்தக் கானக்குயிலின் கச்சேரி முடிவுற்றது. மத்திய அரசே ஓர் இசையரசியின் மறைவுக்கு இரு நாட்கள் துக்கம் அறிவித்தது, லதாஜி ஒருவருக்கு மட்டுமே. தேசிய கொடி இரு நாட்கள் அரைக்கம்பத்தில் பறக்கும்படியாகவும் அரசு ஆணை பிறப்பித்தது.

கலையுலகம் முழுவதுமே கண்ணீரால் மாலை தொடுத்தது. பாரதப் பிரதமரே நேரில் வந்து வணக்கம் செலுத்தினார். குடும்பத்தினரை அழைத்து, அவர்கள் அழுத கண்ணீரைத் துடைத்தார். தேசிய கொடியோடும், இராணுவ மரியாதையோடும் அவருடைய ஆன்மா அடங்கியது.

சிவாஜி பூங்காவில் அவருடைய பூவுடலைச் சந்தனக்கட்டைகள் எரித்தாலும், அவற்றிலிருந்து சங்கீதம்தான் மணக்கும். லதா மங்கேஷ்கர் இனி இல்லையென்றாலும், அவருடைய நாத கீதங்கள் காற்றுள்ள வரையில், நமது செவிமடல்களில் ரீங்காரம் இட்டுக்கொண்டேயிருக்கும்.


**பேராசிரியர் தி.இராசகோபாலன்**
***நன்றி - தினமணி***

## இன்றைய நாளில்...

- 1640 – காலி நகரை ஒல்லாந்தர் கைப்பற்றினர்.
- 1794 – அமெரிக்க மேலவையின் முதலாவது அமர்வு பொதுமக்களுக்கு திறந்துவிடப்பட்டது.
- 1826 – லண்டன் பல்கலைக்கழகக் கல்லூரியானது, லண்டன் பல்கலைக்கழகம் என்ற பெயரில் ஆரம்பிக்கப்பட்டது.
- 1929 – வத்திக்கான் நகர் உருவாக்குவதற்கான உடன்பாட்டை இத்தாலியும், திரு ஆட்சிபீடமும் எட்டின.
- 1933 – மகாத்மா காந்தி ஹரிஜன் என்ற பத்திரிகையைத் தொடங்கினார்.
- 1979 – அயத்துல்லா கொமெய்னியின் தலைமையில் ஈரானியப் புரட்சி வென்றது.
- 1990 – 27 ஆண்டுகள் சிறைவாசத்தின் பின்னர் நெல்சன் மண்டேலா கேப் டவுன் விக்டர் வெர்ஸ்டர் சிறைச்சாலையிலிருந்து விடுதலைபெற்றார்.
- 1996 – இலங்கை இராணுவத்தினரால் குழந்தைகள் உட்பட 26 பேர் திருகோணமலை, கிளிவெட்டி பகுதியிலுள்ள குமாரபுரத்தில் படுகொலைசெய்யப்பட்டனர். 30 பேர் காயமடைந்தனர்.
- 1997 – ஹப்பிள் விண்வெளி தொலைநோக்கியைப் பழுதுபார்க்கும் டிஸ்கவரி விண்ணோடம் புறப்பட்டது.
- 1999 – புளூட்டோ, நெப்டியூனின் சுற்றுவட்டத்தைத் தாண்டிச் சென்றது. இவ்வாறான நிகழ்வு மீண்டும் 228 ஆண்டுகளின் பின்னரே நிகழும் என எதிர்வு கூறப்படுகிறது.
- 2011 – அரேபிய வசந்தம்: ஹொஸ்னி முபாரக்கைப் பதவி விலகக் கோரி எகிப்தியப் புரட்சி ஆரம்பமானது.
- 2017 – வட கொரியா ஜப்பானிய கடலின் மேற்புறமாக ஏவுகணையை ஏவி பரிசோதித்தது.

## நக்கல் நமசிவாயம்

**கொரோனா காலத்தில ஆளுங்கட்சி ஆக்கள் கூட்டம் கூட்டினத்துக்கு எதிர்க்கட்சி ஒண்டும் சொல்லேல்ல பாருங்கோ...! ஏனென்டா தங்களாலயும் மக்கள திரட்ட முடியாமப் போயிடுமே...! யாருக்கும் சனத்தப் பத்தி அக்கறையில்ல...! தங்கட அரசியல் நடந்தாச் சரி...!**



## மாலைதீவு இளைஞன் சடலமாக மீட்கப்பட்ட விவகாரம்:

# மருத்துவ அறிக்கை நீதிமன்றில் சமர்ப்பிப்பு விசாரணைகளில் புதிய தகவல்கள் அம்பலம்

(அஷ்ரப்.ஏ.சமத்)

வெள்ளவத்தை இராமகிருஷ்ணா வீதிக்கு எதிரே உள்ள கடற்கரையில் கடந்த சனிக்கிழமை (05) இரண்டு சடலங்கள் பற்றிய விசாரணை தகவல்களை வெள்ளவத்தை பொலிஸார் வெளியிட்டுள்ளனர்.

வெள்ளவத்தை கடற்கரையில் இரண்டு சடலங்கள் காணப்பட்டதாக தகவல் கிடைத்ததையிட்டு வெள்ளவத்தை பொலிஸார் அவ்விடத்துக்கு உடன் விரைந்து பரிசோதனைகளை மேற்கொண்டனர்.

ஆணொருவரின் சடலம் முதலில் மீட்கப்பட்டதுடன் அந்த இடத்திலிருந்து 10 மீற்றருக்கு அப்பால் மேலும் ஓர் ஆணின் சடலமும் கிடப்பது கண்டுபிடிக்கப்பட்டது.

அச்சடலம் 60 முதல் 70 வயது மதிக்கத்தக்கவர். அச் சடலமும் நிர்வாணமாக கிடப்பதையும் பொலிஸார் அடையாளம் கண்டதாக வெள்ளவத்தை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பிரசாந் சில்வா தெரிவித்தார்.

இப் பரிசோதனைகளை மேற்கொண்ட வெள்ளவத்தை பொலிஸ் நிலையத்தின் குற்றப் பிரிவு பொறுப்பதிகாரி ரங்கன டி சில்வா தகவல் தருகையில்,

இளைஞன் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டபோது, அவர் மாலைதீவு நாட்டைச் சேர்ந்த அபாம் நஸீம் என்ற 24 வயதுடைய இளைஞர் என்பது தெரியவந்தது.

நுகேகொடையில் உள்ள ஒரு தனியார் கல்வி நிலையத்தில் இரண்டரை வருடங்களுக்கு முன்பே தகவல் தொழில்நுட்ப பயிற்சிநெறியை பயிலுவதற்காக இலங்கை வந்துள்ளார்.

அவர் களுபோவிலை அன்டர்ஸன் வீதியில் உள்ள ஒரு வீட்டில் தங்கியிருந்துள்ளார். ஒரு வருடம் பயிற்சியை முடித்துவிட்டு மேலும் ஒரு பயிற்சியை பதிவு செய்துள்ளார்.

அவருக்கு விசா இவ் வருடம் பெப்ரவரி மாதம் வரை நீடிக்கப்பட்டிருந்தது.

அவர் இலங்கை வந்த இரண்டரை




வருட காலத்தில் மீண்டும் தனது சொந்த நாடான மாலைதீவுக்குச் செல்லவில்லை. இவரின் சடலத்தின் அருகே கூறிய கத்தி ஒன்றும் காணப்பட்டது. அக் கத்தியால் தனது கழுத்தில் தானே காயங்களை ஏற்படுத்தி தற்கொலை செய்துள்ளார் என பரிசோதனையின்போது தெரியவந்தது.

அத்துடன் இறுதியாக கஞ்சா போதைப்பொருள் பயன்படுத்தியுள்ளார். இந்தச் சடலத்தின் மீதான பிரேத பரிசோதனையை களுபோவிலை வைத்தியசாலையின் வைத்திய அதிகாரி லக்மாலி மேற்கொண்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

மேலும், இவரது உடற்கூற்று இரத்த மாதிரிகள் இரசாயனப் பகுப்பாய்வாளர் திணைக்களத்துக்கு அனுப்பப்பட்டுள்ளன. இப் பிரேத பரிசோதனையை பதில் மஜிஸ்ரேட் நீதிபதி ரத்னா கமகே சம்பவ இடத்துக்கு வருகை தந்து மேற்கொண்டார்.

மரணமடைந்தவரின் பெற்றோர் மாலைதீவில் பிரிந்து வெவ்வேறு திருமணம் முடித்து வாழ்ந்துவருவதால் இவரது கல்வி கட்டணங்கள் மற்றும் வதிவிட செலவுக்காக பணம் கிடைக்காமையால் அவர் கொழும்பில் தனியார் நிறுவனங்களில் பகுதி நேர தொழில் செய்து வாழ்ந்து வந்துள்ளார்.

மாலைதீவின் பெண் ஒருவரும் திருமணமாகி பிரிந்து தெஹிவளையில் வாழ்ந்து வந்துள்ளார்.

அப் பெண்ணுடன் தொடர்பில் இருந்துள்ளார். அப்பெண்ணுக்கு ஒரு குழந்தையும் உள்ளது. பொலிஸார் மேற்கொண்ட பரிசோதனையின்போது இத் தகவல்கள் தெரியவந்துள்ளன.

இவரது மருத்துவ பரிசோதனை அறிக்கை நேற்று வியாழக்கிழமை (10) கல்கிசை நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது. இவரது உறவினர் ஒருவரும் மாலைதீவு நாட்டிலிருந்து மூன்று பொலிஸாரும் நாட்டுக்கு வருகைதந்துள்ளனர்.

இவரின் சடலத்தின் அருகில் காணப்பட்ட ஆணின் சடலம் பிரேத பரிசோதனைக்குட்படுத்தப்படவில்லை. அவருக்கு கொவிட் பீடிக்கப்பட்டுள்ளதன் காரணமாக, அச் சடலம் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது. அவர் பற்றிய எவ்வித தகவலும் கிடைக்கப்படவில்லையென வெள்ளவத்தை பொலிஸ் குற்றப்பொறுப்பதிகாரி ரங்கன டி சில்வா தெரிவித்தார்.

## 10.02.2022 நாணய மாற்று வீதம்

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

| நாணயம் | கொள்வனவு வீதம் | விற்பனை வீதம் |
|---|---|---|
| அவுஸ்திரேலியன் டொலர் | 03 6386 | 035 5866 |
| கனேடியன் டொலர் | 044 2758 | 050 1381 |
| சீன யுவான் (ரென்மின்பி) | 2 811 | 21 0717 |
| யூரோ | 115 3450 | 124 316 |
| ஜப்பான் யென் | 0 6 72 | 0 6611 |
| சிங்கப்பூர் டொலர் | 036 2566 | 041 0054 |
| ஸ்ரேலிங் பவுன் | 156 177 | 164 6313 |
| சுவிஸ் பிரான்ங் | 102 34 0 | 110 1 2 |
| ஐ.அ.டொலர் | 087 4 7 | 1 1 8881 |

| நாடு | நாணயம் | விற்பனை வீதம் |
|---|---|---|
| பஹ்ரைன் | பஹ்ரைன் தினார் | 424 552 |
| குவைட் | குவைட் தினார் | 557 1 7 |
| ஓமான் | ஓமான் றியால் | 413 4631 |
| கட்டார் | கட்டார் றியால் | 44 3582 |
| சவூதி அரேபியா | சவூதி அரேபிய றியால் | 42 7215 |
| ஐக்கிய அரபு இராச்சியம் | ஐக்கிய அரபு இராச்சிய திர்ஹம் | 43 8742 |

# அரசாங்க நிதி பற்றிய குழுவின் தலைவராக அநுர பிரியதர்ஷன யாப்பா ஏகமனதாகத் தெரிவு

## கொழும்புத் துறைமுக மேற்கு முனைய அபிவிருத்திக்கு வரி விலக்களிக்கவும் அனுமதி







ஒன்பதாவது நாடாளுமன்றத்தின் இரண்டாவது கூட்டத்தொடரில் முதல் தடவையாக கடந்த செவ்வாய்க்கிழமை கூடிய அரசாங்க நிதி பற்றிய குழுவின் தலைவராக நாடாளுமன்ற உறுப்பினர் அநுர பிரியதர்ஷன யாப்பா ஏகமனதாக மீண்டும் தெரிவு செய்யப்பட்டார். அவருடைய பெயரை பேராசிரியர் ரஞ்சித் பண்டார முன்மொழிந்தார்.

இதனைத் தொடர்ந்து நாடாளுமன்ற உறுப்பினர் அநுர பிரியதர்ஷன யாப்பா தலைமையில் கூடிய அரசாங்க நிதி பற்றிய குழுக் கூட்டத்தில் 2011ஆம் ஆண்டு 13ஆம் இலக்க மாகாண சபைகள் (முத்திரைத் தீர்வையைக் கைமாற்றுதல்) சட்டத்துக்கான திருத்தத்துக்கு அனுமதி வழங்கப்பட்டது. இதற்கமைய யாராவது ஒரு நபரினால் உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்தின் கணக்கிற்கு மேலதிகமாகச் செலுத்தப்பட்ட அல்லது பிழையாகச் செலுத்தப்பட்ட ஏதேனும் முத்திரைத் தீர்வையை மீளளிப்பதற்காக ஏற்பாடு செய்வது இந்தத் திருத்தத்தின் சட்டப்பயனாகும்.

அத்துடன், 2008ஆம் ஆண்டின் 14ஆம் இலக்க செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டங்கள் சட்டத்தின் கீழ் கொழும்புத் துறைமுக விரிவாக்கலின் கீழான மேற்குக் கொள்கலன் முனையத்துக்கான அபிவிருத்தித் திட்டத்துக்கு வரி விலக்கு வழங்குவது குறித்த 2021 நவம்பர் 15ஆம் திகதியுடைய 2254/2 அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலுக்கும் இக்கூட்டத்தில் அனுமதி வழங்கப்பட்டது.

இதன் ஊடாக, குறிப்பிட்ட திட்டத்துக்கான இருபத்தைந்து வருட காலத்துக்கு வரி விலக்களிக்கப்படுவதுடன், பெறுமதி சேர் வரி, துறைமுக மற்றும் விமான நிலைய அபிவிருத்தி வரி, செஸ் வரி மற்றும் சுங்கத் தீர்வை என்பன 05 வருடங்களுக்கு விலக்களிக்கப்படுகின்றன. இதில், முதலீட்டு ஊக்குவிப்புச் சபையின் புதிய தலைவர் ராஜா எதிரிசூரிய குறித்த விடயத்தை எழுப்பி கருத்துத் தெரிவித்த நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி ஹர்ஷ டி சில்வா, இந்த வரி விலக்கானது பொருளாதாரப் பின்னடைவுகளைச் சந்தித்துள்ள நாட்டுக்கு எந்தளவுக்குப் பொருத்தமாக அமையும் எனக் கேள்வியெழுப்பினார். தற்போதைய சூழலில் ஏனைய நாடுகளுடன் போட்டியிடும் வகையில் இவ்வாறான வரிச்சலுகைகளை வழங்குவது அவசியமானது என நாடாளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் ரஞ்சித் பண்டார சுட்டிக்காட்டினார்.

இக்கூட்டத்தில் இராஜாங்க அமைச்சர்களான விதுர விக்கிரமநாயக்க, கஞ்சன விஜேசேகர, இந்திக்க அனுருத்த மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களான எம்.ஏ.சுமந்திரன், கலாநிதி ஹர்ஷ டி சில்வா, விஜித ஹேரத், முஜிபுர் ரஹ்மான், காவிந்த ஜயவர்தன, நளின் பெர்னாண்டோ, பிரமித பண்டார தென்னகோன், பேராசிரியர் ரஞ்சித் பண்டார, கலாநிதி சுரேன் ராகவன், அனூப பஸ்குவல், இசுறு தொடங்கொட ஆகியோர் கலந்துகொண்டனர்.

# பெருந்தோட்டத்துறை சீரழிவை தடுக்க உடனடி நடவடிக்கை அவசியம்

## சுஜித் சஞ்சய பெரேரா எம்.பி. வலியுறுத்து

பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சரும் தொழில் அமைச்சரும் தலையிட்டு பெருந்தோட்டத்துறையில் ஏற்பட்டுள்ள சீரழிவு நிலையைத் தீர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டும். மேலும், கோட்டாபய ராஜபக்ஷவின் மோசமான முடிவினால் பெருந்தோட்டக் கைத்தொழில் முடிவுக்கு வந்துள்ளது என ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் சுஜித் சஞ்சய பெரேரா தெரிவித்துள்ளார்.

எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று (10) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துவெளியிடும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது,

இந்த அரசாங்கம் ஆட்சிக்கு வந்ததும் பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு 1000 ரூபா சம்பளம் வழங்கப்படும் என சுபீட்சத்தின் தொலைநோக்கில் குறிப்பிடப்பட்டுள்ளது. எவ்வாறாயினும், ஆட்சிக்கு வந்து இரண்டு வருடங்கள் கடந்துள்ள நிலையில், தோட்டத் தொழிலாளர் சமூகத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் எம்.பி.க்கள் கொடுத்த வாக்குறுதிகள் குறித்து பேசுவதில்லை.

நீதிமன்ற தீர்ப்பினைத் தொடர்ந்து தொழிற்சங்கங்களுக்கும் முதலாளிகளுக்கும் இடையில் கூட்டு ஒப்பந்தம் நடைமுறைப்படுத்தப்படுவதில்லை. இதனால் பாரிய சிக்கல்கள் எழுந்துள்ளன.

அந்த உடன்படிக்கையுடன் தோட்டத் தொழிலாளர்களின் சம்பளப் பிரச்சினைகள், நலன்புரிப் பிரச்சினைகள் உள்ளிட்ட சகல விடயங்களும் பேசித் தீர்க்கப்பட்ட நிலையில் பல பெரிய பிரச்சினைகள் எழுந்துள்ளன. எவ்வாறாயினும், அண்மைய தீர்மானங்கள் மற்றும் நீதிமன்ற உத்தரவுகளினால் கூட்டு ஒப்பந்தம் அமுல்படுத்தப்படாது மற்றும் தோட்டப் பிரச்சினைகளை கலந்துரையாடுவதற்கு தொழிற்சங்கங்கள் முன்வந்தாலும் கம்பனிக்காரர்கள் முன்வருகிறார்கள் இல்லை. இங்கு நிச்சயமாக தோட்டத் தொழிலாளர்கள் பாரிய பிரச்சினையை எதிர்கொள்கின்றனர்.

தோட்டத் தொழிலாளர்கள் 26 நாட்கள் வேலை செய்ய வேண்டிய நிலையில் ஒரு நாளைக்கு 750 ரூபா கொடுப்பனவாகப் பெறுகின்றனர். 26 வேலை நாட்களை வழங்க வேண்டும் என்ற சட்டத்தை தோட்டக் கம்பனிகள்




நடைமுறைப்படுத்துவதில்லை. 15 முதல் 20 நாட்கள் முறையே அமுல்படுத்தப்பட்டு வருகிறது. இவர்களால் கடந்த காலத்தில் பெற்ற சம்பளத்தைக்கூட பெற முடியவில்லை.

ரூ.1000 கொடுக்கும்போது தொழிலாளர்களுக்கு நிபந்தனை விதிக்கப்படுகிறது. தேயிலைத் தோட்டங்களில் 15 கிலோ தேயிலை கொழுந்து பறிக்க வேண்டும், அதன் பிறகு மேலும் பத்து கிலோகிராம் கொழுந்து பறிக்க வேண்டும். அல்லது 250 மரங்களை வெட்ட வேண்டிய நிலைக்கு உட்பட்டுள்ளனர். இறப்பர் பால் தொழிலுக்கு தற்போது 350 மரங்களை வெட்ட அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அங்கு ஒரு நாளில் அடைய முடியாத இலக்கு ஒரு தனி நபருக்கு வழங்கப்படுகிறது. தோட்ட உரிமையாளர்கள் தங்களுடைய வேலை நாட்களைக் குறைக்கும் நடவடிக்கையில் இறங்கியுள்ளனர். இது பாரிய அநீதி. நான் தொழிலாளர் அமைச்சிடம் முறைப்பாடு செய்து சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் பேசினேன். எப்பொழுதும் தொழிற்சங்கத் தலைவர்களாகத் தோன்றியபோதிலும், அரசாங்கம் எந்தவொரு சாதகமான பதிலையும் காட்டவில்லை. மேலும், தோட்டக் கம்பனிகளுடன் பேச்சுவார்த்தை நடத்த எவரும் தலையிடுவதில்லை.

இந்த அநியாயமான சூழ்நிலையில் தோட்டத் தொழிலாளர்கள் வேலையிலிருந்து வெளியேறும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சரும், தொழில் அமைச்சரும் தலையிட்டு பெருந்தோட்டத்துறையில் ஏற்பட்டுள்ள சீரழிவு நிலையைத் தீர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டும். மேலும், கோட்டாபய ராஜபக்ஷவின் மோசமான முடிவினால் பெருந்தோட்டக் கைத்தொழில் முடிவுக்கு வந்துள்ளது. கோட்டாபய ராஜபக்ஷ 24 மணித்தியாலங்களில் உரம் தொடர்பாக மேற்கொண்ட தீர்மானத்தின்போது, தேயிலை பயிர்ச்செய்கை மற்றும் இறப்பர் பயிர்ச்செய்கை கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது என்பது தெளிவாகிறது.

# அஸ்ஹர் பாடசாலையின் அதிபர் குற்றமற்றவரென நிரூபணம்


(இக்பால் அலி)

அக்குறணை அல்- அஸ்ஹர் தேசிய பாடசாலையின் முன்னாள் பிரதி அதிபர் சகல குற்றச்சாட்டுகளில் இருந்தும் குற்றமற்றவர் எனக் குறிப்பிட்டு விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

2017ஆம் ஆண்டு அக்குறணை தேசிய கல்லூரிக்கு 06ஆம் தரத்துக்கு மாணவர்களை சேர்த்துக் கொள்வதற்கான நேர்முகப் பரீட்சையின்போது பணம் அறவிட்டதாகக் கூறி அப்போதைய பிரதி அதிபர் திருமதி டி. எஸ். ருக்கையாவுக்கு எதிராக இலஞ்சம் அல்லது ஊழல் குற்றம் பற்றிய குற்றச்சாட்டினை புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவினரால் வழக்கு தொடரப்பட்டிருந்த நிலையில் கடந்த 5 வருடங்களாக விசாரிக்கப்பட்டு வந்தது. மேற்படி வழக்கு கொழும்பு நீதி மன்றத்தினால் கடந்த மாதம் 27 ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது, அனைத்து குற்றச் சாட்டுகளில் இருந்தும் பிரதிவாதியை நீதிபதி தமித் தொட்டவத்த விடுதலை செய்து தீர்ப்பு வழங்கினார். பிரதிவாதி தரப்பில் ஜனாதிபதி சட்டத்தரணி அனில் சில்வா ஆஜரானார்.

# சிங்கபுர கால்வாயில் குடைசாய்ந்தது பஸ்

## தெய்வாதீனமாக உயிர்பிழைத்த ஆடைத்தொழிற்சாலை ஊழியர்கள்



பொலன்னறுவை- சிங்கபுர வீதி அலிவங்குவ என்ற இடத்தில் நேற்று (10) காலை பஸ் குடைசாய்ந்ததில் தெய்வாதீனமாக அதில் பயணித்தோர் உயிர்பிழைத்துள்ளனர்.

ஹிங்குரங்கொட பன்சல்கொடெல்ல என்ற பகுதியிலுள்ள ஆடைத் தொழிற்சாலையொன்றுக்கு தொழிலாளர்களை ஏற்றிச்சென்ற பஸ் ஒன்றே விபத்துக்குள்ளாகியுள்ளது. இந்த விபத்து நிகழ்ந்தபோது பஸ்ஸில் 30 பேர் பயணித்துள்ளனர். அவர்களில் ஏழுபேர் சிறு காயங்களுக்குள்ளாகியுள்ளனர்.

# அத்தியாவசியப் பொருட்களை பதுக்கி விற்பனை செய்யும் வர்த்தகர்களைத் தேடி மாத்தளையில் திடீர் சோதனை

## சட்டத்தின்முன் நிறுத்துவோம் என மாவட்ட நுகர்வோர் அதிகார சபையின் தலைவர் எச்சரிக்கை



(மாத்தளை நிருபர்)

மாத்தளை மாவட்டத்தில் சீமெந்து, விவசாய பசளை, பால்மா ஆகியவற்றை பதுக்கி விற்பனை செய்யும் வர்த்தகர்களை கண்டறிந்து சட்டத்தின் முன் நிறுத்தும் வகையில், மாத்தளை மாவட்டம் முழுவதும் திடீர் சோதனை நடவடிக்கைகளை முன்னெடுத்து வருவதாக அம் மாவட்டத்தின் நுகர்வோர் அதிகார சபையின் தலைவர் ரேணுக குமார தெரிவித்துள்ளார்.

தற்போது நாட்டில் நிலவும் சீமெந்து, விவசாய பசளை, பால்மா ஆகியவற்றுக்கு ஏற்பட்டுள்ள தட்டுப்பாட்டை சாதகமாக பயன்படுத்திக்கொண்டு சூசகமான முறையில் கொள்ளை இலாபமிட்டு விற்பனை செய்யும் வர்த்தகர்களை உடனடியாக கண்டுபிடித்து உரிய நடவடிக்கை எடுக்கும் நோக்குடன் இந்த திடீர் தேடல் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளார்.

அரசின் கட்டுப்பாட்டு விலையான ரூபா ஆயிரத்து 350இற்கு விற்கப்பட வேண்டி சீமெந்து தட்டுப்பாட்டை காரணம் காட்டி, ரூபா ஆயிரத்து 500 தொடக்கம் ஆயிரத்து 850 ரூபா வரைக்கும் விற்பனை செய்வதாக நுகர்வோர் அதிகார சபை தலைவர் ரேணுககுமார தெரிவித்துள்ளார்.

இதேவேளை, இவ்வாறான தட்டுப்பாடுகளை சுட்டிக்காட்டி கொள்ளை இலாம் ஈட்டுவது மாத்திரமன்றி, ஆட்சியிலிருக்கும் அரசை அசௌகரியங்களுக்கு உள்ளாக்கி, இந்த வர்த்தகர்கள், பொதுமக்கள் அரசின் மீது வெறுப்பு ஏற்படும் அளவுக்கு நடந்துகொள்வதாக தெரிவித்துள்ளார்.

எனவே, மாத்தளை மாவட்டத்திலும் நகரிலும் விஷேடமாக மொத்த வியாபார நிலையங்களிலும் தமக்குரிய களஞ்சியசாலைகளில் சீமெந்து, பசளை, பால்மா போன்றவற்றை பதுக்கி வைத்து இரகசியமாக விற்பனை செய்பவர்களைப்பற்றி தங்களுக்கு அறியக்கிடைத்துள்ளதாகவும் இவ்வாறான வர்த்தகம் சம்பந்தமாக உடனடியாக மாத்தளை மாவட்ட நுகர்வோர் அதிகார சபைக்கு தெரிவிக்குமாறு ரேணுககுமார மேலும் தெரிவித்துள்ளார்.

# பதுளை தேசிய மருத்துவமனையில் 20 வைத்தியர்களுக்கு கொரோனா

## 60 நிர்வாகக் குழுவினருக்கும் தொற்று

(பதுளை நிருபர்)

பதுளை பிரதான அரசினர் மருத்துவமனையில் 20 வைத்தியர்கள் உள்ளிட்ட தாதிகள் மற்றும் வைத்திய உதவியாளர்கள் 60 பேருக்கு கொரோனா தொற்று உறுதியாகியுள்ளதாக, அரச வைத்திய சங்கத்தின் பதுளை மாவட்டத் தலைவரும் வைத்திய நிபுணருமான பாலித்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

மேற்படி மருத்துவமனையின் அவசர சிகிச்சைப் பிரிவு, வெளி நோயாளர் பிரிவு, நோயாளர்கள் தங்கியிருந்து சிகிச்சை பெரும் பிரிவு ஆகியவற்றிலுள்ளவர்களான 20 வைத்தியர்கள் உள்ளிட்ட 60 பேருக்கு கொரோனா தொற்று உறுதியாகியுள்ளது. இவர்களில் பலர் தத்தம் வீடுகளிலும், சிலர் சிகிச்சை நிலையங்களிலும் சிகிச்சைப்பெற்று வருகின்றனர்.

தொற்றுக்குள்ளானோருடன், தொடர்புகளைப் பேணிய பலரும் சுயதனிமைப்படுத்தப்பட்ட நிலையிலிருந்து வருவதாகவும், வைத்திய நிபுணர் பாலித்த ராஜபக்ஷ மேலும் கூறினார்.

கொரோனா மரணங்களும் தொற்றுக்குள்ளானோரும் பதுளை மாவட்டத்தில் சடுதியாக அதிகரித்து வருவதால், சுகாதார வழிமுறைகளை முறையாகவும் கிரமமாகவும் பின்பற்றுமாறும், பதுளை மாவட்ட பொது சுகாதாரப் பரிசோதகர்கள் பொதுமக்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

காய்ச்சல், இருமல், தொண்டை நோவு, தடிமன் போன்ற நோய் அறிகுறிகள் இருப்பின் உடனடியாக அவ்வப் பகுதி பொது சுகாதாரப் பரிசோதகர்களை நாடி, உரிய சிகிச்சைகளை பெற்றுக்கொள்ளும்படி, வைத்திய நிபுணர் பாலித்த ராஜபக்ஷ மேலும் தெரிவித்தார்.

பதுளை மாவட்டத்தில் கொரோனா தொற்றுக்குள்ளாகிய சிகிச்சை பலனின்றி உயிரிழந்தோரின் எண்ணிக்கை 600ஐ அண்மித்துள்ளது. அதன்படி, பதுளை- 72 பேர், பண்டாரவளை - 72 பேர், எல்ல – 15 பேர், ஹல்துமுள்ளை – 23 பேர், ஹாலி-எலை – 58 பேர், ஹப்புத்தளை – 43 பேர், கந்தகெட்டிய – 07 பேர், லுணுகலை – 17 பேர், மகியங்கனை – 75 பேர், மீகாகியுல – 17 பேர், பசறை – 38 பேர், ரிதிமாலியத்தை – 19 பேர், சொரணாதொட்டை – 11 பேர், ஊவா – பரணகமை – 40 பேர், வெலிமடை – 85 பேர் என்றடிப்படையில் 592 பேர், ஆரம்பம் முதல் நேற்று (10) வரையிலான காலப்பகுதியில் கொவிட் -19 தொற்றினால் உயிரிழந்துள்ளனர்.

மலையக செய்திகள்
thamilanmalayagam@gmail.com

# சுகாதாரத்துறையின் தொடர் போராட்டத்தால் கினிகத்தேனை வைத்தியசாலையும் ஸ்தம்பிதம்




(இரா.யோகேசன்)

சுகாதார ஊழியர்களின் பணிப்புறக்கணிப்பால் கினிகத்தேனை வைத்தியசாலையும் செயலிழந்து காணப்பட்டது. சுகாதார அமைச்சருடன் இறுதியாக இடம்பெற்ற பேச்சுவார்த்தை தோல்வியடைந்ததை முன்னிட்டு, தொழிற்சங்க நடவடிக்கையை தொடர்ந்து முன்னெடுக்கப்போவதாக தொழிற்சங்கள் அறிவித்திருந்தன.

அந்த வகையிலேயே, கினிகத்தேனை பொது வைத்தியசாலையிலும் சுகாதார ஊழியர்கள் பணிப் புறக்கணிப்பை மேற்கொண்டிருந்த போது வைத்தியசாலைக்கு வருகை தந்த ஒரு சில நோயாளர்கள் அசௌகரியங்களுக்குட்பட்டனர்.

வைத்தியசாலையில் துண்டு வழங்கும் பகுதி மூடப்பட்டிருந்ததோடு மருந்து வழங்கும் பகுதியும் மூடப்பட்டிருந்தது. இந்நிலையில் வைத்தியர் மாத்திரமே நோயாளர்களுக்கான பரிசோதனைகளை மேற்கொண்டு மருந்து துண்டினை வழங்கினார். இருந்தபோதும் மருந்தினை தனியார் மருந்தகங்களிலேயே பெற்றுக்கொள்ளுமாறு அறிவுறுத்தப்பட்டனர்.

வைத்தியசாலையில் வைத்திய பரிசோதனைகள் மாத்திரமே இடம்பெற்றன. இதைத்தவிர ஏனைய ஊழியர்களின் பணிப் பகிஷ்கரிப்பினால் இதர சேவைகள் எவையும் இடம்பெறாததனால் வருகை தந்த ஒரு சில நோயாளர்கள் ஏமாற்றத்துடன் திரும்பியும் சென்றனர். மேலும் நோயாளர்களின் வருகையும் கணிசமான அளவுக்கு குறைவடைந்தும் காணப்பட்டிருந்தது.

இருப்பினும், கினிகத்தேனை நகரத்திலுள்ள தனியார் வைத்திய நிலையங்கள் திறக்கப்பட்டிருந்ததினால் அங்கு நோயாளர்களின் எண்ணிக்கையும் ஓரளவு காணப்பட்டதை அவதானிக்க முடிந்தது.



கந்தகெட்டிய பொலிஸ் பிரிவுக்குட்பட்ட அராவை மீகாகிவுல பிரதேசத்தில் சட்டவிரோதமான முறையில் மது உற்பத்திக்கு பயன்படுத்தும் 72 லீற்றர் கோடாவுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். (படங்கள் : நடராஜன் மலர்வேந்தன்)

# நாட்டின் அனைத்து விவசாயிகளுக்கும் நஷ்டஈடு வழங்கப்பட வேண்டும்

## பொருளாதார மத்திய நிலையங்களின் தலைவர் கோரிக்கை

(நுவரெலியா நிருபர்)

நெல் விவசாயிகளுக்கு மாத்திரம் நஷ்டஈட்டை வழங்க விவசாய அமைச்சு தயாராகி வருகின்றமை எமக்கு பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. இந்த நஷ்டஈட்டை அனைத்து விவசாயிகளுக்கும் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என இலங்கையின் அனைத்து பொருளாதார மத்திய நிலையங்களின் தலைவர் அருணசாந்த ஹெட்டியாராச்சி தெரிவித்துள்ளார்.



நுவரெலியாவில் நேற்று (10) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கின்றபொழுதே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் அங்கு கருத்து தெரிவிக்கையில்:

அரசாங்கம், விவசாயம் தொடர்பாக எடுத்த பிழையான தீர்மானம் காரணமாக இலங்கையில் இருக்கின்ற அனைத்து விவசாயிகளும் பாதிக்கப்பட்டுள்ளனர். பாதிக்கப்பட்ட அனைவருக்கும் நஷ்டஈட்டை வழங்குவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும். அதனைவிடுத்து, நெல் உற்பத்தி செய்கின்ற விவசாயிகளுக்கு மாத்திரம் நஷ்டஈட்டை வழங்க நடவடிக்கை எடுப்பது ஏனைய விவசாயிகளுக்கு இழைக்கப்படுகின்ற பாரிய ஒரு அநீதியாகும்.

ஜனாதிபதியின் நோக்கம் விவசாயிகளை பாதுகாப்பது. எனவே அனைத்து விவசாயிகளும் பாதுகாக்கப்பட வேண்டும் என்பதே எமது நிலைப்பாடாகும். ஜனாதிபதி விவசாயம் தொடர்பாக மேற்கொண்ட தீர்மானத்தை தவறு என்று கூறுவதைவிட பிழையான நேரத்தில் எடுக்கப்பட்ட முடிவாகவே நாங்கள் கருதுகின்றோம்.

நஷ்டஈட்டை வழங்க தீர்மானித்திருப்பது ஒரு சிறந்த விடயம். அதனை நாங்கள் வரவேற்கின்றோம். ஆனால், ஒரு குறிப்பிட்ட விவசாயிகளுக்கு மாத்திரம் வழங்காமல் அனைவருக்கும் வழங்க வேண்டும். அப்படி செய்தாலே அனைத்து விவசாயிகளையும் பாதுகாக்க முடியும் என்பதோடு, ஜனாதிபதியின் நோக்கத்தையும் அடையமுடியும்.

சிறிய விவசாயிகள் அனைவருக்கேனும் இந்த நஷ்டஈட்டை வழங்க வேண்டும். காரணம் சிறிய விவசாயிகள் தங்களுடைய விவசாயத்தின் மூலமாக கிடைக்கின்ற வருமானத்தை கொண்டே அனைத்து தேவைகளையும் பூர்த்தி செய்து கொள்கின்றனர். தங்களுடைய பிள்ளைகளின் கல்வி நடவடிக்கை, உணவு, ஏனைய தேவைகள் அனைத்துக்கும் தங்களுடைய விவசாயத்தை மாத்திரமே நம்பியிருக்கின்றார்கள். எனவே அவர்கள் தற்பொழுது பெரும் பொருளாதார நெருக்கடியை சந்தித்திருக்கின்றார்கள்.

தற்பொழுது இரசாயன உரவகைகள் சந்தையில் கிடைத்தாலும் அதன் விலைகள் பல மடங்கு அதிகரித்துள்ளன. இரண்டாயிரம் ரூபாவுக்கு கொள்வனவு செய்த பசளை இன்று 09 ஆயிரத்து 500 ரூபாவுக்கு வாங்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. 03 ஆயிரத்து 200 ரூபாவுக்கு கொள்வனவு செய்த யூரியா இன்று 23 ஆயிரம் ரூபாவுக்கு கொள்வனவு செய்ய வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது.

எனவே, இந்த விலை அதிகரிப்பு காரணமாக நுவரெலியா விவசாயிகள் உட்பட அனைத்து விவசாயிகளும் பாதிக்கப்பட்டுள்ளார்கள். எனவே, அனைவருக்கும் நஷ்டஈட்டை வழங்கி விவசாயிகளை பாதுகாக்க வேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

# கம்பளையில் ஜீப்வண்டி பள்ளத்தில் வீழ்ந்து விபத்து



(கம்பளை நிருபர்)

கம்பளை - நாவலப்பிட்டி பிரதான வீதி எத்கால்ல பகுதியில் ஜீப் வண்டியொன்று பள்ளத்தில் வீழ்ந்து விபத்து ஏற்பட்டுள்ளது.

கொழும்பிலிருந்து நாவலப்பிட்டி ஊடாக கண்டிக்குச் செல்லும்வேளை, சாரதிக்கு ஏற்பட்ட நித்திரை கலக்கம் காரணமாக இந்த விபத்து ஏற்பட்டுள்ளது.

கம்பளை - நாவலப்பிட்டி பிரதான வீதியில் இருக்கும் டெலிகொம் வயர் செல்லும் மூன்று துண்களை உடைத்துக்கொண்டு பள்ளத்தில் வீழ்ந்துள்ளது.

இதனால் மூன்று துண்களும் பிரதான வீதியில் வீழ்ந்து கிடந்தன. வீட்டுக்கு அருகில் தொழில் செய்து கொண்டிருந்தவர் சிறு காயங்களுடன் உயிர்த் தப்பினார். இந்த விபத்து காரணமாக இரண்டு வீடுகளுக்கு சேதம் ஏற்பட்டுள்ளது. மேலதிக விசாரணைகளை கம்பளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# சுற்றாடல் என்பது உயிரைப் போன்றது அதை அழிப்பது ஒருவகை தற்கொலை

## ஆளுநர் லலித் யூ கமகே தெரிவிப்பு



(கண்டி நிருபர்)

சுற்றாடல் என்பது எமது உயிர் போன்றது. அதனைப் பாதுகாத்தல் வேண்டும். மாறாக, அதனை அழித்தல் ஒருவகை தற்கொலைக்குச் சமமாகும் என மத்திய மாகாண ஆளுநர் லலித் யூ கமகே தெரிவித்தார்.

மத்திய மாகாண கிராம அபிவிருத்தித் திணைக்களம் கண்டி மாவட்டத்தில் பன்விலை பிரதேசத்தில் ஒழுங்குசெய்த மரம் நடும் திட்டம் ஒன்றை ஆரம்பித்துவைத்த பின்னர் உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

மடுல்கலை - வட்டகல பகுதியை ஒரு பழச்செய்கை கிராமமாக மாற்றி அமைக்க நீண்டகாலத் திட்டமொன்று நடைமுறைப்படுத்தப்படவுள்ளது. அத்திட்டத்தில் முதற்கட்டமாகவே இவ்வாறு மரங்கள் நடப்படுவதாகத் தெரிவித்தார். அங்கு காபன் பசளையூடாக செய்கை மேற்கொள்ளப்பட்ட வீட்டுத் தோட்டம் ஒன்றையும் ஆளுநர் பார்வையிட்டார். பொதுமக்களுக்கு மரக்கன்றுகள் இங்கு வைத்து பகிர்ந்தளிக்கப்பட்டன.

இத்திட்டத்தின்கீழ் ஒரு இலட்சம் ரூபா பெறுமதியான மரக்கன்றுகள் நடப்படவுள்ளன. அதற்காக தற்போது 03 ஏக்கர் நிலம் பயன் படுத்தப்பட்டு வருகிறது. சுற்றாடல் என்பது எமது உயிர் போன்றது. அதனைப் பாதுகாத்தல் வேண்டும். அதனை அழிப்பது தம்மைத் தாமே அழித்துக்கொள்ளும் தற்கொலைக்குச் சமமாகும். ஜனாதிபதி சுற்றாடலைப் பாதுகாப்பதற்காக மரங்களை நடும் திட்டம் ஒன்றை முன்னெடுத்து வருகிறார். இதன் ஊடாக இலங்கையில் காடுகளின் அளவை அதிகரிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

தமது உற்பத்திகளை வனவிலங்குகள் அழிப்பதாக சிலர் கவலை தெரிவிக்கின்றனர். ஆனால், எமது சுற்றாடலின் ஒரு பிரிவாகவே வன விலங்குகளைக் கருத வேண்டும். வனவிலங்குகளுக்கும் சில உரிமைகள் உள்ளன - என்றார்.

# நாவுலவில் புதையல் தோண்டிய பூசாரி உட்பட இருவர் கைது

(கண்டி நிருபர்)

நாவுல பொலிஸ் பிரிவில் புதையல் தோண்டிய பூசாரி ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக நாவுல பொலிஸார் தெரிவித்தனர். 46 வயது நபருடன் தம்புள்ளை பிரதேசத்தைச் சேர்ந்த 21 வயது பெண் ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளார்.

மேற்படி, சந்தேக நபர் புதையல் தோண்டுவதுபோல போலியான விம்பத்தை காட்டி, பல பெண்களை ஏமாற்றி திருமணம் செய்துள்ளதாகவும் பொலிஸ் விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது.

இவ்வாறு, 07 பெண்களிடம் திருமணம் செய்வதாக உறுதியளித்து ஏமாற்றியுள்ளதாகவும் தெரியவந்துள்ளது. நவகத்தேகம பிரதேசத்தை வசிப்பிடமாகக் கொண்ட மேற்படி நபர் நவகத்தேகம பொலிஸாரால் தேடப்பட்டு வந்த ஒருவர் எனவும் தெரிவித்துள்ளனர். சந்தேக நபர் புதையல் தோண்டும் பாணியில் பெண்களிடமிருந்து பணம், நகை போன்ற விலை உயர்ந்த பொருட்கள் பலவற்றை கையாடல் செய்துள்ளார் எனவும் முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.



உயர்தர தேயிலைகளை உற்பத்தி செய்வதில் பெயர் பெற்ற ஹேலீஸ் பெருந்தோட்ட கம்பனியின் கீழ் இயங்கும் தலவாக்கலை மட்டுக்கலை தோட்டத்தில் கடந்த மாதம் இடம்பெற்ற இவ்வாண்டுக்கான தேயிலை ஏலத்தில் முதல் தர தேயிலை ஒரு கிலோ, ஆயிரத்து 200 ரூபா விலையைப் பெற்று சாதனை படைத்துள்ளது. (படங்கள் : தலவாக்கலை நிருபர்)

தமிழன்
# வணிக உலகம்
Business world
www.thamilan.lk
GROWTH

# பிரத்தியேகமான இணையவழி விநியோக சேவைக்காக Uber Eats உடன் இலங்கை கடற்றொழில் கூட்டுத்தாபனம் இணைகின்றது

இலங்கை கடற்றொழில் கூட்டுத்தாபனம் (CFC) மற்றும் Uber Eats ஆகியவை ஒன்றிணைந்து எம் பிரபலமான இணையவழி உணவு விநியோக தளத்தின் மூலம் CFC தயாரிப்புகளை விநியோகிக்கும் முகமாக ஒரு கூட்டாண்மையை இன்று அறிவித்தன. இதன்மூலம் CFC தயாரிப்புகளை இணையவழி ஊடாக சந்தைப்படுத்தும் முதலும் தனித்துவமுமான பிரத்தியேகத் தளமாக Uber Eats அமைகின்றது. CFC இன் பம்பலப்பிட்டி விற்பனை நிலையத்தில் நடைபெற்ற அங்குரார்ப்பண நிகழ்வில் அலங்கார மீன்கள், நன்னீர் மீன்கள், இறால்களை வளர்த்தல், கடற்றொழில் துறைமுகங்கள் அபிவிருத்தி, பல நாள் கடற்றொழில் அலுவல்கள் மற்றும் மீன் ஏற்றுமதிக்கான இராஜாங்க அமைச்சர் காஞ்சன விஜேசேகர, இராஜாங்க செயலாளர் ஜயந்த சந்திரசோம, CFC தலைவர் ஸ்டெபான் அபேசிங்க, CFC இன் நிர்வாகப் பணிப்பாளர் சத்துரங்க உடவத்த, இலங்கை கடற்றொழில் துறைமுகங்கள் கூட்டுத்தாபனத்தின் தலைவர் நிலங்க ஜயவர்தன மற்றும் Uber Sri Lankaவின் பொது முகாமையாளர் பாவ்னா டட்லானி ஜயவர்தன ஆகியோர் பங்குபற்றியிருந்தனர்.

இந்த கூட்டு முயற்சியானது, மேம்பட்ட செயல்திறன் மற்றும் நுகர்வோர் அனுபவத்தை உறுதிப்படுத்தும் முகமாக பொது மற்றும் தனியார்துறைகளை நெருக்கமாக ஒன்றிணைக்கும். பலவகையான புதிய மீன்கள், கடல் உணவுகளான இறால், நண்டு மற்றும் கணவாய் மற்றும் உலர் மீன் தயாரிப்புகள் வரையிலான பிரபலமான CFC தயாரிப்புகளை ஒரு பொத்தானைக் அழுத்துவதன்மூலம் நுகர்வோர் அணுகுவதை இது சாத்தியமாக்குகிறது.

இக்கூட்டுமுயற்சி தொடர்பாக கருத்து தெரிவித்த அலங்கார மீன்கள், நன்னீர் மீன்கள், இறால்களை வளர்த்தல், கடற்றொழில் துறைமுகங்கள் அபிவிருத்தி, பல நாள் கடற்றொழில் அலுவல்கள் மற்றும் மீன் ஏற்றுமதிக்கான இராஜாங்க அமைச்சர் காஞ்சன விஜேசேகர, "மாறிவரும் உலகத்திற்கு ஏற்றவாறு நம்மை நாம் மாற்றியமைத்து நமது சிறந்த முயற்சிகளை முன்னோக்கி வைப்பது முக்கியம் என்று நாங்கள் நம்புகிறோம். இணையவழி உணவு விநியோகம் பிரபல்யமடைந்துவரும் நிலையிலும், மக்களால் விரும்பப்படும் நிலையிலும் CFC உடன் மேற்கொள்ளப்பட்டிருக்கும் இக்கூட்டுமுயற்சி தொடர்பாக நாம் மகிழ்ச்சியடைகின்றோம். பொது மற்றும் தனியார் துறைகளுக்கு இடையிலான இந்த ஒத்துழைப்பு முயற்சி ஒரு நேர்மறையான முன்னேற்றமாகும். Uber Eats இன் தொழில்நுட்பத் திறமை மற்றும் விநியோக வலையமைப்புடன் CFC தயாரிப்புகளின் அபிமானம் மற்றும் நம்பிக்கை ஆகியவற்றை இணைக்கும் வலுவான மற்றும் அர்த்தமுள்ள கூட்டாண்மையை நாங்கள் எதிர்நோக்குகிறோம்" - என்றார்.





*Uber Sri Lankaவின் பொது முகாமையாளர் பாவ்னா டட்லானி ஜயவர்தன, அலங்கார மீன்கள், நன்னீர் மீன்கள், இறால்களை வளர்த்தல், கடற்றொழில் துறைமுகங்கள் அபிவிருத்தி, பல நாள் கடற்றொழில் அலுவல்கள் மற்றும் மீன் ஏற்றுமதிக்கான இராஜாங்க அமைச்சர் கௌரவ காஞ்சன விஜேசேகர, இலங்கை கடற்றொழில் கூட்டுத்தாபனத்தின் தலைவர், ஸ்டெபான் அபேசிங்க ஆகியோரையும் Uber Eats இன் கூரியர் பங்குதாரர் முதலாவது உணவு கோரலினை CFC இடமிருந்து பெற்றுக்கொள்வதையும் படங்களில் காணலாம்.*

இந்த கூட்டாண்மையின் முதல் கட்டத்தின் ஒரு பகுதியாக, நாடளாவிய ரீதியிலுள்ள 100 CFC விற்பனை நிலையங்களில் 40+ CFC விற்பனை நிலையங்கள் Uber EATS செயலியில் பட்டியலிடப்பட்டு, ஆரம்பத்தில் கொழும்பு மாவட்டத்தில் விநியோகிக்கப்படும். எதிர்காலத்தில், Uber EATS புதிய பிராந்தியங்களுக்கு விஸ்தரிக்கப்படும்போது, Uber EATS தளத்தில் அதிக CFC விற்பனை நிலையங்கள் பட்டியலிடப்படும்.

இலங்கை கடற்றொழில் கூட்டுத்தாபனத்தின் தலைவர், ஸ்டெபான் அபேசிங்க கருத்து தெரிவிக்கையில், "Uber Eats உடன் இணைவதில் நாங்கள் மிகவும் பெருமையடைகிறோம், ஏனெனில், இது எங்கள் வருவாயை அதிகரிப்பதற்கும் எங்கள் வலையமைப்பை விரிவுபடுத்துவதற்கும் சரியான திசையில் நாம் எடுத்துள்ள ஒரு படியாகும். இலங்கை கடற்றொழில் கூட்டுத்தாபனம் மற்றும் Uber Eats ஆகிய இரண்டும் அனைத்து நுகர்வோருக்கும் மலிவு விலையில் உயர்தர கடல் உணவை வழங்குவதில் அதிசயங்களைச் செய்ய முடியும் என்று நாங்கள் நம்புகிறோம். தற்போதுள்ள மற்றும் அதிகரித்துவரும் எமது விற்பனை நிலையங்களின் வலையமைப்பைப் பயன்படுத்தி Uber Eats ஊடாக முதலில் கொழும்பு மற்றும் கம்பஹா ஆகிய இரு மாவட்டங்களுக்கும் எமது தயாரிப்புகளை விநியோகிக்க திட்டமிட்டுள்ளோம்" - என்றார்.

இந்தக் கூட்டாண்மை இலங்கையில் Uber Eatsஇற்கான பிரபலத்தையும் அபிமானத்தையும் மற்றும் இப்பிராந்தியத்தில் மக்கள் விரும்பும் உணவு விநியோகத் தளமாக வளர்ந்துவருவதையும் பிரதிபலிக்கிறது. மளிகைப் பொருட்களை விநியோகிக்கும் நடவடிக்கைகளை கிட்டத்தட்ட இரண்டு ஆண்டுகளுக்கு முன்னரே கொவிட் பரவலினால் தூண்டப்பட்ட முடக்கத்தின்போது Uber Eats ஆரம்பித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

Uber Sri Lankaவின் பொது முகாமையாளர் பாவ்னா டட்லானி ஜயவர்தன, கூட்டாண்மை குறித்த தனது கருத்துகளைத் தெரிவிக்கும்போது, "CFC போன்ற நம்பகமான மற்றும் மரியாதைக்குரிய ஒரு நிறுவனத்துடன் பங்குதாரர்களாக இருப்பதில் நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம். கடந்த சில ஆண்டுகளாக, இணையவழியாக பதிவுசெய்வதை வசதியானதாகவும், நம்பகத்தன்மையுடனும், தடையற்றதாகவும் மாற்றுவதற்கு வலுவான விநியோக வலையமைப்பை உருவாக்குவதற்கு நாங்கள் தொடர்ந்து பணியாற்றி வருகிறோம். எங்கள் உலகளாவிய தொழில்நுட்ப நிபுணத்துவம் மற்றும் அர்ப்பணிப்புள்ள கூரியர் கூட்டாளர்களால் இயக்கப்படும் எங்கள் தளத்தின் வலிமை மற்றும் திறன் மீதான நம்பிக்கையை இந்த ஒத்துழைப்பு எடுத்துக்காட்டுகிறது. இணையவழி மளிகைப் பொருட்களை விநியோகிப்பதில் அதிகரித்துவரும் நுகர்வோர் விருப்பம் மற்றும் கடல் உணவுகள் மீதான இலங்கையின் ஆழ்ந்த அபிமானம் ஆகியவை நிச்சயமாக இதை ஒரு வெற்றிகரமான கூட்டாண்மையாக மாற்றும்" - என்றார்.

**இலங்கை கடற்றொழில் கூட்டுத்தாபனத்தைப் பற்றி**

இலங்கை கடற்றொழில் கூட்டுத்தாபனம் 1964ஆம் ஆண்டு, 1957ஆம் ஆண்டின் அரச கைத்தொழில் கூட்டுத்தாபன சட்டத்தின் பிரிவு 49இன்படி ஸ்தாபிக்கப்பட்டு 1965இல் அதன் வர்த்தக நடவடிக்கைகளை ஆரம்பித்தது. ஆரம்பத்தில் முழு மீன்பிடித்துறையும் நுகர்வோர் மற்றும் தயாரிப்பாளர் நலனுக்காக மீன் உற்பத்தி மற்றும் வர்த்தகத்தை வழிகாட்டும் மற்றும் ஊக்குவிக்கும் இலங்கை முன்னணி வர்த்தக அமைப்பு என்ற வகையில், மீன்பிடிக் கூட்டுத்தாபனத்தின் கீழ் இயங்கியது.

# 2021 மூன்றாவது காலாண்டில் என்றுமில்லாத சிறந்த நிதிச் செயல்திறனைப் பதிவுசெய்துள்ள Expolanka ஹோல்டிங்ஸ்

அதன் லொஜிஸ்டிக்ஸ் துறையின் சிறப்பான செயல்திறனால் உந்தப்பட்டு, Expolanka Holdings PLC 2021 டிசம்பர் 31ஆம் திகதியுடன் முடிவடைந்த மூன்று மாதங்களில் (3QFY2021) அதன் வலுவான காலாண்டு நிதிச் செயல்திறனை வெளிப்படுத்தியுள்ளது.

முந்தைய நிதியாண்டின் (3QFY2020) மூன்றாவது காலாண்டுடன் ஒப்பிடுகையில், எக்ஸ்போ குழும வருவாய் 204.9 பில்லியன் ரூபாவாகும், இது ஆண்டுக்கு ஆண்டு (YoY) நிலுவையிலுள்ள 254% வளர்ச்சியைக் குறிக்கிறது. இதேபோல், குழுமத்தின் மொத்த இலாபம் காலாண்டில் 38.7 பில்லியன் ரூபாவாகும், 299% ஆண்டு அதிகரித்து, வரிக்குப் பிந்தைய குழு இலாபம் (PAT) 405% ஆண்டு அதிகரித்து 23.0 பில்லியன் ரூபாவாக அமைந்திருந்தது.

EXPOLANKA HOLDINGS PLC

Expolanka Holdings PLCயின் நிறைவேற்றுப் பணிப்பாளரும் குழுமத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரியுமான ஹனிப் யூசூப், "இந்த குறிப்பிடத்தக்க நிதிச் செயற்பாடு, ஒரு காலாண்டில் என்றுமில்லாத வகையில், Expolankaவின் மூலோபாயம், சுறுசுறுப்பு மற்றும் உறுதியான அடிப்படைகளின் மகத்தான அங்கீகாரமாகும். "இந்த செயல்திறன் முன்னெப்போதுமில்லாத மற்றும் விரைவான மாற்றத்தின்போது அடையப்பட்டது என்பதைக் கருத்திற்கொள்வது மிகவும் குறிப்பிடத்தக்கது, இதில் எங்கள் முக்கிய சந்தைகள் குறிப்பிடத்தக்க மாற்றத்தைக் கண்டுள்ளன. குழுமத்தின் முக்கிய நுகர்வோர் சந்தையான வட அமெரிக்கா சிறப்பாக செயல்பட்டது, அதேநேரத்தில் ஐரோப்பிய மற்றும் ஆசிய சந்தைகளும் திறக்கப்படுகின்றன" என கூறினார்.

சந்தைகள் ஆற்றல்மிக்கவை மற்றும் தொடர்ந்து வளர்ச்சியடைந்து வருகின்றன, மேலும் Expolanka எங்களின் நிரூபிக்கப்பட்ட வளர்ச்சி மூலோபாயத்தைத் தொடர்வதன் மூலம் இந்த மாற்றங்களை வழிநடத்தும், அதேநேரத்தில் வணிகத்தின் அடிப்படைகளில் கவனம் செலுத்துகிறது மற்றும் எங்கள் சுறுசுறுப்புக்கு மதிப்பளிக்கும். எங்களின் மதிப்புமிக்க பங்குதாரர்கள் அனைவருக்கும் தொடர்ச்சியான மதிப்பு உருவாக்கத்தை உறுதிசெய்வதற்காக, ஒரே ஒருமைப்பாட்டுடன் வாய்ப்புகளைப் பயன்படுத்தவும் குழு எதிர்பார்க்கும்.

லொஜிஸ்டிக்ஸ் துறையின் சிறப்பான செயல்திறன் அந்தக் காலகட்டத்தில் குழுமத்தின் வளர்ச்சிக்கு முக்கிய உந்துதலாக இருந்தது. இந்தத் துறையின் வருவாய் 203.7 பில்லியன் ரூபா - 255% ஆண்டு முன்னேற்றம், மொத்த இலாபம் 38.4 பில்லியன் ரூபா - ஆண்டுக்கு 303% அதிகரிப்பு மற்றும் வரிக்குப் பிந்தைய இலாபம் 23.0 பில்லியன் ரூபா, கடந்த காலாண்டில் (3QFY2021) 384% ஆண்டு வளர்ச்சி விகிதத்தைப் பிரதிபலிக்கிறது.

குழுமத்தின் சிறப்பான முடிவுகள் அதன் தனித்துவமான வாடிக்கையாளர்களை மையமாகக்கொண்ட மூலோபாயத்தால் இயக்கப்பட்டன, இது காற்று மற்றும் கடல் உற்பத்திப் பொருட்கள் தயாரிப்புகளில் விரிவாக்கப்பட்ட தொகுதி களை செயல்படுத்தியது. இது நிறுவனம் தனது நிதி அடிப்படை யிலான பங்கை தொடர்ந்து அதிகரிக்கவும், மதிப்புமிக்க புதிய மூலோபாய கணக்குகளை ஈர்க்கவும் உதவியது. நிறுவனத்தால் சேவையாற்றும் வாடிக்கையாளர் கோப்புறை (Portfolio) இப்போது பன்முகப்படுத்தப்பட்டுள்ளது, வலுவானது மற்றும் பல்வேறு முக்கிய முன்னேற்றங்களில் பல முன்னணி உலகளாவிய பிராண்டுகளை உள்ளடக்கியது.

இந்த செயல்திறன் நிறுவனத்தின் பிராந்திய விரிவாக்க உத்தியின் ஒப்புதலாகவும் இருந்தது. இலங்கை மற்றும் இந்தியா போன்ற ஸ்தாபிக்கப்பட்ட சந்தைகளும் சிறப்பாகச் செயற்பட்ட அதேவேளை, தூரகிழக்கு சந்தைகள் வலுவான வளர்ச்சியைக் கண்டது குறிப்பிடத்தக்கது.

தொற்றுநோயிலிருந்து இன்னும் மீண்டு வந்தாலும், குழுமத்தின் விருந்தோம்பல் துறையானது காலாண்டில் அதன் செயல்திறனை ஒருங்கிணைத்து, 298 மில்லியன் ரூபாவாகவும், ஆண்டு முன்னேற்றம் 243%ஆக அமைந்திருந்தது. நிறுவனத்தால் மேற்கொள்ளப்படும் செயலூக்கமான, நெகிழ்ச்சியான மற்றும் நீண்டகால கவனம் செலுத்தும் அணுகுமுறை வணிகம் முழுவதும் செயல்பாட்டுத் திறனை இயக்கியுள்ளது.

முதலீட்டுத் துறையின் வருவாய் காலாண்டில் 917 மில்லியன் ரூபா, 92% ஆண்டு வளர்ச்சி, ஏற்றுமதி செயல்பாடு முக்கிய பங்களிப்பாக உள்ளது. நிறுவனத்தின் கோப்புறையில் கவனம் செலுத்துவது துறையின் மேம்பட்ட செயல்திறனை செயல்படுத்தியது. குறிப்பிடத்தக்க வகையில், Expolankaவின் IT வர்த்தகம் இந்த வருடத்தில் கணிசமான ஈர்ப்பைப் பெற்றது.

அதன் நிதிச் செயல்பாட்டின் மேம்பாடுகளுடன், அந்தக் காலகட்டத்தில், குழுவானது அதன் சுற்றுச்சூழல், சமூக மற்றும் ஆளுகை (ESG) முயற்சிகளில் கணிசமான முன்னேற்றத்தையும் பதிவுசெய்தது. உதாரணமாக, பெண்கள் வலுவூட்டலுக்கான குழுவின் அர்ப்பணிப்பை உறுதிப்படுத்தும் வகையில், Expolanka இலங்கையில் தகுதியான பெண் தொழில்முயற்சியாளர்களுக்கு நிதி உதவி மற்றும் தொழில்நுட்ப நிபுணத்துவத்தை வழங்குவதன் மூலம் அவர்களை மேம்படுத்துவதற்கும் வலுவூட்டுவதற்கும் ஒரு திட்டத்தை ஆரம்பித்தது.

Expolanka Holdings PLC என்பது லொஜிஸ்டிக், விருந்தோம்பல் மற்றும் முதலீடுகளில் வலுவான இருப்பைக் கொண்ட ஒரு சர்வதேச நிறுவனமாகும். குழுமம் 1992இல் சர்வதேச சந்தைகளுக்கு செல்லத் தொடங்கியது மற்றும் இப்போது ஆசியா, ஐரோப்பா, ஆபிரிக்கா மற்றும் வட அமெரிக்காவில் செயல்படுகிறது. அதன் சர்வதேச இருப்பு இப்போது 32 நாடுகளில் பரவியுள்ளது. 2011இல், Expolanka கொழும்பு பங்குச் சந்தையில் பட்டியலிடப்பட்டது, மேலும் அதன் முக்கிய வணிகத்தில் கவனம் செலுத்துவதற்காக 2013இல் குறிப்பிடத்தக்க மறுசீரமைப்பு செயல்முறைக்கு உட்பட்டது.

# சர்வதேச சந்தைக்கு கொண்டுசெல்லப்பட்ட இலங்கையின் dash வர்த்தக நாமம்

இலங்கையின் முன்னணி டிட்டர்ஜன்ட் மற்றும் சுத்திகரிப்பான்களுக்கான பேர் போன dash வர்த்தக நாமத்தின்கீழ் பல்வேறு உற்பத்திகளை உற்பத்திசெய்து விநியோகித்துவரும் மல்ட்டிகெமி இன்டர்நெஷனல் நிறுவனம் தமது உற்பத்திகளை சர்வதேச சந்தைக்கு ஏற்றுமதிசெய்யும் பணியை ஆரம்பித்துள்ளது. dash உற்பத்திகளுக்கு தற்பொழுது வெளிநாட்டவர்கள் மத்தியிலும் நல்ல வரவேற்பு கிடைத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. உற்பத்திப் பொருள் ஏற்றுமதி இலங்கையின் பொருளாதாரத்துக்கு அத்தியாவசிய தேவையாக மாறியுள்ள நேரத்தில் மல்ட்டிகெமி இன்டர்நெஷனல் நிறுவனம் மேற்கொண்டுள்ள முக்கியத்துவமிக்க படிநிலையாக இதனைக் குறிப்பிட முடியும். மல்ட்டிகெமி இன்டர்நெஷனல் நிறுவனம் 2021ஆம் ஆண்டில் பிஜி, தென்னாபிரிக்கா மற்றும் மாலைதீவு உள்ளிட்ட சில நாடுகளுக்கு னயளா உற்பத்திகளை ஏற்றுமதிசெய்வதற்கு தொடங்கியுள்ளதோடு, விரைவில் மேலும் பல நாடுகளுக்கு அதனை விரிவுபடுத்துவதற்கு எதிர்பார்த்துள்ளது. மோட்டார் வாகனங்கள், குடிமனைகள் மற்றும் துணிச் சலவை ஆகிய மூன்று துறைகளுக்கும் ஏற்புடைய பல்வேறு உற்பத்திகள்




dash உற்பத்திகளின்கீழ் அடங்குகின்றன. ISO 9001 : 2015 உள்ளிட்ட பல்வேறு தரச் சான்றிதழ்களை வென்றுள்ளதோடு 28 ஆண்டுகளுக்கு மேற்பட்ட பாரம்பரியத்தைக்கொண்டுள்ள மல்ட்டிகெமி இன்டர்நெஷனல் இச்சகல உற்பத்திகளையும் சூழல் நேயமிக்கதாகவும் சுகாதாரப் பாதுகாப்புடனும் உற்பத்தி செய்து வருகிறது. மோட்டார் வாகனங்களை சுத்தப்படுத்தும் உற்பத்திப் பிரிவின் சந்தை முன்னோடியான dash வர்த்தக நாமத்தை மேலும் விரிவுபடுத்தும் வகையில் Spring Time எயார் ப்ரெஷ்னர் இலங்கைச் சந்தையின் முதற்தர நாமமாக உயர்ந்துள்ளது. குறிப்பாக, போமர்லின் அற்ற Gliz Dish Wash தற்பொழுது உள்நாட்டு, வெளிநாட்டு மக்களைக் கவர்ந்துள்ளதுடன், ஏற்றுமதிச் சந்தையில் வெற்றிநடை போட்டுக்கொண்டிருக்கிறது. Safematic துணிச் சலவை திரவம், Magic Softஆடைகள் கண்டிஷனர், Safeol மேற்பரப்பு சுத்தமாக்கி, Comox மலசலகூட சுத்தமாக்கி போன்றவை. மல்ட்டிகெமியின் மேலும் சில உற்பத்திகளாகும்.

''உள்நாட்டுச் சந்தையை வெற்றிகொண்ட நாம், சர்வதேச சந்தையை வெற்றிகொள்வதற்குத் தயாராக உள்ளோம். எமது உற்பத்திகளுக்கு வெளிநாட்டவர்கள் மத்தியிலும கிராக்கி உள்ளதை அறிவோம். இலங்கை உற்பத்திகளை சர்வதேசத்துக்கு கொண்டுசெல்வதற்காக அர்ப்பணிப்புடன் உழைக்கின்ற எமது ஊழியர்களுக்கு இந்நேரத்தில் எனது நன்றியை தெரிவித்துக்கொள்கின்றேன்" என மல்ட்டிகெமி நிறுவனத்தின் பொது முகாமையாளர் அமில விஜேசிங்க தெரிவித்தார் மல்ட்டிகெமி இன்டர்நெஷனல் 2022ஆம் ஆண்டில் பல்வேறு புதிய உற்பத்திகளை அறிமுகப்படுத்துவதற்கு தயாராகி வருகிறது. சகல dash உற்பத்திகளும் உரிய ஆராய்ச்சிகள் மற்றும் திறன் முன்னேற்றச் செயற்பாடுகளுக்குப் பின்னரே சந்தைப்படுத்தப்படுவதால், வாடிக்கையாளர்களின் வரவேற்பைப் பெற்று அவர்களின் தேவைகளை பூர்த்தி செய்கின்றமை குறிப்பிடத்தக்கது.

திகதி 09.02.2022
புதன்கிழமை www.nlb.lk
உத்தியோகபூர்வ முடிவுகள்
NLB

மஹஜன சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் : 4673
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை
ரூ. 10,803,800.00
ஆங்கில எழுத்து D
வெற்றி இலக்கங்கள் 3 1 7 2 9 2
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு
ரூ. 41,460,081.00

கொவிசெத
Govisetha
சீட்டிழுப்பு இலக்கம் : 2968
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை
ரூ. 6,234,780.00
ஆங்கில எழுத்து K
வெற்றி இலக்கங்கள் 05 08 46 70
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு
ரூ. 64,332,489.20

Mega POWER
கோடி 10
மெகா பவர்
சீட்டிழுப்பு இலக்கம் 1021
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 3,985,680.00
அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ. 226,805,550.00
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
ஆங்கில எழுத்து T
சுப்பர் இலக்கம் 14
வெற்றி இலக்கங்கள் 17 29 49 58
மெகா அதிர்ஷ்ட இலக்கம் 07904

தன நிதானய
சீட்டிழுப்பு இலக்கம் : 703
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை
ரூ. 2,752,340.00
ஆங்கில எழுத்து B
வெற்றி இலக்கங்கள் 41 53 64 78
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு
ரூ. 96,560,290.00

NLB ஹந்தஹன
ராசி சுப பலன்
சீட்டிழுப்பு இலக்கம் : 0014
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை
ரூ. 5,138,580.00
இலக்கினம் விருச்சிகம்
வெற்றி இலக்கங்கள் 04 37 38 48
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு
ரூ. 2,670,159.44

ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் : 1209
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை
ரூ. 2,060,520.00
வெற்றி இலக்கினம் கடகம்
வெற்றி இலக்கங்கள் 7 4 6 8 3 0
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு
ரூ. 12,088,131.20

தேசிய லொத்தர் சபை
National Lotteries Board
இலக்கம் 32, கொழும்பு 01
தொலைபேசி: 0114 607 000, 0112 324 324
பெக்ஸ்: 0114 669 416

# சுகாதார தொழிற்சங்கங்கள் ஒன்றிணைந்து வவுனியாவில் கவனயீர்ப்புப் போராட்டம்









(வவுனியா நிருபர்)

சம்பளப் பிரச்சினை உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து சுகாதார தொழிற்சங்கங்கள் ஒன்றிணைந்து வவுனியாவில் கவனயீர்ப்புப் போராட்டமொன்றை முன்னெடுத்திருந்தனர்.

நாடளாவிய ரீதியில் தாதியர்கள், பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் உள்ளிட்ட 16 தொழிற்சங்கங்களைச் சேர்ந்தோர் பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து கடந்த திங்கட்கிழமை முதல் பணிப்புறக்கணிப்பு மற்றும் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

அதற்கு ஆதரவு தெரிவித்து வவுனியா வைத்தியசாலைக்கு முன்பாக நேற்று (10) குறித்த ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது. இதில் சுகாதார சேவையைச் சேர்ந்த 16 தொழிற்சங்கங்களின் பிரதிநிதிகள் கலந்துகொண்டனர்.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள், "சம்பளப் பிரச்சினைக்கு உடனடியாகத் தீர்வு வேண்டும், சுகாதார நிர்வாக சேவையை நிறுவுக, உரிய காலப்பகுதியில் பதவி உயர்வு வழங்கு, சம்பள முரண்பாட்டினை நீக்கு, மருந்துகளின் விலைகளை உடனடியாக குறை" உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து கோஷங்களை எழுப்பியதுடன், சுலோக அட்டைகளையும் ஏந்தியிருந்தனர்.

அத்துடன், தமது கோரிக்கைக்கு சுகாதார அமைச்சு சாதகமான பதிலை வழங்காதுவிடின் தமது போராட்டம் தொடரும் எனவும் இதன்போது அவர்கள் மேலும் தெரிவித்தனர்.

# வவுனியா பல்கலைக்கழகத்துக்கு ஜனாதிபதி இன்று விஜயம்

(வவுனியா நிருபர்)

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ வவுனியாவுக்கு இன்று (11) விஜயம் செய்யவுள்ளார்.

வவுனியா, பம்பைமடு பகுதியில் அமைந்துள்ள வவுனியா பல்கலைக்கழகத்தின் அங்குரார்ப்பண நிகழ்வுக்கே விஜயம் செய்யவுள்ளார்.

வவுனியா பல்கலைக்கழகமானது, 1991ஆம் ஆண்டு வடமாகாண இணைந்த பல்கலைக்கழக கல்லூரியாக உருவாக்கப்பட்டு, 1997ஆம் ஆண்டு யாழ். பல்கலைக்கழக வவுனியா வளாகமாக தரமுயர்த்தப்பட்டது. கடந்த ஓகஸ்ட் முதலாம் திகதி முதல் இலங்கையின் 17ஆவது பல்கலைக்கழகமாக இது தரமுயர்த்தப்பட்டிருந்தது.

இதன் உத்தியோகபூர்வ செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில், அதனை அங்குரார்ப்பணம் செய்துவைப்பதற்காக ஜனாதிபதி விஜயம் செய்யவுள்ளார். இதன்போது முன் அனுமதிபெற்ற மட்டுப்படுத்தப்பட்ட அளவிலானவர்களுக்கு மட்டுமே நிகழ்வில் கலந்துகொள்ள அனுமதி வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

வடக்கு
செய்திகள்
thamilannorth@gmail.com

# மீசாலையில் இளம் குடும்பப்பெண் தூக்கிட்ட நிலையில் சடலமாக மீட்பு

(சாவகச்சேரி நிருபர்)

மீசாலை வடக்கு பகுதியிலுள்ள வீடொன்றிலிருந்து நேற்று முன்தினம் (09) புதன்கிழமை இரவு தூக்கிட்ட நிலையில் இளம் குடும்பப்பெண் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

குறித்த பெண்ணின் கணவர் வீட்டில் இல்லாத சமயம் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது. மீசாலை வடக்கு பகுதியைச் சேர்ந்த 30 வயதான இளம் குடும்பப்பெண்ணே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

மரணம் தொடர்பான மேலதிக விசாரணைகளை சாவகச்சேரி பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

# கோவிற்குடியிருப்பில் கொங்கிரீட் திட்டத்தில் வீதிக்கு அடிக்கல்

(சாவகச்சேரி நிருபர்)



தென்மராட்சி பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட கோவிற்குடியிருப்பு கிராமத்தில் கொங்கிரீட் வீதி திட்டத்தில் தெரிவுசெய்யப்பட்ட வீதிக்கு நேற்று வியாழக்கிழமை (10) அடிக்கல் நாட்டி வைக்கப்பட்டது.

யாழ். மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுத் தலைவர் அங்கஜன் இராமநாதனிடம் கிராம மக்கள் விடுத்த கோரிக்கையின் பயனாக கிராமிய வீதிகளை கொங்கிரீட் வீதிகளாக மாற்றியமைக்கும் திட்டத்தின்கீழ் 20 இலட்சம் ரூபா நிதி ஒதுக்கீட்டில் குறித்த வீதி புனரமைக்கப்படவுள்ளது.

வீதிக்கான அடிக்கல்லை அங்கஜன் எம்.பியின் பிரதிநிதியும், சாவகச்சேரி பிரதேச சபை உறுப்பினருமான தி.தங்கவேலு சம்பிரதாயபூர்வமாக நாட்டி வைத்தார்.

குறித்த திட்டத்தில் அங்கஜன் எம்.பியின் பரிந்துரையின்கீழ் தென்மராட்சி பிரதேசத்தில் அறுபது கிராமிய வீதிகள் கொங்கிரீட் வீதிகளாக அபிவிருத்திசெய்யப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# வருடாந்த பொதுக்கூட்டமும் புதிய நிர்வாகத் தெரிவும்

(சாவகச்சேரி நிருபர்)

சாவகச்சேரி கமநலசேவை நிலையத்துக்குட்பட்ட எழுதுமட்டுவாழ் தெற்கு கமக்கார அமைப்பின் 2022ஆம் ஆண்டுக்கான வருடாந்த பொதுக் கூட்டமும், புதிய நிர்வாகத் தெரிவும் அண்மையில் இடம்பெற்றது.

சாவகச்சேரி கமநல சேவை நிலையத்தின் பெரும்பாக உத்தியோகத்தர் தலைமையில் எழுதுமட்டுவாழ் சிறிய கேணிப் பிள்ளையார் ஆலய மண்டபத்தில் இடம்பெற்ற நிகழ்வில் புதிய தலைவராக சு.ஸ்ரீராமராவ், உப தலைவராக வீ.ஜீவராசா, செயலாளராக இ.தெய்வேந்திரம்பிள்ளை, உப செயலாளராக நா.வல்லிபுரம், பொருளாளராக ச.யோகராசா ஆகியோருடன் மேலும் ஆறு நிர்வாக சபை உறுப்பினர்கள் தெரிவுசெய்யப்பட்டிருப்பதாக கமக்கார அமைப்பின் செயலாளர் தெய்வேந்திரம்பிள்ளை தெரிவித்துள்ளார்.

# ரிப்பர் - மோட்டார்சைக்கிள் விபத்தில் ஒருவர் பலி

(யாழ். நிருபர்)

யாழ்ப்பாணம் - காங்கேசன்துறை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வறுத்தலைவிளான் பகுதியில் ரிப்பர் வாகனமும் மோட்டார் சைக்கிளும் விபத்துக்குள்ளானதில் ஒருவர் ஸ்தலத்திலேயே பலியாகியுள்ளார்.

நேற்றுக் காலை தெல்லிப்பழை சாந்தை வீதி வறுத்தலைவிளான் பகுதியில் மணல் ஏற்றி வந்த ரிப்பர் வாகனமும் மோட்டார்சைக்கிளும் எதிருக்குஎதிரே மோதியதிலேயே இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.


இதன்போது மோட்டார்சைக்கிளில் பயணித்த இளைஞர் ஸ்தலத்திலேயே உயிரிழந்துள்ள நிலையில், மற்றைய இளைஞர் படுகாயமடைந்து தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

விபத்துச் சம்பவம் தொடர்பில் ரிப்பர் சாரதி காங்கேசன்துறை பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இச்சம்பவத்தில் யாழ்ப்பாணம், இளவாலை, உயரப்புலத்தைச் சேர்ந்த 18 வயதுடைய சசிக்குமார் லிசான் என்பவரே உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவரின் சடலம் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ள அதேவேளை, சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை காங்கேசன்துறை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# நடமாடும் கஞ்சா வியாபாரி யாழில் கைது!



(யாழ். நிருபர்)

யாழ். நகரில் நடமாடி கஞ்சா பொதிகளை விற்பனைசெய்த நபரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

சிறிய சிறிய பொதிகளாக பொதிசெய்து, நபர் ஒருவர் யாழ். நகரில் நடமாடி விற்பனைசெய்து வருவதாக இராணுவ புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைத்த இரகசிய தகவலையடுத்து பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டுள்ளது.

அதனடிப்படையில் பொலிஸார் சந்தேகநபரை கைதுசெய்ததுடன், கஞ்சா பக்கெட்டுகளையும் மீட்டுள்ளனர்.

சந்தேகநபரை விசாரணைகளின் பின்னர் நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# எழுச்சியின் கரங்கள் பெண்கள் வட்டத்தின் 2ஆவது ஆண்டு விழா - அலுவலகம் திறப்பு





(வவுனியா நிருபர்)

எழுச்சியின் கரங்கள் பெண்கள் வட்டத்தின் இரண்டாவது ஆண்டு விழாவும், அலுவலகத் திறப்பு விழாவும் சிதம்பரநகரில் அமைந்துள்ள கட்டடத்தில் எழுச்சியின் கரங்களின் தலைவர் திருமதி லோகேஸ்வரி விஜயகுமார் தலைமையில் மங்கல விளக்கேற்றலுடன் ஆரம்பமாகி நடைபெற்றது.

வவுனியா பிரதேச செயலக உதவிப் பிரதேச செயலாளர் திருமதி பிரியதர்சினி சஜீவன் பிரதம விருந்தினராக கலந்து சிறப்பித்தார்.

உலகெங்கும் பெண்களின் முன்னேற்றத்துக்காகவும், பெண்களின் ஒடுக்குமுறைகளுக்கு எதிராகப் போராடியும் மரணித்த பெண்களை நினைவுகூர்ந்து மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது. தொடர்ந்து எழுச்சியின் கரங்கள் மாணவர்களின் தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடலும் வரவேற்பு நடனமும் இடம்பெற்றன.

எழுச்சியின் கரங்களின் பொருளாளர் திருமதி பாமினி புருஷோத்தமன் வரவேற்புரையை நிகழ்த்தினார்.

பிரதம விருந்தினர் எழுச்சியின் கரங்களின் அலுவலகத்தை திறந்துவைத்தார். தலைவர் தனது தலைமையுரையில், எழுச்சியின் கரங்கள் தோற்றம் பெற்று வளர்ந்த வரலாற்றை எடுத்துரைத்தார்.

தமிழருவி சிவகுமாரன் தனது சிறப்புரையில் எழுச்சியின் கரங்களின் அவசியம் பற்றியும். கிராம மாணவர்களுக்கான கல்வியின் அவசியம் பற்றியும் சுட்டிக்காட்டினார். பிரதம விருந்தினர் தனதுரையில், பெண்கள் நிறுவனமயப்படுத்தல் ஏன் அவசியம் என்பது பற்றியும், கிராமங்களில் கல்வியின் தேவைபற்றியும் எடுத்துரைத்தார். கோபிதன் காமன்ஸ் முகாமைத்துவ இயக்குனர் திருமதி கோகிலாதேவி அசோக்குமார் தனது கௌரவ விருந்தினர் உரையில், பெண்கள் எதிர்கொள்ளும் சவால்கள் தொடர்பாக தனது வாழ்வினை உதாரணம் காட்டிப் பேசினார்.

அட்சயம் நிறுவனத்தின் தலைவர் கலாபூஷணம் தமிழ்மணி மேழிக்குமரன் தனது சிறப்புரையில் அட்சயம் நிறுவனத்துக்கும் எழுச்சியின் கரங்களுக்குமான தொடர்பினை எடுத்துக் கூறி, அட்சயநிறுவனம் எவ்வாறு எழுச்சியின் கரங்களுக்கு கைகொடுக்கின்றது என்பதனை விவரித்தார்.

அட்சயம் நிறுவன செயலாளர் இ.சஜீந்திரா தனதுரையில், கிராமங்கள்தோறும் பெண்கள் வட்டம் விஸ்தரிக்கப்பட வேண்டியதன் அவசியம் பற்றி விவரித்தார்.

மதுராநகர் பெண்கள் வட்டத்தின் தலைவர் திருமதி நிரஞ்சனிதேவி தவசீலன் தமது அமைப்பின் வளர்ச்சி பற்றி எடுத்துக் கூறினார்.

அட்சய நிறுவன பொருளாளர் அ.அருளானந்தம், சிதம்பரபுரம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ர.நிரோசன் ஆகியோரும் கௌரவ விருந்தினர்களாக கலந்து சிறப்பித்தனர்.

திருமதி.சந்திரா இராஜேஸ்வரனின் தலைமையிலான கவிதா நிகழ்வும் மாணவர்களின் நடன நிகழ்வுகளும் இடம்பெற்றன.

அட்சயம் நிறுவனத்தின் உபதலைவர் இரா.இராஜேஸ்வரன் நிகழ்வுகளை தொகுத்து வழங்கினார்.

எழுச்சியின் கரங்களின் செயலாளர் திருமதி பேபிரகுணா றூபன் நன்றியுரை வழங்க விளையாட்டுப் போட்டிகளில் பங்குபற்றிய மாணவர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டன.

இந்நிகழ்வில் பொது அமைப்புகள், பெண்கள், சிறுவர்கள் என பலர் கலந்துகொண்டனர்.

# முசலி வேப்பங்குளம் கிராமத்தில் மரக்கன்று நடுகை










(மன்னார் நகர் நிருபர்)

இலங்கையின் இயற்கை சூழலை பாதுகாப்பதற்கான படிக்கல் எனும் கருப்பொருளில் மன்னார் கரித்தாஸ் - வாழ்வுதயம் நிறுவனத்தின் அமுலாக்கத்தில் மிசறியோ அமைப்பின் நிதியுதவியுடன் மன்னார் முசலி பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள வேப்பங்குளம் கிராமத்தில் 100 மரக்கன்றுகள் நடும் நிகழ்வு இடம்பெற்றது.

மன்னார் கரித்தாஸ் - வாழ்வுதயம் நிறுவனத்தின் திட்ட இணைப்பாளர் ச.ஜேசுதாஸ் தலைமையில் இடம்பெற்ற குறித்த நிகழ்வில் விருந்தினர்களாக மன்னார் கரித்தாஸ்-வாழ்வுதயம் இயக்குனர் அருட்தந்தை எஸ்.அன்ரன் அடிகளார் மற்றும் வேப்பங்குளம் பள்ளிவாசல் மௌலவி எம்.நதீர் ஆகியோர் கலந்துகொண்டிருந்தனர்.

இதன்போது வேப்பங்குளம் கிராமத்தின் சூழல் பாதுகாப்புக் குழு, இளையோர் சூழல் பாதுகாப்புக் குழு, சிறுவர் சூழல் பாதுகாப்புக் குழு ஆகிய குழுக்களின் உறுப்பினர்களும் கலந்துகொண்டிருந்தனர்.

குறித்த பிரதேசத்தின் பொது இடங்களில் நடுகை செய்வதற்கான மரக்கன்றுகள் பகிர்ந்தளிக்கப்பட்ட நிலையில், வைபவ ரீதியாக பொது இடங்களில் மரக்கன்றுகள் நடுகைசெய்யப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

# பஸ்திபுரியில் புதையல் தோண்டும் நடவடிக்கையில் ஈடுபட்ட மந்திரவாதி உட்பட ஆறு பேர் கைது

(மன்னார் நிருபர்)

மன்னார், வங்காலை பஸ்திபுரி பகுதியில் புதையல் தோண்டும் நடவடிக்கையில் ஈடுபட்டுக்கொண்டிருந்த மந்திரவாதி உள்ளடங்களாக 06 பேர் நேற்று முன்தினம் புதன்கிழமை (09) மாலை வங்காலை பொலிஸாரினால் கைதுசெய்யப்பட்டுள்ளதோடு, புதையல் தோண்ட பயன்படுத்தும் ஒரு தொகுதி உபகரணங்களையும் மீட்டுள்ளனர்.

குறித்த சம்பவம் தொடர்பாக மேலும் தெரிய வருகையில்,

வங்காலை - நானாட்டான் பிரதான வீதி, பஸ்திபுரி பகுதியிலுள்ள வீடொன்றுக்கு பின்பகுதியில் சிலர் புதையல் தோண்டுவதாக வங்காலை பொலிஸாருக்குக் கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் நேற்று முன்தினம் மாலை அப்பகுதிக்கு சென்ற வங்காலை பொலிஸார் புதையல் தோண்டும் நடவடிக்கையில் ஈடுபட்ட 06 பேரை கைதுசெய்துள்ளனர்.

இவர்களில் கண்டியைச் சேர்ந்த சுமார் 50 வயதுடைய மந்திரவாதி ஒருவரும், யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஒருவரும் உள்ளடங்குகின்றனர்.

ஏனைய நான்கு பேரும் வங்காலையைச் சேர்ந்தவர்கள் எனவும் அவர்களில் ஒருவர் ஆசிரியர் எனவும் தெரியவருகின்றது.

மேலும், புதையல் தோண்ட பயன்படுத்தும் ஒரு தொகுதி உபகரணங்கள் மற்றும் மந்திரம் மேற்கொள்ள பயன்படுத்தும் ஒரு தொகுதி பொருட்களும் மீட்கப்பட்டுள்ளன.

கைதுசெய்யப்பட்டவர்கள் தற்போது வங்காலை பொலிஸ் நிலையத்தில் தடுத்துவைக்கப்பட்டு விசாரணைகளுக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றனர்.

விசாரணைகளின் பின் குறித்த சந்தேகநபர்கள் மன்னார் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

படல்கமுவவில் துயரம்

# பெற்றோரின் மூடநம்பிக்கையால் பறிபோனது சிறுவனின் உயிர்





## நோய்வாய்ப்பட்டு உயிரிழந்த பின்னும் தொடர் பிரார்த்தனை; போதகர்களின் வேண்டுகோளால் மருந்து வழங்க மறுப்பு

பண்டாரகம, படல்கமுவ பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஆதிமுல்ல பிரதேசத்தில் வீடொன்றின் அறையொன்றிலிருந்து 10 வயதுச் சிறுவன் சடலமாக மீட்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

அப்பகுதி முழுவதும் துர்நாற்றம் வீசியமை தொடர்பில் பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டையடுத்து குறித்த வீட்டை சோதனையிட்டபோதே குறித்த சிறுவனின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

படல்கமுவைச் சேர்ந்த மலீஷ துலக்ஷன என்ற சிறுவனே உயிரிழந்துள்ளார்.

சிறுவன் கடந்த 7ஆம் திகதி தொண்டை வலியால் பாதிக்கப்பட்டுள்ளதாகவும், நோய் குணமடைவதற்கு பெற்றோர்கள் மத வழிபாடுகளில் ஈடுபட்டதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தப் பிரார்த்தனை நடவடிக்கையின்போது சிறுவன் உயிரிழந்துள்ளதாக தெரிய வந்துள்ளது.

எனினும், சிறுவனின் உயிர் மீட்கப்பட வேண்டும் என்று பெற்றோர்கள் பிரார்த்தனை செய்துள்ளதுடன், மருத்துவ சிகிச்சைக்கு பரிந்துரைக்க எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்று பொலிஸார் தெரிவித்தனர்.

சிறுவன் உயிரிழந்ததைத் தொடர்ந்து வீட்டிலிருந்த தாய், தந்தை மற்றும் பாட்டி ஆகியோரை பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பில் நீர்கொழும்பு நீதவான் நீதிமன்றில் அறிவிக்கப்படவுள்ளதுடன், பிரேத பரிசோதனை ஆரம்பிக்கப்பட்டது.

மத நம்பிக்கையின் அடிப்படையில் சிறுவன் உயிர்த்தெழுவதற்காக பெற்றோர் பிரார்த்தனைசெய்துள்ளனர். சிறுவன் உயிரிழந்தமை தொடர்பில் அயலவர்களுக்கும் அறிவிக்கப்படவில்லையென பொலிஸார் தெரிவித்தனர். இச்சம்பவம் அப்பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

இது தொடர்பில் படல்கமுவ பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# நாட்டின் பல பகுதிகளில் விபத்து; பெண்ணொருவர் உட்பட அறுவர் பலி

*(ரஸீன் ரஸ்மின்)*

நாட்டின் பல பகுதிகளில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை (09) இடம்பெற்ற வீதி விபத்துகளில் வயோதிபப் பெண் ஒருவர் உட்பட 6 பேர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பன்னல - கிரிஉல்ல வீதியின் தலமெஹெர பகுதியில் இடம்பெற்ற வாகன விபத்தில் இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

நேற்று முன்தினம் (09) கிரியுல்லவிலிருந்து பன்னல நோக்கிப் பயணித்த மோட்டார் சைக்கிள் அதே திசையில் பயணித்த பஸ் ஒன்றை முந்திச்செல்ல முற்பட்டபோது எதிர்த்திசையில் வந்த வேன் ஒன்றுடன் மோதியுள்ளது.

விபத்தில் படுகாயமடைந்த மோட்டார் சைக்கிளில் பயணித்தவர் மற்றும் சைக்கிளில் பயணித்த இருவரும் சந்தலங்காவ வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பின்னர் மோட்டார்சைக்கிளை செலுத்திச் சென்ற நபர் உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவர் போபிட்டிய பிரதேசத்தை சேர்ந்த 21 வயதுடையவர் என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

இதேவேளை, முந்தல் கிரியங்கள்ளி - ஆண்டிகம வீதியிலுள்ள அக்கரவெளி கறுப்புப் பாலத்திற்கு அருகில் இடம்பெற்ற வாகன விபத்தில் 52 வயதுடைய பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

நேற்று முன்தினம் (09) சைக்கிளுடன் லொறி ஒன்று மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

விபத்தில் பலத்த காயமடைந்த குறித்த பெண் முந்தல் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவர் புதுக்குடியிருப்பு பத்துளுஓயா பகுதியைச் சேர்ந்தவர் என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

இதேவேளை, (09) நெடுங்கேணி பொலிஸ் நிலையத்திற்கு அருகில் இடம்பெற்ற வாகன விபத்தில் 78 வயதுடைய முதியவர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

நெடுங்கேணி நகரிலிருந்து புளியங்குளம் நோக்கிச் சென்ற தனியார் பஸ்ஸும் அதே திசையில் பயணித்த சைக்கிளும் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

அத்தோடு, நாரம்மலயிலிருந்து குருநாகல் நோக்கி வீதியைக் கடந்த பாதசாரிகள் மீது கார் ஒன்று மோதியதில் மஹவிலச்சிய பிரதேசத்தைச் சேர்ந்த 37 வயதுடைய நபர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இதேவேளை, பெரகல - ஹாலிஎல வீதியில் நேற்றுமுன்தினம் மாலை இடம்பெற்ற விபத்தில் 65 வயதுடைய நபர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

பண்டாரவளையில் இருந்து பதுளை நோக்கி பயணித்த மோட்டார்சைக்கிள் ஒன்று வீதியைக் கடக்க முற்பட்ட பாதசாரி மீது மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

இதேவேளை, கல்நேவ - தம்புத்தேகம வீதியில் புல்னேவ சந்திக்கு அருகில் நேற்றுமுன்தினம் இரவு இடம்பெற்ற வாகன விபத்தில் 41 வயதுடைய நபர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இரண்டு மோட்டார்சைக்கிள்கள் நேருக்கு நேர் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

# வீதியில் தனியாகச் செல்லும் பெண்களிடம் நகைகளைக் கொள்ளையிட்ட அண்ணன் - தம்பி கூட்டணி

## பொலிஸ் விசேட சுற்றிவளைப்பில் கைது



*(எஸ். ஜயசிங்க)*

முச்சக்கரவண்டியில் சென்று வீதிகளில் நடந்து செல்லும் பெண்களிடம் தங்கச் சங்கிலிகளையும் நகைகளையும் நீண்டகாலமாக கொள்ளையிட்டு வந்த சகோதரர்கள் இருவரை பொரலஸ்கமுவவில் வைத்து பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

மேல்மாகாண தெற்கு குற்றத்தடுப்புப் பிரிவினரால் மேற்கொள்ளப்பட்ட விசேட சுற்றிவளைப்பின்போது இவர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

கோணபல என்ற இடத்தைச் சேர்ந்த 28 மற்றும் 29 வயதுடைய இருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். அவர்களிடமிருந்து நான்கு தங்கச் சங்கிலிகள் உட்பட வேறு சில பொருட்களும் மீட்கப்பட்டுள்ளன.

கஹதுடுவ, ஹொரணை, பிலியந்தலை ஆகிய பகுதிகளில் பெண்களிடம் இவர்கள் கொள்ளையிட்டுவந்துள்ளனர். மேலும் கொஹுவளை பகுதியில் வீடொன்றையும் இவர்கள் கொள்ளையிட்டுள்ளதாக ஆரம்பகட்ட விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது.

# பெரும்போகத்தின் நெற்கொள்வனவு ஆரம்பம்

## அதிகாரசபை உபதலைவர் தெரிவிப்பு



நெற்சந்தைப்படுத்தல் அதிகார சபையின் ஊடாக பெரும்போகத்தின் நெற்கொள்வனவு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக நெற்சந்தைப் படுத்தல் அதிகாரசபையின் உபதலைவர் துமிந்த பிரியதர்ஷன தெரிவித்துள்ளார்.

ஒரு கிலோகிராம் நாட்டரிசி நெல் 90 ரூபாவுக்கும், சம்பா நெல் 92 ரூபாவிற்கும் கொள்வனவு செய்யப்படுவதோடு, போக்குவரத்து கட்டணமாக ஒரு கிலோ கிராமிற்கும் 2 ரூபா பெற்றுக்கொடுக்கப்படுவதாகவும் நெற்சந்தைப்படுத்தல் அதிகாரசபை குறிப்பிட்டுள்ளது.

சந்தையில் காணப்படும் போட்டித்தன்மைக்கு மத்தியில் கூடுதல் விலையை பெற்றுக்கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

விவசாயிகளிடமிருந்து கீரி சம்பா நெல் கொள்வனவு செய்யப்படும்போது ஒரு கிலோகிராம் 95 ரூபாவிற்கு கொள்வனவு செய்யப்படுகின்றது.

கடந்த காலங்களில் நெற்சந்தைப்படுத்தல் அதிகாரசபை நெற்கொள்வனவு நடவடிக்கைகளை முன்னெடுப்பதில்லை என்ற குற்றச்சாட்டு காணப்பட்டது.

எனினும், தற்போது முறையான திட்டமிடல்களுடன் நிர்ணய விலையில் நெற்கொள்வனவு இடம்பெறுவதாக நெற்சந்தைப்படுத்தல் அதிகார சபையின் உபதலைவர் துமிந்த பிரியதர்ஷன தெரிவித்துள்ளார்.

# சிவனொளிபாத யாத்திரிகர்களுக்கு போக்குவரத்து தொடர்பில் அறிவுறுத்து

வார இறுதி நாட்களில் நல்லதண்ணி-மஸ்கெலியா வீதியில் சுமார் 5 கிலோமீற்றர் வரை கடும் வாகன நெரிசல் ஏற்படும் சாத்தியம் காணப்படுவதாக நல்லதண்ணி பொலிஸார் தெரிவித்தனர்.

சிவனொளிபாதமலை யாத்திரைக்காக பயணிகளை ஏற்றிச்செல்லும் வாகனங்கள் காரணமாக இவ்வாறு தொடர்ந்தும் வாகன நெரிசல் ஏற்படுவதாகவும் பொலிஸார் குறிப்பிட்டனர்.

நல்லதண்ணியிலுள்ள மூன்று பிரதான பஸ் நிலையங்களும் பிற்பகல் நேரங்களில் நிரம்பி வழியும் என தெரிவித்த பொலிஸார், யாத்திரிகர்கள் மஸ்கெலியா சுமன சமன் தேவாலயத்தில் வாகனங்களை நிறுத்திவிட்டு சுமார் 3 கிலோமீற்றர் தூரம் சிவனொளிபாதமலை அடிவாரத்துக்கு நடந்துசெல்ல வேண்டும் எனவும் பொலிஸார் கேட்டுக்கொண்டனர்.

# மலையக அரசியல் அரங்கத்தின் கையெழுத்து இயக்கம் நாளை தலைநகர் கொழும்பில்!

## முன்னாள் எம்.பி. திலகர் தெரிவிப்பு

நுவரெலியா மாவட்ட பிரதேச செயலக அதிகரிப்பில் காட்டப்படும் பாரபட்சத்துக்கு எதிராக வடக்குமுதல் தெற்குவரை இடம்பெறும் கையெழுத்து இயக்கம் நாளை சனிக்கிழமை மாலை 2 மணிமுதல் 6 மணிவரை கொழும்பு மருதானை டீன்ஸ் வீதி சி.எஸ்.ஆர். மண்டபத்தில் கையெழுத்துச் சேகரிக்கும் இயக்கத்தை நடத்த திட்டமிடப்பட்டுள்ளது.

நுவரெலியா மாவட்ட மக்களுக்கு நீதி கிடைக்க இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவிடம் முன்வைக்கப்பட்டுள்ள கோரிக்கைக்கு நாட்டு மக்களின் ஒருமைப்பாட்டைப் பெற்றுத்தாருங்கள் என மலையக அரசியல் அரங்கத்தின் தலைமை ஒருங்கிணைப்பாளரும் நுவரெலியா மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான மயில்வாகனம் திலகராஜ் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

மலையக அரசியல் அரங்கம் சார்பில் ஊடகங்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டிருக்கும் இந்த அழைப்பில் மேலும் தெரிவுக்கப்பட்டிருப்பதாவது,

மலையக அரசியல் அரங்கம், டிசம்பர் 29 முதல் ஜனவரி 31 வரை நுவரெலியா மாவட்ட மட்டத்தில் பொதுமக்கள் மனு கையெழுத்து இயக்கம் ஒன்றினை முன்னெடுத்து,



சேகரிக்கப்பட்ட கையெழுத்துகள் அடங்கிய மனுவினை நுவரெலியா மாவட்ட செயலாளர் ஊடாக ஜனாதிபதி, பிரதமருக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. இரண்டாம் கட்டமாக 2022 பெப்ரவரி முதலாம் திகதி மலையக அரசியல் அரங்கத்தின் சார்பில் மனித உரிமைகள் ஆணைக்குழுவிலும் மாகாண சபைகள் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சர், அமைச்சின் செயலாளர், நுவரெலியா மாவட்ட செயலாளர் ஆகியோருக்கு எதிராக முறைப்பாடு ஒன்றும் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

இந்நிலையில், நுவரெலியா மாவட்ட பிரதேச செயலக விடயத்தில் அரச ஆணை மீறப்பட்டதற்கு எதிராக நாட்டு மக்கள் அனைவரதும் கவனத்துக்குக் கொண்டுசென்று நுவரெலியா மாவட்ட மக்களுக்கு நீதி வேண்டிய 'வடக்கு முதல் தெற்கு வரை' கையெழுத்து இயக்கத்தை மலையக அரசியல் அரங்கம் முன்னெடுக்கின்றது. ஏற்கனவே யாழ்ப்பாணம், கிளிநொச்சி, வன்னி பிரதேசங்களில் கையெழுத்து இயக்கத்துக்கு பொதுமக்கள் தமது ஆதரவை வழங்கியுள்ளனர்.

இந்தக் கட்டத்தை அடையும்போதுதான் நுவரெலியா மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் இந்தப் பிரச்சினை பேசுபொருளாகியுள்ளது. சில நாடாளுமன்ற உறுப்பினர்கள் நாடாளுமன்றில் வாய்திறந்து உள்ளனர். எனவே, அரசின் கவனத்தைப் பெற நாம் இன்னும் முன்செல்லவேண்டி உள்ளது.

எனவே, வடக்கு பயணம் முடிந்து தெற்கு நோக்கிய பயணத்தில் கொழும்பில் பொது அமைப்புகள், அரசியல் கட்சிகள், சிவில் சமூகங்கள், பொதுமக்களின் ஆதரவை வேண்டி எமது இயக்கம் நான்கு மணிநேர கையெழுத்து இயக்கத்தை ஒழுங்கு செய்துள்ளது.

கொழும்பு - மருதானை டீன்ஸ் வீதி 281ஆம் இலக்கத்தில் அமைந்துள்ள CSR சமூக மற்றும் மதங்களுக்கான நிலையத்தில் ( கத்தோலிக்க தேவாலயம் அருகே ) நடத்த திட்டமிடப்பட்டுள்ளது. எனவே, தலைநகரில் வாழும் உறவுகள், அமைப்புகள், மலையகத் தமிழ் மக்களுக்கான இந்த சாத்வீகப் போராட்டத்தில் இணைந்து தமது ஆதரவைத் தருமாறு மலையக அரசியல் அரங்கம் வேண்டி நிற்கிறது.

இந்தப் பிரச்சினை உள்நாட்டில் பேசித் தீர்க்கப்படவேண்டிய விடயம் என்கின்ற அடிப்படையில் நாடு தழுவியதாக இந்த விடயம் முன்கொண்டுசெல்லப்படுகிறது.

உள்நாட்டில் இதற்கான உரிய நீதி கிடைக்காத போது நாமும் சர்வதேசத்தை நாடுவோம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் நூல் வெளியீடும் அறிமுக விழாவும் தமிழ்ச் சங்கத்தில்

இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் இந்துக் கலைக்களஞ்சியத் தொகுதி மற்றும் பிற வெளியீடுகளின் அறிமுகமும் கண்காட்சியும் சேர்ந்த நிகழ்வு, கொழும்பு தமிழ்ச் சங்கம், சங்கரப்பிள்ளை மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

நாளை சனிக்கிழமை காலை 09 மணி தொடக்கம் 12 மணிவரை அறிமுக விழாவும் அன்றையதினம் 12.30 மணி தொடக்கம் மாலை 4.30 மணிவரையும் மறுநாள் காலை 9 மணி தொடக்கம் 4.30 மணிவரையும் கண்காட்சி நிகழ்வும் இடம்பெறவுள்ளது.

கொழும்பு, இராமகிருஷ்ண மிஷன் சுவாமிகள் ஸ்ரீமத் அக்சராத்மானந்தஜீ மகராஜும், சர்வதேச இந்துமத பீடத்தின் செயலாளர் கலாநிதி இராமச்சந்திர குருக்கள் பாபு சர்மாவும் திருமுன்னிலை வகிக்க, யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வேந்தர் பேராசிரியர் சி.பத்மநாதன் தலைமையில், மேல் மாகாணம் மற்றும் வடமேல் மாகாண முன்னாள் ஆளுநர் கே.சி.லோகேஸ்வரன் பிரதம அதிதியாகக் கலந்து சிறப்பிக்க இந்நிகழ்வு இடம்பெறவுள்ளது.

கௌரவ அதிதிகளாக கல்வி அமைச்சின் முன்னாள் மேலதிக செயலாளர் எஸ்.தில்லை நடராஜாவும் புனர்வாழ்வளிப்பு, இராஜாங்க அமைச்சின் முன்னாள் செயலாளர் திருமதி சாந்தி நாவுக்கரசனும் கலந்துகொள்ளவுள்ளனர்.

மங்கல இசை, மங்கல விளக்கேற்றல், கடவுள் வாழ்த்து நிகழ்வுகளைத் தொடர்ந்து வரவேற்புரையினை இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்கள உதவிப் பணிப்பாளர் திருமதி ஹேமலோஜினி குமரனும், திருமுன்னிலை வகிப்போரது ஆசியுரைகளினைத் தொடர்ந்து, தொடக்கவுரையினை இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் அ.உமாமகேஸ்வரனும், நிகழ்வின் தலைமை உரையினைத் தொடர்ந்து, தென்கிழக்குப் பல்கலைக்கழக மொழித்துறைச் சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி க.இரகுபரன், பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவால் வெளியீடு செய்து வைக்கப்பட்ட இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் இந்துக் கலைக்களஞ்சியம் தொகுதிகளுக்கான அறிமுக உரையினையும் அன்றையதினம் வெளியீடு செய்யப்படவுள்ள இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் ஏனைய வெளியீடுகள் தொடர்பான அறிமுகவுரையினை, பேராதனைப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறைத் தலைவர், பேராசிரியர் ஸ்ரீ பிரசாந்தனும் நிகழ்த்தவுள்ளனர்.

சிறப்புப் பிரதிகள் வழங்கும் நிகழ்வினைத் தொடர்ந்து, கௌரவ அதிதிகளது உரையும் பிரதம விருந்தினர் உரையும் இடம்பெறவுள்ளது. இந்து சமய,கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் சிரேஷ்ட ஆராய்ச்சி உத்தியோகத்தர் திருமதி தேவகுமாரி ஹரனின் நன்றியுரையினைத் தொடர்ந்து கண்காட்சி நிகழ்வும் விசேட விலைக்கழிவில் அமைந்த திணைக்கள வெளியீடுகளின் விற்பனை நிகழ்வும் இடம்பெறவுள்ளன.

# இலங்கையின் பிரபல பூப்பந்து வீராங்கனை ஓஷதி காலமானார்

இலங்கையைப் பிரதிநிதித்துவப்படுத்திய பூப்பந்து வீராங்கனை ஓஷதி குருப்பு (வயது 27) அண்மையில் காலமானார்.

இரத்தப் புற்றுநோயால் பாதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றுவந்த நிலையில் சிகிச்சை பலனின்றி இவர் உயிரிழந்துள்ளார்.

ஓஷதியின் புதவுடல் பொரலஸ்கமுவவிலுள்ள மலர்ச்சாலை ஒன்றில் வைக்கப்பட்டிருந்ததுடன், நேற்று பிற்பகல் இறுதிச்சடங்குகள் இடம்பெற்றன.

கொழும்பு விசாகா கல்லூரியின் பழைய மாணவியான ஓஷதி பல சர்வதேச புப்பந்துப் போட்டிகளில் இலங்கையைப் பிரதிநிதித்துவப்படுத்தியுள்ளார்.

2016ஆம் ஆண்டு தெற்காசிய விளையாட்டுப் போட்டியின் பெண்கள் அணிப் பிரிவில் இலங்கையைப் பிரதிநிதித்துவப்படுத்திய ஓஷதி குருப்பு, வெள்ளிப் பதக்கத்தை வென்றமை குறிப்பிடத்தக்கது.




# கொக்கிளாய் கிராம மக்களின் பூர்வீக நிலம் பறிபோகும் அபாயம்

## கனிய மணல் அகழ்வுக்காக அளவீட்டுப் பணிகள் ஆரம்பம்

## ஏற்கனவே 16 பேரின் காணிகள் கையகப்படுத்தப்பட்டதாக குற்றச்சாட்டு









(வன்னி செய்தியாளர்)

முல்லைத்தீவு மாவட்டத்தின் கொக்கிளாய் கிராம மக்களின் பூர்வீக நிலங்களை கனிய மணல் அகழ்வுக்காக அளவீடு செய்யும் நடவடிக்கைகள் மும்முரமாக முன்னெடுக்கப்பட்டு வருவதாக கிராம மக்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

கொக்கிளாய் முகத்துவாரம் தொடக்கம் கொக்குத்தொடுவாய் வரையான மக்களின் விவசாய செய்கைக்காக பயன்படுத்தும் நிலங்கள் மற்றும் தோட்ட செய்கைக்கான நிலங்கள், குடியிருப்பு நிலங்கள் உள்ளடங்கலாக இவ்வாறு அளவீடு செய்யும் நடவடிக்கையினை நில அளவைத் திணைக்களத்தினர் கடந்த வாரம் மேற்கொண்டுள்ளதாக கொக்கிளாய் மக்கள் தெரிவித்துள்ளனர்.

ஏற்கனவே, கொக்கிளாய் கிழக்குப் பகுதியில் 16 பேருக்கு சொந்தமான 44 ஏக்கர் பூர்வீகக் காணிகளை எந்தவித முன்னறிவித்தலோ இழப்பீடோ வழங்காது கையகப்படுத்தி இல்மனையிட் அகழ்வை ஆரம்பித்துள்ள கனிய மணல் கூட்டுத் தாபனம், தற்போது மேலும் காணிகளை கையகப்படுத்தும் நடவடிக்கையாக இவ்வாறு முன்னறிவித்தல் எதுவுமின்றி தமது காணிகளை கையகப்படுத்தும் நோக்கோடு நில அளவை செய்து எல்லைப்படுத்தும் நடவடிக்கையை மேற்கொண்டுள்ளதாக காணி உரிமையாளர்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

குறிப்பாக, கொக்கிளாய் கிழக்கு பகுதியில் சில வாரங்களுக்கு முதல் அறுவடை மேற்கொண்ட வயல் நிலங்கள் உள்ளடங்களாக காணிக்குரிய ஆவணங்களை கூட வைத்துள்ளவர்களின் காணிகள் 60 ஏக்கருக்கு மேற்பட்ட பகுதி இவ்வாறு கனிய மணல் கூட்டுத் தாபனத்துக்காக நில அளவை செய்து எல்லைப்படுத்தப்பட்டுள்ளதாக கிராம மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

இவ்வாறு தமது காணிகளில் நில அளவீடு இடும்பெறுவதை அறிந்து அவ்விடத்துக்கு சென்ற காணி உரிமையாளர்களுக்கு நில அளவைத் திணைக்கள அதிகாரிகள் இது மேலிடத்து உத்தரவு. இதற்கமையவே நாங்கள் அளவீடு செய்கின்றோம். உங்கள் காணிகளாக இருந்தால் நீங்கள் நீதிமன்றத்தை நாடுங்கள் என தெரிவித்துள்ளதாக காணி உரிமையாளர்கள் தெரிவித்துள்ளனர்.

கனிய மணல் அகழ்வுக்காக ஆரம்பிக்கப்பட்டுள்ள இந்த காணி சுவீகரிப்பு கொக்கிளாய் முகத்துவாரத்திலிருந்து கரையோரமாக கடற்கரையிலிருந்து சுமார் 500 மீற்றருக்கும் அதிகமான பகுதி கிராமத்தின் உள்ளே நீண்டு செல்வதோடு கொக்கிளாய், கருநாட்டுக்கேணி, கொக்குத்தொடுவாய், நாயாறு, செம்மலை கிழக்கு வரை சுமார் 12 கிலோ மீற்றர்களுக்கு அதிகமான கரையோரப் பகுதிகள் வரை இவ்வாறு காணிகளை எதிர்வரும் நாட்களில் அளவீடு செய்து சுவீகரிப்பதற்கான ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் கிராம மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

ஏற்கனவே, மாவலி எல் வலயம் மற்றும் சிங்கள மீனவ குடியேற்றம், இராணுவ காணி அபகரிப்பு வனத் திணைக்களம், வன ஜீவராசிகள் திணைக்களம், பௌத்த விகாரை அமைப்பதற்கான காணி பறிப்பு என பல்வேறு வகையில் இந்த கிராமங்களில் காணி அபகரிப்பு இடம்பெற்றநிலையில், தற்போது கனிய மணல் கூட்டுத்தாபனமும் மக்களுக்கு சொந்தமான காணிகளை கையகப்படுத்த நடவடிக்கை மேற்கொண்டுவருவதை தமது இருப்பை கேள்விக்குள்ளாக்கும் செயற்பாடு என குறித்த கிராம மக்கள் அதிருப்தி தெரிவித்துள்ளனர்.

பாதிக்கப்பட்ட மக்களின் அழைப்பின் பேரில், காணி அளவீடு இடம்பெறும் கொக்கிளாய் பகுதிக்கு நேற்றுமுன்தினம் (09) சென்ற வடக்கு மாகாணசபை முன்னாள் உறுப்பினர் துரைராசா ரவிகரன் பாதிக்கப்பட்டுள்ள காணி உரிமையாளர்களுடன் கலந்துரையாடலை மேற்கொண்டிருந்ததோடு அளவீடு செய்யப்பட்டுள்ள காணிகளையும் நேரில் சென்று பார்வையிட்டார். விரைவாக தான் பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சியின் உயர் மட்டத்துக்கு இந்தப் பிரச்சினையை கொண்டு செல்வதோடு இந்தக் காணி அபகரிப்பை தடுக்கும் விதமாக சட்ட நடவடிக்கைக்கு செல்லும் பொருட்டு நாடாளுமன்ற உறுப்பினரும் ஜனாதிபதி சட்டத்தரணியுமான எம்.ஏ. சுமந்திரனின் கவனத்துக்கும் கொண்டு சென்று நீதிமன்றை நாடுவதற்கு ஏற்பாடுகளை செய்வதாகவும் காணி உரிமையாளர்களோடு இணைந்து இந்த காணி அபகரிப்புக்கு எதிராக போராடவும் இணைந்து நிற்பதாக தெரிவித்துள்ளார்.

இந்தச் சந்திப்பில் கரைதுறைப்பற்று பிரதேச சபை உறுப்பினர் சின்னராசா லோகேஸ்வரன், காணி உரிமையாளர்கள்,0 கிராம மக்கள் என பலர் கலந்துகொண்டிருந்தனர்.

# 12 வயது சிறுமியை துஷ்பிரயோகம் செய்த இளைஞர் கைது

(கெலும் குணதிலக்க)

மெதகமவில் 12 வயது சிறுமியை துஷ்பிரயோகத்துக்குட்படுத்திய குற்றச்சாட்டில் 26 வயது இளைஞர் ஒருவரை கைதுசெய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சிறுமியை கடந்த செவ்வாய்க்கிழமை (08) சந்தித்துள்ள இளைஞர் அன்றைய தினமே விடுதியொன்றுக்கு அழைத்துச் சென்றுள்ளார். இது தொடர்பில் சிறுமி தனது பெற்றோருக்கு தெரியப்படுத்தியுள்ளார்.

பெற்றோரால் பொலிஸ் நிலையத்தில் அளிக்கப்பட்ட முறைப்பாட்டுக்கு அமைவாக, சந்தேக நபரான இளைஞர் கைதுசெய்யப்பட்டுள்ளார். அத்துடன் சிறுமியை வைத்தியசாலையில் அனுமதிக்க பொலிஸார் நடவடிக்கை எடுத்தனர்.

சந்தேக நபரான இளைஞர் சிறுமியை அழைத்துச் சென்றதாகக் கூறப்படும் பிபிலை பகுதி விடுதியொன்றின் உரிமையாளரை கைதுசெய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக மெதமக பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி பிரபாத் திசாநாயக்க தெரிவித்தார்.

அந்த உரிமையாளர் மீது சட்ட நடவடிக்கை முன்னெடுக்கப்படும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

# கைவிடப்பட்டது போராட்டம்

கொழும்பில் சுகாதார அமைச்சின் அலுவலகங்களை முற்றுகையிட்டு டெங்கு ஒழிப்பு பணியாளர்களால் முன்னெடுக்கப்பட்டுவந்த போராட்டம் நேற்று (10) கைவிடப்பட்டுள்ளது.

சுகாதார அமைச்சர் எதிர்வரும் 21ஆம் திகதி பேச்சுவார்த்தைக்கு இணங்கியதையடுத்து, அவர்கள் போராட்டத்தை கைவிட்டுள்ளனர். இதனையடுத்து டெங்கு ஒழிப்புப் பணியாளர்கள் அமைச்சின் அலுவலகத்திலிருந்து சென்றனர்.

# லொறியுடன் முச்சக்கரவண்டி மோதி ஆண்டிகமவில் விபத்து; பெண்ணொருவர் பலி

(ரஸீன் ரஸ்மின்)

முந்தல் - ஆண்டிகம பிரதான வீதியின் அக்கரவெளி கருப்பு பாலத்துக்கு அருகில் நேற்று முன்தினம் (09) இடம்பெற்ற விபத்தில் பெண்ணொருவர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

முந்தல் - பத்துளுஓயா புதுக்குடியிருப்பு பகுதியைச் சேர்ந்த இரண்டு பிள்ளைகளின் தாயான 52 வயதுடைய வயோதிபப் பெண் ஒருவரே இவ்விபத்தில் உயிரிழந்துள்ளார்.

ஆண்டிகம பகுதியிலிருந்து கீரியங்கள்ளி பகுதியை நோக்கிச் சென்ற லொறியொன்று எதிர்த்திசையில் பயணித்த முச்சக்கர வண்டி ஒன்றுடன் மோதியதில் இந்த விபத்துச் சம்பவம் இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இதன்போது படுகாயமடைந்த முச்சக்கர வண்டியில் பயணித்த பெண்ணை அங்கிருந்தவர்கள் உடனடியாக முந்தல் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட போதிலும், அவர் அங்கு சிகிச்சைப் பலனின்றி உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்த பெண்ணின் சடலம் முந்தல் மாவட்ட வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது. இதேவேளை, விபத்துடன் தொடர்புடைய லொறியின் சாரதி பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

முந்தல் பொலிஸார் விபத்து தொடர்பில் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# ரஷ்ய தூதுவருடன் பாதுகாப்புச் செயலர் இராணுவத் தலைமையகத்தில் சந்திப்பு



இலங்கைக்கான ரஷ்யத் தூதுவர் யூரி மேட்டேரி, பாதுகாப்புச் செயலாளர் ஜெனரல் கமல் குணரத்னவை நேற்று முன்தினம் (09) சந்தித்தார்.

இந்த சந்திப்பு ஸ்ரீஜயவர்தனபுர, கோட்டேயில் அமைந்துள்ள பாதுகாப்புத் தலைமையகத்தில் இடம்பெற்றது.


பாதுகாப்புத் தலைமையகத்துக்கு வருகைதந்த ரஷ்யத் தூதுவர் தலைமையிலான தூதுக்குழுவினரை பாதுகாப்புச் செயலாளர் வரவேற்றதுடன் தொடர்ந்து இடம்பெற்ற சந்திப்பில் இருதரப்பு முக்கியத்துவம் வாய்ந்த விடயங்கள் மற்றும் இராணுவ இராஜதந்திர விடயங்கள் தொடர்பாக சிநேகபூர்வ கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றது.

இந்த இரு தரப்பு கலந்துரையாடல் சுகாதார வழிகாட்டலுக்கு அமைவாக இடம்பெற்றது.

இந்தச் சந்திப்பில் பாதுகாப்பு அமைச்சின் மேலதிக செயலாளர் பி. பி. எஸ். சி. நோனிஸ், இராணுவ இணைப்பு அதிகாரி மேஜர் ஜெனரல் தினேஷ் நாணயக்கார மற்றும் சிரேஷ்ட உதவிச் செயலாளர் ஹர்ஷ விதானராச்சி ஆகியோர் கலந்து கொண்டனர்.

# கட்டுமானத்துறையில் ஒத்துழைப்பு குறித்து இலங்கை – நேபாளம் கலந்துரையாடல்

## கூட்டு முயற்சிகள், முதலீடுகள் தொடர்பில் ஆராய்வு









இலங்கை கட்டுமான நிறுவனங்கள் நேபாள பௌதீக உட்கட்டமைப்பு மற்றும் போக்குவரத்து அமைச்சுடன் தொடர்பு கொள்ளவும் கூட்டு முயற்சிகள் உட்பட வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்குப் பொருந்தும் நடைமுறைகள் மற்றும் விதிமுறைகள் குறித்து அறிந்து கொள்ளவும் நேபாளத்தில் உள்ள இலங்கைத் தூதரகம் மற்றும் இலங்கையின் ஏற்றுமதி அபிவிருத்தி சபை ஆகியன இணைந்து மெய்நிகர் சந்திப்பொன்றை ஏற்பாடு செய்தன.

நேபாள பௌதீக உட்கட்டமைப்பு மற்றும் போக்குவரத்து அமைச்சின் அபிவிருத்தி உதவி ஒருங்கிணைப்பு மற்றும் தரப் பிரிவின் இணைச் செயலாளர் கேசப் குமார் ஷர்மா, வீதிப் பணிகள் மற்றும் போக்குவரத்தில் உள்ள முதலீட்டு வாய்ப்புகள் மற்றும் நடைமுறைகள் குறித்த விரிவான கண்ணோட்டத்தை வழங்கினார். நீர் மின்சக்தி அபிவிருத்தி, கட்டடக்கலை மற்றும் பொறியியல் வடிவமைப்பு, ஆலோசனைப் பணிகள் மற்றும் கட்டிடக் கட்டுமானம் போன்ற ஏனைய துறைகளில் பொதுவான வாய்ப்புகளை வழங்கும் அதேவேளையில், தேவைப்படும் அளவுகோல்களையும் அனுபவத்தையும் அவர் சுட்டிக் காட்டினார்.

நேபாளத்தில் பௌதீக உட்கட்டமைப்பு அபிவிருத்தி மற்றும் போக்குவரத்தில் இருக்கும் அளவுகோல்கள் மற்றும் வாய்ப்புகளை ஷர்மா மேலும் விபரித்தார். பங்கேற்பாளர்கள் சரியான நேரத்தில் நேருக்கு நேர் பௌதீக ரீதியாக சந்திக்கும் எதிர்கால வாய்ப்பை வரவேற்றனர்.

நேபாளத்தில் உள்ள அரசாங்க அதிகாரிகளுடனான சந்திப்பை எளிதாக்குவதற்காக, கடந்த டிசம்பர் 21ஆம் திகதியன்று நடைபெற்ற வணிக அமர்வின் போது, கட்டுமானத்துறையின் பிரதிநிதிகள் விடுத்த கோரிக்கைக்கு பதிலளிக்கும் வகையில், கடந்த திங்கட்கிழமை (07) மெய்நிகர் சந்திப்பு நடத்தப்பட்டது.

இத்துறையின் பன்முகத் தன்மையைக் கருத்தில் கொண்டு, இலங்கையில் உள்ள நீர்மின்சாரம், கட்டிட நிர்மாணங்கள் மற்றும் நகர அபிவிருத்தித் துறை நிறுவனங்களின் கேள்விகளுக்கு பதிலளிப்பதற்காக, நேபாளத்தில் உள்ள சம்பந்தப்பட்ட அரசாங்கப் பங்காளிகளுடன் எதிர்காலத்திலும் இதேபோன்ற கவனம் செலுத்தப்பட்ட மற்றும் ஆழமான ஈடுபாடுகளை நடத்த ஊக்குவிக்கப்பட்டது.

இலங்கையின் கட்டுமான கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபை மற்றும் இலங்கையின் பிரதான கட்டமைப்பாளர்கள் உட்பட பத்துக்கும் மேற்பட்ட இலங்கை நிறுவனங்கள் மெய்நிகர் சந்திப்பில் பங்குபற்றின. தூதுவர் ஹிமாலி அருணதிலக மற்றும் இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபையின் ஏற்றுமதி சேவைகள் பணிப்பாளர் இந்துமினி கொடிகார ஆகியோரும் இச்சந்திப்பில் உரையாற்றினர்.

# அஷ்ரப் சிஹாப்தீன் எழுதிய 'நான் இன்னும் உயிர்ப்புடன் இருக்கிறேன்' நூல் வெளியீட்டு விழா இன்று

எழுத்தாளரும் கவிஞரும் ஒலி, ஒளிபரப்பாளருமான அஷ்ரஃப் சிஹாப்தீன் மொழிபெயர்த்த 'நான் இன்னும் உயிர்ப்புடன் இருக்கிறேன்' என்ற நூல் வெளியீடு நாளை 11ஆம் திகதி சனிக்கிழமை கொழும்பு - 10, அல்-ஹிதாயா வித்தியாலய மண்டபத்தில் பி.ப. 4.00 மணிக்கு நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வுக்கு இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன முஸ்லிம் சேவையின் பணிப்பாளர் திருமதி எம்.ஜே. பாத்திமா ரினூஸியா தலைமை வகிக்கவுள்ளார். பிரதம அதிதியாக முன்னாள் வீடமைப்பு, நிர்மாணத்துறை அமைச்சர் திருமதி பேரியல் அஷ்ரஃப் கலந்து கொள்ளவுள்ளார்.

நூல் பற்றிய தமது பார்வைகளை மௌலவியா திருமதி அகீலா பத்தீனும், மௌலவியா திருமதி நஸ்லின் ரஷீத்தும், முன்னாள் ஒலி, ஒளிபரப்பாளர் திருமதி ஆயிஷா ஜுனைதீனும் பகிர்ந்து கொள்ளவுள்ளார்கள்.

நூலின் முதற்பிரதியை ஜிப்ரி ஜெம்ஸ் மற்றும் கிறீன்ட் லான்ட் புரபர்டி டெவலப்பர்ஸ் நிறுவனங்களின் தலைவர் அல்ஹாஜ் ஏ.ஆர்.எம். ஜிப்ரி பெற்றுக்கொள்ள சிறப்புப் பிரதியை தமிழ்த் தென்றல் அலி அக்பர் பெற்றுக் கொள்வார்.

கௌரவ அதிதிகளாக தலைமைத்துவ மேம்பாட்டுத் தேசிய மையத்தின் பணிப்பாளர் ஏ.பி. எம். அஷ்ரப், வங்கி முகாமையாளர் ஏ.எச்.எம். அரூஸ், முன்னாள் முஸ்லிம் சேவைப் பணிப்பாளர் ஹாபிஸ் எஸ்.எம். ஹனிபா, உதவிச் சுங்க அத்தியட்சகர் எம்.எம்.எம். முர்ஷிதீன், சி.ஆர். நிறுவனத் தலைவர் ஜியா முஸ்தபா, வை.டபிள்யூ. எம்.ஏ. தலைவி திருமதி பவாஸா தாஹா, ரூபவாஹினி நிகழ்ச்சித் தயாரிப்பாளர் சியாமா யாக்கூப், சட்டத்தரணிகளான பாத்திமா நுஸ்ரத் ஸரூக், எம்.எஸ்.எஸ். சன்பரா, அழகுக் கலை நிபுணர் நஸ்ரினா ரமீஸ் ஆகியோர் கலந்து சிறப்பிப்பார்கள்.

வரவேற்புரையை கவிஞர் பாத்திமா ஸிமாரா நிகழ்த்துவார். நிகழ்ச்சிகளை கவிஞர் திருமதி தாஹிர் நூருல் இஸ்ரா தொகுத்து வழங்குவார்.

நிகழ்வுக்கு வருகை தரும் அனைவரும் கொவிட் சுகாதார நெறிமுறைகளைப் பின்பற்ற வேண்டும் என்று எதிர்பார்க்கப்படுவதாக ஏற்பாட்டுக்குழு தெரிவித்துள்ளது.

# மட்டு. திராய்மடுவில் சடலமாக மீட்கப்பட்டவரின் மரணத்தில் சந்தேகம்; உறவினரால் முறைப்பாடு பதிவுசெய்தும் கண்டுகொள்ளாத பொலிஸார்

**உயிரிழந்தவரின் மரணத்துக்கு குடும்பத்தினரா காரணம்...?**







மட்டக்களப்பு கொக்குவில் பொலிஸ் பிரிவில் கடந்த 04.02.2022 சுதந்திர தினத்தன்று மர்மமான முறையில் திராய்மடு முருகன் கோயில் ஆசிரமத்திற்கு அருகில் சடலமாக மீட்கப்பட்டவரின் மரணத்தில் சந்தேகம் நிலவுவதாக உயிரிழந்தவரின் சகோதரி முறைப்பாடு பதிவுசெய்தும் பொலிஸார் இதுவரையில் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை என பொதுமக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது, மரணித்திருந்த பாடசாலை அதிபர் செபநாயகம் மங்களச்சந்திரா, வாகரையை பிறப்பிடமாகவும் மட்டக்களப்பு செல்வநாயகம் வீதியை வசிப்பிடமாகவும் கொண்டவர். இவர் கடந்த ஜனவரி 31ஆம் திகதி ஆரையம்பதி நவரெத்தினராசா வித்தியாலயத்தின் அதிபராக கடமைகளை பொறுப்பேற்றிருந்தார்.

மங்களச்சந்திரா அதிபர் நீண்டநாட்களாக தனது மனைவியுடன் குடும்பப் பிரச்சினை காரணமாக முரண்பாட்டுடன் வீட்டில் வசித்துவந்துள்ளார். கிட்டத்தட்ட ஒரு வருடங்களுக்குப் பின்னர் மனைவி பொலிஸில் முறைப்பாடொன்றை பதிவுசெய்திருந்தார். மேலும் கணவரை வீட்டிலிருந்து வெளியேற்றித் தருமாறு மனைவி கோரிக்கை விடுத்துவந்தார். மங்களச்சந்திரா சமாதானமாக குடும்பத்துடன் சேர்ந்துவாழ விரும்பினார். அதனை விசாரணைக்கு எடுத்துக்கொண்ட பொலிஸார், கணவன் பேரிலும் மனைவியின் பேரிலும் வீட்டு உறுதி காணப்பட்டதனால் கணவன் ஓர் அறையில் வசிப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டிருந்தது.

பொலிஸ் விசாரணையைத் தொடர்ந்து வீட்டில் தங்குவதற்கு வந்த மங்களச்சந்திரா அன்றைய தினமே தனது மகனால் கடுமையான சொற்பிரயோகங்களுக்கு உட்பட்டிருந்தார். அதன்பின்னர் அவருக்கு தங்குவதற்கு வீட்டினுள் மனைவி, பிள்ளைகளினால் அனுமதி வழங்கப்படவில்லை. அவர் மேல்மாடிக்கு ஏறும் படியினை தகரத்தினால் மறைத்துக்கொண்டு வெளிப்பக்கமாகவுள்ள மாடிப்படியூடாக தனது வாழ்க்கையை அமைத்துக்கொண்டும், தனது சகோதரர்களின் வீடுகளில் உணவை உண்டும், தன்னுடைய காலத்தைக் கடத்திக்கொண்டும், மனைவியுடன் சேர்ந்து வாழ்வதற்கு பல முயற்சிகளை எடுத்தும் வந்துள்ளார்.

கடந்த கொரோனா காலத்தில் தனக்கும் கொரோனா தாக்கம் ஏற்பட்டு பல சொல்லொணா துயரங்களுடன் தனது வீட்டில் அடைப்பட்டு மனைவி பிள்ளைகளினால் எந்த ஆதரவுமின்றி உறவினர்களின் உதவியுடன் குணமடைந்தார். பின்னர் மகனின் பிழையான உறவுமுறைகளினால் மனம் உடைந்துபோய் வாழ்க்கையை வெறுத்துபோன மனிதரானார். இதனைத் தனது நெருக்கமான நண்பர்களிடமும் கூறிக்கொள்வார். அவர்களின் ஆறுதல் வார்த்தைகளினால் சமாதானமடைந்துகொண்டிருப்பார். மங்களச்சந்திராவின் நடமாட்டத்தினால் மகனின் சேட்டைகளுக்கு இடம் இல்லாத காரணத்தினால் ஆத்திரம் கொள்ளும் மகன், தடியடி பிரயோகங்களை தந்தைமீது அடிக்கடி நடத்துவதும் உண்டு. இதனை அயலவர்கள் அடிக்கடி கண்ணுற்றுள்ளனர்.

சம்பவத் தினமன்று வியாழக்கிழமை 3ஆம் திகதி பிற்பகல் மனைவியும் மகளும் வாகரைக்கு சென்றிருந்தனர். அன்று இரவு பொழுதாகும்போது மகனும் தனது மருத்துவபீட மாணவ நண்பனும் வீட்டில் இருந்துள்ளனர். இவர்கள் இருவரையும் கண்ட தந்தை, ஏன் இங்கு வந்துள்ளாய் என நண்பனை திட்டியிருக்கின்றார். இதனைக் கண்ட மகன் ஏன் நண்பனை திட்டினாய் என வாக்குவாதம் செய்துள்ளார். வாக்குவாதம் முற்றி கைகலப்பாயிருக்கின்றது. அதன் பின்னர் அயலவர்களுக்கு கதறல் சத்தம் கேட்டிருக்கின்றது. அதனை அயலவர்கள் பொருட்படுத்தவில்லை. ஏனெனில், அடிக்கடி தந்தைக்கும் மகனுக்கும் சண்டை நடப்பது வழமையானதாகும்.

மறுநாள் 4ஆம் திகதி அதிபர் மங்களச்சந்திராவின் சடலம் திராய்மடுப் பகுதியிலுள்ள முருகன்கோவில் ஆசிரமத்திற்கு முன்பாக கிடந்தது. அவ்விடத்தில் ஒரு பியர் ரின், மதுபானப் போத்தல், சிகரெட் வெற்றுப்பெட்டி, ஒரு பிளாஸ்ரிக் கப், இரண்டு ஒனியன் பிஸ்கட் வெற்று உறையும் மங்களச்சந்திராவின் தலைக்கவசமும் இரண்டு பாதணிகளும் தூக்கி வீசப்பட்ட நிலையில் கிடந்ததை அவதானிக்க முடிந்துள்ளது.

அங்கு குடிப்பதானால் மங்களச்சந்திரா எத்தனை மணிக்குச் சென்றார்? வீட்டிலிருந்து எத்தனை மணிக்கு புறப்பட்டார் என சி.சி.ரி.வி. கெமராக்கள் காட்டவில்லையா? அவ்விடத்திற்கு அவர் தனியாகச் சென்றாரா அல்லது வேறு யாருடனும் சென்றாரா? அவர் சென்ற மோட்டார்சைக்கிளின் திறப்பு அவரது ரீசேட் பையில் இருந்தது. அதேவேளை, மோட்டார்சைக்கிளில் ஒரு திறப்பு இருந்துள்ளது. மேலும் சடலம் தூக்கிச்சென்று வீசப்பட்டதுபோல் அவருடைய முகம் நிலத்தில் புதைந்து இருந்தமையையும் அவதானிக்க முடிந்ததாக சகோதரியான செபநாயகம் சந்திரகலா குறிப்பிட்டார்.

சந்தேகநபர்கள் கைதுசெய்யப்படாமை குறித்து பொலிஸார் குறிப்பிடுகையில், உடற்கூற்றுப் பரிசோதனையில் புலனாகாத முடிவுகளை பகுப்பாய்வு செய்வதற்கு கொழும்பு பகுப்பாய்வு திணைக்களத்திற்கு உடற்கூற்று மாதிரிகள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. அதன் முடிவின் அடிப்படையில்தான் சட்டம் தனது கடமையினை செய்யும் என எதிர்பாக்கப்படுகின்றது.

மங்களச்சந்திராவின் உடல் அவரது சகோதரர்களினால்தான் திங்கட்கிழமை நாவற்குடா கத்தோலிக்க குடும்ப சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்பட்டது. இவ்விறுதிச்சடங்கில் மனைவியோ, மகனோ, மகளோ கலந்துகொள்ளாமை மக்கள் மத்தியில் பாரிய சந்தேகங்களை முன்னிறுத்தியுள்ளது. அது மாத்திரமல்ல, அவர் 25 ஆண்டுகள் தன்னுடைய குடும்பத்துடன் வாழ்ந்தவர். அந்த வாழ்க்கைக்கு அர்த்தம் இல்லாது இறந்த உடலைக் கூட மனைவி ஏற்று தனது இறுதிக்கடமைகளை கூடசெய்யவில்லை என்றால், எந்தளவு வைராக்கியமான மனம் படைத்த மனிதர்கள் இந்த உலகில் வாழ்கின்றார்கள்? தனது கணவனின் மரணத்தில் மனைவிக்கும் பிள்ளைகளுக்கும் சந்தேகம் வந்துள்ளதாக எங்கும் எவ்வாறான முறைப்பாடுகளையும் ஏன் செய்யவில்லை?

மரணமடைந்த அதிபரின் சகோதரியின் முறைப்பாட்டின் அடிப்படையில் சந்தேக நபர்களாக பெயர் குறிப்பிட்டவர்கள் இன்னும் கைதுசெய்யப்படாதது ஏன்? இதில் மூன்று நட்சத்திரம் கொண்ட பொலிஸ் அதிகாரியின் செல்வாக்கு பிரயோகிக்கப்படுவதாகவும் அவருக்கும் இறந்துபோன மங்களச்சந்திராவின் மனைவிக்கும் நெருக்கமான தொடர்பு உள்ளதாகவும் மக்கள் பரவலாக பேசிக்கொள்கின்றனர்.

மட்டக்களப்பில் இப்படியான கொடூரமான முறையில் கொலைசெய்யப்பட்ட மனிதனுக்கு நீதி கிடைக்குமா? குழந்தைகளை பெற்றவர்கள் கடுமையான அச்சத்தில் வாழ்கின்ற சூழலை ஏற்படுத்தியிருக்கும் சூத்திரதாரிகள் சட்டத்தின் முன்கொண்டுவரப்படவேண்டும் என்பதில் மட்டக்களப்பு மக்கள் ஆவலோடு உள்ளனர்.

மருத்துவமுறையில் மர்மமான முறையில் கொலைசெய்யப்பட்டிருக்கலாம் எனவும், சடலம் மீட்கப்பட்ட இடத்தில் ஊசி சிறிஞ்சி மீட்கப்பட்டமையும் சந்தேகிக்கப்படுகின்றது. இதற்கு மருத்துவத்துறை நான்காம் ஆண்டு மாணவன் ஒருவரும் தொடர்புபட்டிருக்கலாம் என சந்தேகத்தின்பேரில் பொலிஸில் முறைப்பாடு பதிவுசெய்யப்பட்டுள்ளது.

இவ்விடயத்தில் பொலிஸார் பாராமுகமாக செயல்படுவது ஏன் என்று மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

கல்விகற்ற சமூகத்தினர் இவ்வாறானதொரு செயலை திட்டமிட்டு நடத்தியிருக்கின்றனரா? என்று எண்ணும்போது எதிர்காலத்தில் எப்படி மனிதர்கள் நிம்மதியாக வாழ்வது என மக்கள் அங்கலாய்க்கின்றனர்.

# மட்டக்களப்பு மாவட்டத்தில் மழையினால் அறுவடை பாதிப்பு!



(கல்லடி நிருபர்)

மட்டக்களப்பு மாவட்டத்தில் நேற்று முன்தினம் (09) இரவு பெய்த அடைமழை காரணமாக திக்கோடை, 40ஆம் கிராமம், தும்பங்கேணி, களுமுந்தன்வெளி விவசாயக் கண்டங்களின் நெல் அறுவடைகள் பாதிக்கப்பட்டுள்ளதாக விவசாயிகள் கவலையோடு தெரிவிக்கின்றனர்.

இம்முறை நெல் அறுவடை குறைவடைந்த போதிலும், நெல்லுக்கான விலை அதிகரித்துக் காணப்படுகின்றது.

அந்தவகையில் தனியார்துறை வர்த்தகர்கள் 66 கிலோகிராம் கொண்ட ஒரு மூடை நெல்லை 4,800 ரூபாமுதல் 5000 ரூபாவரை கொள்வனவு செய்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# கிரான் பாலத்திலிருந்து குடும்பிமலை பிரதான வீதி 1,454 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீட்டில் புனரமைப்பு

(மட்டக்களப்பு நிருபர்)

மட்டக்களப்பு மாவட்டத்தில் யுத்தத்தினால் பாதிக்கப்பட்டு சுமார் 40 வருடகாலத்திற்கு மேலாக குண்டும் குழியுமாக மக்கள் போக்குவரத்திற்கு சிரமமாக காணப்பட்ட கிரான் புலிபாய்ந்த கல் வீதி தொடக்கம் குடும்பிமலை வரையான சுமார் 38 கிலோமீற்றர்





வரையான வீதிக்கான கார்பட் இடும் வேலைத்திட்டத்தின் ஆரம்பகட்ட பணிகளை அங்குரார்ப்பணம் செய்யும் நிகழ்வானது நேற்று (10) கிரான் பிரதேச செயலாளர் எஸ்.ராஜ்பாபு தலைமையில் இடம்பெற்றது.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் சுபீட்சத்தின் நோக்கு கொள்கைப் பிரகடனத்தின் கீழ் ஒரு இலட்சம் கிலோமீற்றர் கிராமிய வீதிகள் மற்றும் பாலங்களை அபிவிருத்தி செய்யும் நிகழ்ச்சித் திட்டத்தின்கீழ் கிரான் பிரதேச செயலக பிரிவில் மிக நீண்டகாலமாக செப்பனிடப்படாமல் குண்டும் குழியுமாக காணப்பட்ட கிரான் பாலத்திலிருந்து குடும்பிமலை வரை மற்றும் இலுப்படிச்சேனை சந்தியிலிருந்து கிரான் 5ஆம் கட்டை சந்தி வரையிலான 38 கிலோமீற்றர் நீளமான வீதியை 1,454 மில்லியன் ரூபா செலவில் கார்பட் இடும் பணிகள் நேற்று ஆரம்பித்துவைக்கப்பட்டன.

நாளாந்தம் குறித்த வீதியால் பயணித்துவரும் 14 பாடசாலையினை சேர்ந்த ஆசிரியர்கள் உட்பட 9 அரச நிறுவனங்களின் அதிகாரிகள் மட்டுமல்லாது மூவாயிரத்து ஐந்நூற்கும் மேற்பட்ட 18 கிராமசேவகர் பிரிவைச் சேர்ந்த மக்களும், 5000 மேற்பட்ட வயல் நிலங்களில் வேளாண்மை செய்யும் விவசாயிகளும், அன்றாடம் கூலித்தொழில் மற்றும் சுயதொழிலை மேற்கொள்வதற்காக குறித்த வீதியை பயன்படுத்துபவர்கள் வெள்ள காலத்தில் மிகுந்த சிரமத்தின் மத்தியில் தமது வாழ்வாதார ஜீபனோபாயத்தை நடத்திவந்ததுடன், குறித்த வீதி கார்பட் இடப்பட்டதும் இவர்களது வாழ்வாதார ஜீவனோபாயம் மேன்மையடைய வாய்ப்பேற்படுவதாகவும், குறித்த வீதியை செப்பனிட்டுத் தருவதையிட்டு அப்பகுதி மக்கள் அரசாங்கத்திற்கு தமது நன்றிகளை தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

# கனேடிய உயர்ஸ்தானிகராலய அரசியல் வர்த்தக ஆலோசகருடன் திருமலை ஊடக சங்கம் சந்திப்பு



(நிலாவெளி நிருபர்)

கனேடிய உயர்ஸ்தானிகராலய அரசியல் மற்றும் வர்த்தக ஆலோசகரான டேனியல் பூட், திருகோணமலை ஊடகவியலாளர் சங்க அங்கத்தவர்களை சந்தித்து சமகால நிலைவரம் பற்றி கலந்துரையாடினார்.

மேற்படி சந்திப்பானது நேற்று (10) அலஸ்தோட்டத்தில் அமைந்துள்ள அமரன்பே உல்லாச விடுதியில் நடைபெற்றது.

திருகோணமலையில் ஊடகவியலாளர்கள் சந்திக்கும் சவால்கள் மற்றும் ஊடகவியலாளர்களுக்கான தேவைகள் கலந்துரையாடப்பட்டன. தேவைகளைப் பொறுத்தளவில் எமது ஊடகவியலாளர்களுக்கு சிறப்பான பயிற்சிகளோ, திறன்விருத்தி வேலைத்திட்டங்களோ எதுவும் அற்ற நிலையில் தமது சொந்த அனுபவங்களைக்கொண்டே ஊடகப்பணிகளை மேற்கொள்கின்றனர். அந்த வகையில் ஊடகப் பயிற்சிகளைப் பெற கனேடிய உயர்ஸ்தானிகராலயம் உதவுதல் வேண்டும் என கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

அந்தவகையில் உயரிஸ்தானிகராலயம் இதனைப் பரிசீலனை செய்யும் என்றும் கனேடிய ஊடக நிபுணர்களைக்கொண்டு ஊடகவியலாளர்களுக்கான மூன்று வார கால பயிற்சி ஒன்றை வழங்குதல் பற்றியும் ஆலோசிக்கப்பட்டது.

## போழியார் புலம்பல்!



**தன்னை புலி எனக் கூறுவதில் எந்த பிரச்சனையும் இல்லை என தம்பி சாணக்கியன் எம்.பி. நாடாளுமன்றத் தில விளாசித்தள்ளினாரு எலுவா முந்தி ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி அமைப்பாளராக மகிந்த ராஷபக்சட ஊட்டு குசினிக்க படுத்து கிடந்து செல்லப்புள்ளயாக தன்னை சிங்கம் எண்டல்லவா விலாசம் காட்டினாரு அவரப்போல நடிக்கத்தெரிந்த அரசியல் வாதிகளுக்குத்தான் இப்ப காலம் அட கடவுளே.**



**சாய்ந்தமருது பிரதேச செயலகத்தினால் நடத்தப்பட்ட கிராம உத்தியோகத்தர்களுக்கிடையிலான அலுவலக முகாமைத்துவப் போட்டியில் முதலாம் இடத்தைப் பெற்ற கிராம உத்தியோகத்தர் எல்.நாஸர், அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் ஜே.எம்.ஏ.டக்ளஸினால் நினைவுச்சின்னம் மற்றும் சான்றிதழ் வழங்கி கௌரவிக்கப்படுவதைக் காணலாம்.**

(படம்:- மாவடிப்பள்ளி நிருபர்)

# தமிழ்த் தேசிய செயற்பாட்டாளர்களை விசாரணையென அச்சுறுத்தும் பயங்கரவாத குற்றத்தடுப்புப் பிரிவினர்

## தமிழ்த் தேசிய பண்பாட்டுப் பேரவை கண்டனம்

(கனகராசா சரவணன்)

தமிழ்த் தேசிய பண்பாட்டுப் பேரவையின் தீவிர தமிழ்த் தேசிய செயற்பாட்டாளர்களை குறி வைத்து தாக்கும் ஸ்ரீலங்காவின் பயங்கரவாத குற்றத்தடுப்பு விசாரணைப் பிரிவினரின் செயற்பாடுகளை வன்மையாக கண்டிப்பதாக தமிழ்த் தேசிய பண்பாட்டுப் பேரவை தலைமை ஒருங்கிணைப்பாளர் சுவீகரன் நிஷாந்தன் தெரிவித்தார்.

தமிழ்த் தேசிய பண்பாட்டுப் பேரவை தலைமை ஒருங்கிணைப்பாளர் சுவீகரன் நிஷாந்தன் நேற்று (10) கண்டன ஊடக அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளார்.

அரசியலமைப்பில் தனியொரு நபருக்கு இழைக்கப்படும் அநீதிகள், விசாரணைகள், தடை உத்தரவுகள் என்பவற்றை நோக்கும்போது நாட்டின் ஜனநாயகத்தின்மீது பெரும் கேள்விகளும், சந்தேகங்களும் எழுகின்றன.

இந்த நாட்டின் முக்கிய சட்டமான பயங்கரவாதத் தடைச் சட்டம் தமிழர்களை இல்லாதொழிப்பதற்கும், தமிழர்களை அடக்கி, ஒடுக்குவதற்குமே பயன்படுத்தப்பட்டுக்கொண்டிருக்கின்றது என்பதை இவர்களின் செயற்பாடுகள் மூலமாக அறிந்துகொள்ள முடிகின்றது.

இப்பயங்கரவாதத் தடைச்சட்டம் என்பது நாட்டின் அரசியலமைப்புச் சட்டத்திற்கு முரணானது என்பதை ஆட்சியாளர்களும், பௌத்த பேரினவாதிகளும் புரிந்துகொள்ள வேண்டும்.

தமிழர் தாயகப் பகுதிகளில் தமிழ் இனத்திற்கான சுயநிர்ணய உரிமையை வலியுறுத்தி போராடும் அனைத்து தமிழ் அமைப்புகள் மீதும் சிங்கள பேரினவாதம் பாசிசக் கரம் கொண்டு கடுமையான சட்டங்களை பாய்ச்சி இந்த அமைப்புகளை இல்லாதொழிக்கின்ற செயற்பாடுகளை தொடர்ச்சியாக செய்து வருகின்றது.

இதன் நீட்சியாகவே வடக்கு, கிழக்கிலுள்ள தமிழ் அமைப்புகளைச் சேர்ந்த தலைவர்கள் மற்றும் உறுப்பினர்கள் மீதும் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின்மூலம் பொய் வழக்குகளை புனைந்து விசாரணை என்கின்ற பெயரில் பெரும் அச்சுறுத்தலை மேற்கொண்டு வருகின்றார்கள்.



தமிழ்த் தேசிய பண்பாட்டுப் பேரவை என்கின்ற எமது அமைப்பு கடந்த ஒரு தசாப்தமாக தமிழர்களின் சுயநிர்ணய உரிமையை வலியுறுத்தும் வகையில் ஜனநாயக ரீதியில் அறவழியில் போராடி வருகின்றது. மக்கள் சக்தியை திரட்டி போராடும் வேளைகளில் எல்லாம் இவ்வமைப்பின் மீது அரசு பெரும் நெருக்கடிகளை நேரடியாகவும், மறைமுகமாகவும் உண்டாக்குகின்றது.

தமிழ்த் தேசிய பண்பாட்டுப் பேரவையின் முக்கிய செயற்பாட்டாளர்கள் மீது தொடர்ச்சியாக பயங்கரவாத குற்றத்தடுப்பு விசாரணைப் பிரிவினரால் கடுமையான விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன. அதுமட்டுமன்றி, பொய்யான குற்றச்சாட்டுகளும் சுமத்தப்படுகின்றன.

இலங்கையின் சுதந்திர தினத்தன்று காலைமுதல் மாலைவரை பல மணிநேரம் தமிழ்த் தேசிய பண்பாட்டுப் பேரவையின் யாழ். மாவட்ட அமைப்பாளரான கஜேந்திரன் ஜெனகன் மீது பயங்கரவாத குற்றத்தடுப்பு விசாரணைப் பிரிவு, தேசிய புலனாய்வுப் பிரிவு, பொலிஸ் குற்றத்தடுப்புப் பிரிவு என பல பிரிவினரால் யாழ் மாவட்ட அவர்களது அலுவலகங்களில் தடுத்து வைத்து அச்சுறுத்தும் வகையில் பல கோணங்களில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டிருந்தன.

இதற்கு முன்னர் பல முறை சுவீகரன் நிஷாந்தன், நடராஜா ரவிவர்மா போன்றவர்களும் பயங்கரவாத குற்றத்தடுப்பு விசாரணைப் பிரிவினரால் விசாரணை எனும் பெயரில் இடம்பெற்ற அச்சுறுத்தல்களுக்கும் முகங்கொடுத்திருந்தார்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது.

புலனாய்வுத்துறையினரால் தமிழ்த் தேசிய தீவிர செயற்பாட்டாளர்கள், தமிழ்த் தேசிய ஊடகவியலாளர்கள் போன்றவர்களை அச்சுறுத்தும் வகையில் திட்டமிட்டு அரங்கேற்றும் விசாரணைகளை தமிழ்த் தேசிய பண்பாட்டுப் பேரவை வன்மையாக கண்டிப்பதுடன், இது போன்ற செயற்பாடுகளை தமிழர் தாயகப் பகுதிகளில் ஸ்ரீலங்கா அரசு நிறுத்திக்கொள்ள வேண்டும் எனவும் எம் இளைஞர்களுக்காக தொடர்ந்தும் நாம் குரல் கொடுப்போம் என்று இந்த அரசுக்கு கூறிக்கொள்ள விரும்புகின்றோம் எனவும் அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

# கல்முனை பொலிஸ் நிலையத்தில் புதிய ஆண்டிற்கான பரிசோதனை





(கல்முனை, பெரியநீலாவணை நிருபர்கள்)

கல்முனை பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் பொலிஸ் உத்தியோகத்தர்களின் புதிய ஆண்டிற்கான பரிசோதனை கல்முனை பொலிஸ் நிலையத்தில் நேற்று (10) இடம்பெற்றது.

கல்முனை பிராந்திய உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் லசந்த புத்திகவின் நெறிப் படுத்தலில் கல்முனை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி எம்.ரம்சின் பக்கீர் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் அம்பாறை மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் எம்.ஜெயந்தரத்னாயக்க கலந்துகொண்டு பொலிஸ் நிலையத்தை பார்வையிட்டதுடன், மேலும் பொலிஸாரால் பொதுமக்களுக்கு வழங்கப்படும் பொலிஸ் சேவை பிரிவு நிலையங்கள், சுற்றுச்சூழல், பொலிஸ் உத்தியோகத்தர்களின் தங்குமிட அறைகளை பார்வையிட்டதுடன், பொலிஸார் பயன்படுத்தும் வாகானங்களையும் பரிசோதனை மேற்கொண்டார்.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

# கிழக்கு மாகாண ஆசிரியர் ஆலோசகர் சேவை உள்ளீர்ப்புக் கடிதங்களை வழங்க நடவடிக்கை

(நற்பிட்டிமுனை நிருபர்)

கிழக்கு மாகாண கல்வித் திணைக்களத்தின்கீழ் கடமைபுரியும் ஆசிரிய ஆலோசகர்களுக்கான ஆசிரியர் ஆலோசகர் சேவை உள்ளீர்ப்புக் கடிதங்களை வழங்குவதற்கான ஏற்பாடுகள் தற்போது துரிதப்படுத்தப்பட்டு வருகின்றன.

கல்வி அமைச்சிலிருந்து வருகைதந்த கல்வி அதிகாரிகள் குழுவினர் சுயவிபரக் கோவைகளை பரீட்சித்துள்ளனர்.

கொரோனா காரணமாக கோவைகள் நீண்டநாட்களாக மேற்பார்வை செய்யாமல் இருந்ததோடு உள்ளீர்ப்புக் கடிதம் வருவதிலும் தாமதங்கள் ஏற்பட்டன.

இதேவேளை, சுயவிபரக்கோவைகளை கிழக்கு மாகாண வலயக்கல்வி அதிகாரிகள் சமுகமளித்து தத்தமது வலயங்களுக்கு எடுத்துச்செல்லுமாறு மாகாணக் கல்விப் பணிப்பாளரால் அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் தெரியவந்துள்ளது.

50 வருடகால போராட்டத்திற்கு இந்த அரசு காலத்திலேயே தீர்வு காணப்பட்டமையும் குறிப்பிடத்தக்கதாகும்.

அகில இலங்கை ஆசிரிய ஆலோசகர் தொழிற்சங்கத்தினர் உள்ளீர்ப்பு சேவை கடிதம் தொடர்பாக பல்வேறு நடவடிக்கை களை மேற்கொண்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

# மூதூரில் ஹெரோயினுடன் இருவர் கைது

(மூதூர் நிருபர்)

மூதூர் பொலிஸ் பிரிவிலுள்ள ஹைரியா நகர்ப் பகுதியில் வைத்து ஹெரோயின் போதைப்பொருளுடன் இரண்டு சந்தேக நபர்களை நேற்று முன்தினம் (09) கைதுசெய்துள்ளதாக மூதூர் பொலிஸார் தெரிவித்தனர்.

இதன்போது ஹெரோயின் போதைப் பொருளை விற்பனைசெய்வதற்கு வைத்திருந்த மூதூர் - ஹைரியா நகரைச் சேர்ந்த 48 வயதுடைய நபரொருவரிடமிருந்து 100 மில்லிகிராம் ஹெரோயினும், 39 வயதுடைய மற்றுமொரு சந்தேகநபரிடமிருந்து 30 மில்லிகிராம் ஹெரோயின் போதைப்பொருளும் மீட்கப்பட்டதோடு, சந்தேகநபர்கள் இருவரும் கைதுசெய்யப்பட்டதாக மூதூர் பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த சந்தேகநபர்கள் ஹெரோயின் வைத்திருப்பதாக மூதூர் சிறு குற்றத்தடுப்புப் பொலிஸாருக்குக் கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின் அடிப்படையில் சுற்றிவளைப்பினை மேற்கொண்டபோது ஹெரோயினுடன் சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர்கள் பொலிஸ் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ளதுடன், இவர்களை மூதூர் நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்துவதற்கான ஏற்பாடுகளை மூதூர் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

# திருமலையில் ஹெரொயினுடன் கைதானவருக்கு இம்மாதம் 21ஆம் திகதிவரை விளக்கமறியலில்

(கந்தளாய் நிருபர்)

திருகோணமலை தலைமையகப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் 2 கிராம் 300 மில்லிகிராம் ஹெரோயின் போதைப்பொருளை வைத்திருந்த நபர் ஒருவரை இம்மாதம் 21ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு திருகோணமலை நீதிமன்ற நீதிவான் ரஸாக் பயாஸ் நேற்று முன்தினம் (09) உத்தரவிட்டார்.

கொட்பே, சமூத்திராகம, திருகோணமலை பகுதியைச் சேர்ந்த 39 வயதுடைய ஒருவரே விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

சந்தேகநபர் திருகோணமலை நகரில் வைத்து 2 கிராம் 300 மில்லிகிராம் ஹெரோயின் போதைப்பொருளுடன் நின்றவேளை திருகோணமலை தலைமையக போதைப்பொருள் குற்றத்தடுப்புப் பொலிஸாருக்குக் கிடைத்த தகவலுக்கமைய கைதுசெய்து திருகோணமலை நீதிமன்ற நீதிவான் முன்னிலையில் ஆஜர்படுத்தியபோதே விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

சந்தேகநபருக்கெதிராக ஹெரோயின் போதைப்பொருள் வைத்திருந்த வழக்குகள் இரண்டு திருகோணமலை நீதிமன்றில் நடைபெற்றுவருவதும் குறிப்பிடத்தக்கது.

# கொக்கட்டிச்சோலையில் காட்டு யானைகள் அட்டகாசம்



(கல்லடி நிருபர்)

கொக்கட்டிச்சோலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட விடுதிக்கல் பிரதேசத்திலுள்ள காளிகாபுரம் வீட்டுத்திட்டப் பகுதிக்குள் காட்டு யானைகள் புகுந்து வீடுகள் மற்றும் பயிர்களைச் சேதப்படுத்திய சம்பவம் கடந்த செவ்வாய்க் கிழமை (08) இடம்பெற்றுள்ளது.

இதன்போது குறித்த பகுதிக்குள் உள்நுழைந்த காட்டு யானைகள் வீட்டு மதிலை உடைத்துள்ளதுடன், பயிர்வகைகளையும் சேதப்படுத்தியுள்ளதாக அப்பிரதேசவாசிகள் தெரிவித்தனர்.

இந்நிலையில், தங்கள் குடியிருப்புகளை அண்டிய பகுதிகளுக்கு மின்சார வேலி அமைத்துத்தர சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவேண்டுமெனவும் அவர்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

# ஒரே தட்டில் பிரியாணி சாப்பிடும் ஹக்கீமும் சம்பந்தனும் நினைத்திருந்தால் சண்முகா பிரச்சினையை தீர்த்திருக்கலாம்

## ஐக்கிய காங்கிரஸ் தலைவர் முபாரக் அப்துல் மஜீத்

(மாளிகைக்காடு நிருபர்)

திருகோணமலை சண்முகா பாடசாலையின் அதிபர் ஊடகங்களின் முன்னிலையில் ஆசிரியை பஹ்மிதா அணிந்த ஆடை ஒழுக்க விழுமியமற்ற ஆடையாக அபாயாவை தெரிவித்தார். உடலை முழுவதுமாக மூடும் அபாயா ஒழுக்கமான ஆடையாக இல்லாதுவிட்டால் அவர் கூற வரும் ஒழுக்கமான ஆடை ஜன்னல் வைத்த ஜாக்கட்டும் இடுப்புத் தெரியும் சாரியுமா அல்லது குட்டை பாவாடையையா? முன்னொரு காலத்தில் அணிந்த சாரியை போன்றில்லாது இப்போது கால ஓட்டத்தில் சந்தையிலுள்ள சாரிகள் மிக கவர்ச்சியாக உள்ளன என பிரபல எழுத்தாளர்கள், பாடலாசிரியர்கள் பகிரங்கமாகவே தெரிவித்துள்ளார்கள். அபாயா ஒழுக்கம் நிறைந்த ஆடையெனவும் ஐக்கிய காங்கிரஸின் தலைவர் மௌலவி கலாபூஷணம் முபாரக் அப்துல் மஜீத் தெரிவித்தார்.

கல்முனை காரியாலயத்தில் புதன்கிழமை நடைபெற்ற பத்திரிகையாளர் சந்திப்பில் கலந்துகொண்டு பேசிய அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். தொடர்ந்தும் கருத்து தெரிவித்த அவர்,

திருகோணமலை சண்முகா பாடசாலையின் உள்ளே சென்றால் பெண்பிள்ளைகள் அவர்களின் தலையை மறைத்து அணியும் ஆடையான முக்காட்டை கழற்றிவைத்துவிட்டு செல்லவேண்டும் என்பதாக அறிகின்றோம். அது மனிதாபிமானமற்ற, இனவாத செயற்பாடாகும். அது ஒரு தேசிய பாடசாலை. இலங்கை அரசினால் அப்படியான சட்டம் எந்த பாடசாலையிலும் அமுலில் இல்லை. தொப்பி போடக்கூடாது, தலைமை மூடக்கூடாது என்று சுற்றுநிருபங்கள் வெளிவந்ததாக எனக்குத் தெரியாது.

கடந்த காலங்களில் தமிழ்ப் பெண்கள் பொட்டு வைக்கக்கூடாது என்ற நடைமுறைகளை சிலர் கூறியதும், காரைதீவில் வைத்து முஸ்லிம்களின் தொப்பிகளை கழற்றிய வரலாறுகளும் இருக்கின்றன. ஒரு தமிழ் சகோதரி தன்னுடைய பொட்டை கலைத்தால் எப்படி கூச்சப்பட்டு கூனிக்குறுகிப்போவாளோ அதுபோன்றுதான் முஸ்லிம் பெண்ணும் தன்னுடைய ஆடை கலாசாரத்தில் கைவைத்தால் கூனிக் குறுகிப் போவாள். கடந்த நல்லாட்சி காலத்தில் கொழும்பில் சில பாடசாலைகளில் பெண்பிள்ளைகள் காற்சட்டை அணிய முடியாத நிலை உருவாகியதை நாங்கள் கண்டோம். இப்படியான நடைமுறைகள் மனிதாபிமானமற்ற இனவாத சிந்தனை கொண்டவை. இதனால் நாட்டுக்கும், சிறுபான்மை சமூகத்திற்கும் ஆபத்து உள்ளது.




எமது உரிமைகள் கிடைக்கவேண்டுமாக இருந்தால் நாம் அடுத்தவர்களின் உரிமையை மதிக்கவேண்டும். சண்முகா பாடசாலையில் நடைபெற்ற விடயம் நிரந்தர பகையானதாக மாறிவிடக்கூடாது என்பதே எங்களின் பிரார்த்தனையாக இருக்கிறது. முஸ்லிம்களுக்கு ஆதரவானவர்கள்போன்று காட்டிக்கொள்ளும் சாணக்கியன், சுமந்திரன் போன்றவர்கள் தங்களுடைய இனத்தவர்கள் செய்யும் காரியங்களுக்கு எதிர்ப்புத் தெரிவிக்காமல் மௌனம் காப்பது சிறந்ததல்ல. பொத்துவில் பொலிகண்டி ஆர்ப்பாட்டத்திபோதே அவர்களின் சுயரூபம் வெளித்தது.

எமது நாட்டின் அரசாங்கம் கொரோனா அலையின் பலத்த பின்னடைவின் மத்தியிலும் ஸ்திரத்தன்மையுடன் இருக்கிறது. கடந்த நல்லாட்சிக் காலத்துடன் ஒப்பிட்டுப்பார்த்தால் இந்த அரசாங்கம் சிறப்பாக உள்ளது. நல்லாட்சி காலத்தில் இனவாதம் தலைதூக்கி சிறுபான்மைக்கு எதிரான அரசாங்கமாக இருந்தது. திருகோணமலை சண்முகா பாடசாலை விடயம் ஆரம்பித்த காலத்தில் இனவாதிகளின் கை ஓங்கியிருந்தது.

ரிஷாட், ஹக்கீம், ஹலீம், கபீர் காஸிம், மஹ்ரூப் போன்ற பலரும் அமைச்சர்களாக இருந்தும் அந்தப் பிரச்சினைக்கு தீர்வுகாண முடியாமலே இருந்தது. இந்த அரசாங்கத்தில் மக்களால் தெரிவுசெய்யப்பட்ட முஸ்லிம்கள் யாரும் அமைச்சரவையில் இல்லை. ஆனாலும் அவர்களின் காலத்துடன் ஒப்பிடும்போது சிறுபான்மையினருக்கு இந்த அரசாங்கத்தில் பிரச்சினை குறைவாகவே உள்ளது. அவர்களினால் நல்லாட்சிக் காலத்தில் பூச்சாண்டி காட்டியதை தவிர சமூகத்திற்கு எதையும் சாதிக்க முடியாமலே போனது.

தமிழ் மக்களுடன் இணக்கப்பாட்டுடன் பேசி பிரச்சினைகளை தீர்க்க முடியாதவர்களாகவே முஸ்லிம் தலைவர்கள் இருக்கிறார்கள். சம்பந்தன் வீட்டில் பிரியாணி சாப்பிடும் ஹக்கீம் நினைத்தால் இந்த பிரச்சினைகளை உடனடியாக தீர்க்க முடியும். நாடுகடந்த டயஸ்போறாக்களின் முகவர்களாக இருக்கும் இவர்களுக்கு சமூகத்தை பற்றிய கவலைகள் இல்லை. பதவிகள் மீதும், பணத்தின் மீதுமே பற்றுள்ளது - என்றார்.

## மூதூரில் இறைச்சிக்கடை உரிமையாளர்களுடன் சுகாதார வைத்தியதிகாரி ஹில்மி கலந்துரையாடல்



(மூதூர் நிருபர்)

மூதூர் பிரதேச சபைக்குட்பட்ட தோப்பூர், மூதூர் மற்றும் ஆசாத் நகர் இறைச்சிக்கடை உரிமையாளர்களுடன் உணவு பாதுகாப்பு தொடர்பான கலந்துரையாடல் நேற்று முன்தினம் (09) மூதூர் சுகாதார வைத்தியதிகாரி அலுவலகத்தில் மூதூர் சுகாதார வைத்தியதிகாரி முகைதீன் பாவா ஹில்மி தலைமையில் இடம்பெற்றது.

இக்கலந்துரையாடலில் அறுவைச்சாலையின் சுகாதாரம், இறைச்சியினை கொண்டுசெல்லல், இறைச்சிக்கடைகளிலிருந்து விநியோகித்தலில் முறையான உணவுப் பாதுகாப்பு மற்றும் சுகாதார நடைமுறைகளைப் பேணல் தொடர்பாக இறைச்சிக் கடை உரிமையாளர்களுக்கு தெளிவூட்டப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இதன்போது பின்வரும் விடயங்கள் முன்னுரிமைப்படுத்தப்பட்டன. அறுவைச்சாலையின் கட்டடம் மற்றும் சுற்றுப்புறத்தின் பாதுகாப்பு, கட்டடத்திற்கு பாதுகாப்பான கூரை அமைத்தல், சுற்றுப்புற மதில் அமைத்து பாதுகாப்பான நுழைவாயிற் கதவு இடல், திரவக் கழிவுகளை அகற்ற முறையான குழிகள் அமைத்தல், தோல் மற்றும் எலும்புக் கழிவுகளை முறையாக அகற்றுதல், இறைச்சி மற்றும் பாகங்களை நீர்கொண்டு முறையாக கழுவுதல், மிருக வைத்தியர் மற்றும் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களுக்கான தனி அறை அமைத்தல், அறுவைச்சாலையில் மலசலகூடம் அமைத்தல், இதுதவிர அறுவைச்சாலையிலிருந்து கடைகளுக்கு இறைச்சியினை முறையாக மூடி பாதுகாப்பான வாகனத்தில் கொண்டுசெல்லல், கடைகளில் கட்டாயம் இலத்திரனியல் தராசு பயன்படுத்தல், கடைகள் நிரந்தர கட்டடமாக அமைத்தல், சுத்தம் செய்யக்கூடியதாக தரை மற்றும் சுவர்களை அமைத்தல், கடைகளுக்கு பாதுகாப்பான கதவு மற்றும் ஜன்னல் அமைத்தல் என்பன தீர்மானமாக மேற்கொள்ளப்பட்டன.

இந்நிகழ்வில் மூதூர் பிரதேச சபைத் தவிசாளர் எம்.எம்.ஏ.அறூஸ், சுற்றாடல் பாதுகாப்பு அதிகார சபையின் உத்தியோத்தர்கள் மற்றும் மூதூர் பிரதேச சபையின் தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

## திருகோணமலை மாவட்ட பரீட்சைக் கடமைகளில் இனரீதியான பாகுபாடு

### இம்ரான் எம்.பி. பரீட்சை ஆணையாளரிடம் முறையீடு

(கிண்ணியா நிருபர்)

திருகோணமலை மாவட்டத்தில் இம்முறை வழங்கப்பட்ட 5ஆம் தர மற்றும் உயர்தரப் பரீட்சைக் கடமைகளில் இனரீதியான பாகுபாடு காட்டப்பட்டுள்ளதாக திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இம்ரான் மஹ்ரூப் பரீட்சை ஆணையாளர் நாயகத்துக்கு எழுத்து மூலம் முறைப்பாடு செய்துள்ளார்.

பரீட்சை ஆணையாளர் நாயகத்துக்கு அவர் நேற்று முன்தினம் (09) எழுதியுள்ள கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

திருகோணமலை மாவட்டத்தில் 5ஆம் தர மற்றும் உயர்தரப் பரீட்சைக் கடமைக்காக இம்முறை வழங்கப்பட்டுள்ள நியமனங்களில் வழமைக்கு மாறாக இனரீதியாக புறக்கணிப்புகள் இடம்பெற்றுள்ளதாக அதிபர், ஆசிரியர்கள் என்னிடம் புகார் தெரிவிக்கின்றனர்.

அவர்கள் பின்வரும் விடயங்கள் தொடர்பாக எனது கவனத்திற்கு கொண்டுவந்துள்ளனர். எனவே, தயவுசெய்து இது விடயங்களில் உடன் கவனம் செலுத்தி உரிய நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

1. இந்த பரீட்சைக் கடமை நியமனங்களில் வழமையாகப் பின்பற்றப்பட்டுவந்த இனச்சமநிலை பின்பற்றப்படவில்லை. முஸ்லிம் அதிபர், ஆசிரியர்கள் இம்முறை பரீட்சைக் கடமைகளில் ஓரங்கட்டப்பட்டுள்ளனர்.

2. பரீட்சைக் கடமை வழங்கப்பட்ட கிண்ணியா, மூதூர், தோப்பூர் போன்ற பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள் புல்மோட்டை, கோமரங்கடவெல போன்ற 80 கிலோமீற்றருக்கும் அதிக தூரப் பிரதேசங்களுக்கு நியமிக்கப்பட்டுள்ளனர். அயல் பிரதேசமான திருகோணமலை, குச்சவெளி போன்ற பிரதேசத்தவர்களே வழமையாக இப்பகுதி பரீட்சைக் கடமைக்கு நியமிக்கப்பட்டனர். இம்முறை சிரமப்படுத்த வேண்டும் என்ற அடிப்படையில் இந்த நிலை திட்டமிட்டு மாற்றப்பட்டுள்ளதாக கூறப்படுகின்றது.



3. வழமையாக வலயக்கல்விப் பணிப்பாளர்களினால் வழங்கப்படும் பெயர்ப் பட்டியல்களிலிருந்தே பரீட்சைக் கடமை நியமனங்கள் செய்யப்பட்டன. இவ்வாறு செய்தவதனூடாக சிரேஷ்டத்துவம், தகைமை என்பன கவனத்திற்கொள்ளப்பட்டிருக்கும். இம்முறை இந்த நிலை பின்பற்றப்படவில்லை. வலயக்கல்விப் பணிப்பாளர்களின் பெயர்ப் பட்டியலுக்கு வெளியே விருப்பு வெறுப்புக்கேற்ப நியமனங்கள் செய்யப்பட்டுள்ளன.

4. அதிபர், ஆசிரியர்களின் சிரேஷ்டத்துவம் கவனத்திற்கொள்ளப்படாமல் முதலாந்தர அதிபர், ஆசிரியர்கள், உதவி மேற்பார்வையாளர்களாக இம்முறை நியமிக்கப்பட்டுள்ளனர். வழங்கப்பட்ட நியமனக் கடிதங்களில் கூட பெயர், தரம், பாடசாலை என்பன சரியாகக் குறிப்பிடப்படாது பல்வேறு குறைபாடுகளுடன் காணப்படுவதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

5. மேற்பார்வை விளக்கக் கூட்டத்தில் கலந்து கொண்டோரிடமிருந்து ஒப்பம் பெறப்பட்டபோது பரீட்சை நிலையமோ மேற்பார்வையாளர், உதவி மேற்பார்வையாளர் கடமைகளோ குறிப்பிடப்படாது ஒப்பங்கள் பெறப்பட்டதாகவும் பின்னர் விருப்பத்திற்கேற்ப மாற்றங்கள் செய்யப்பட்டதாகவும் கூறப்படுகின்றது.

6. பரீட்சைக் கடமை தொடர்பாக தெளிவு படுத்தும் கூட்டம் பகல் 12 மணிவரை நடைபெறும் என அறிவிக்கப்பட்டிருந்தாலும் மாலை 5 மணிவரை அது நடத்தப்பட்டுள்ளது. கலந்துகொண்டவர்களுக்கு மதிய உணவு கூட வழங்கப்படவில்லை. இக்கூட்டத்தில் வைத்தும் நியமனங்களில் விருப்பு வெறுப்புகள் காட்டப்பட்டு மாற்றங்கள் செய்யப் பட்டதாக கலந்துகொண்டோர் புகார் தெரிவிக்கின்றனர்.

நேர்மையாக நடக்கவேண்டிய பரீட்சைக் கடமைகளில் இவ்வாறான இனரீதியான புறக்கணிப்புகளும் விருப்பு வெறுப்புகளும் இடம்பெற்றால் பரீட்சைத் திணைக்களத்தின் நம்பகத்தன்மை கேள்விக்குறியாகிவிடும் என்பதை தங்களது மேலான கவனத்திற்கு தயவுடன் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

எனவே, இது விடயங்களைக் கவனத்திற் கொண்டு உடன் நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக் கொள்வதோடு எதிர்காலத்தில் நடுநிலையாகச் செயற்படுவோரை பரீட்சை பிராந்திய இணைப்பாளர்களாக நியமிக்க நடவடிக்கை எடுக்குமாறும் கேட்டுக்கொள்கிறேன் என கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதனைவிட சொந்த பிரதேசம் தவிர்ந்த அடுத்த பிரதேசத்தைச் சேர்ந்தவர்களே பரீட்சைக் கடமைகளுக்கு நியமிக்கப்பட்டுள்ள நிலையில் திருகோணமலை சண்முகா பாடசாலை பரீட்சைக் கடமைகளில் திடீர் மாற்றம் செய்யப்பட்டு திருகோணமலையைச் சேர்ந்தவர்களையே அங்கு பரீட்சைக் கடமைகளுக்கு நியமிக்கப்பட்டுள்ளதால் சந்தேகநிலை ஏற்பட்டுள்ளதாக திருகோணமலையிலிருந்து எனது கவனத்திற்கு கொண்டுவரப்பட்டுள்ளது. எனவே, இந்த விடயத்தையும் கவனத்திற்கொள்ளுமாறும் அவர் பரீட்சை ஆணையாளரிடம் கேட்டுள்ளார்.

## நிந்தவூர் வீதியில் சரிந்துவிழும் நிலையிலுள்ள மரம்

### பாதசாரிகள், வாகன சாரதிகள் அச்சம்



(காரைதீவு நிருபர்)

நிந்தவூர் பிரதான வீதியில் அமைந்துள்ள பத்திரிகை விற்பனை நிலையத்துக்கு அருகாமையில் காணப்படும் நிழல் மரம் வீதியில் சரிந்துவிழும் நிலையில் உள்ளதாக பாதசாரிகள் அச்சம் தெரிவிக்கின்றனர்.

வீதியோரத்திலுள்ள மரத்தை அகற்ற நடவடிக்கை மேற்கொள்வதற்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கவனம் செலுத்தவேண்டுமென பாதசாரிகள் கோரிக்கை விடுக்கின்றனர்.

## திருகோணமலை சண்முகா கல்லூரி சம்பவத்தில் சமூக உறவு பாதிக்காத தீர்வு எட்டப்படவேண்டும்

### அம்பாறை மாவட்ட நல்லிணக்க மன்றங்கள் கோரிக்கை

(பெரியநீலாவணை நிருபர்)

திருகோணமலை மாவட்டத்திலுள்ள பாடசாலை ஒன்றில் இடம்பெற்ற சர்ச்சை சம்பந்தப்பட்ட விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு சுமுகமான தீர்வுகள் எட்டப்பட வேண்டும். இதுவிடயத்தில் அதிகாரிகள் பொறுப்புடனும் விரைவாகவும் நடவடிக்கை எடுக்கும் அதேவேளை, சமூக நல்லிணக்கத்தைப் பாதிக்காத வகையில் தீர்வுகள் எட்டப்பட வேண்டும் - என அம்பாறை மாவட்ட நல்லிணக்க மன்றம் மற்றும் பிரதேச நல்லிணக்க மன்றங்கள் ஒன்றிணைந்து கோரிக்கை ஒன்றை விடுத்துள்ளன.

மாவட்ட நல்லிணக்க மன்றம் மற்றும் பிரதேச நல்லிணக்க மன்றங்களுடன் கடந்த 07ஆம் திகதி எட்டப்பட்ட தீர்மானங்களுக்கமைய மாவட்ட நல்லிணக்க மன்றத்தின் இணைப்பாளர்களான எஸ்.எல்.ஏ.அஸீஸ், ஏ.சுதர்சன், ஐ.சீ.சேருவத்த ஆகியோர் ஒப்பமிட்டு இந்தக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது அதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

இச்சம்பவம் தொடர்பாக உண்மைத் தன்மையினை ஆராய்ந்து சம்பந்தப்பட்ட அதிகாரிகள் பொறுப்புடனும் விரைவாகவும் நடவடிக்கை எடுக்கும் அதேவேளை, சமூக நல்லிணக்கத்தைப் பாதிக்காத வகையில் நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும்.

குறித்த முரண்பாடு வளர்ந்து செல்லாது சுமூகமாக தீர்த்துக்கொள்ள கிழக்கு மாகாணத்தில் அதிலும் குறிப்பாக, திருகோணமலையிலுள்ள சமய சமூகம்சார் நல்லிணக்க அமைப்புகள் கலந்துரையாடல்களை நடத்தி அதனைத் தீர்த்துக்கொள்ள முன்வரவேண்டும்.

இலத்திரனியல், அச்சு ஊடகங்கள், சமூக வலைத்தளங்கள் இவ்விடயம் தொடர்பாக சமூக நல்லிணக்கத்தினைப் பாதிக்காத வகையில் தகவல் பரிமாற்றங்களை மேற்கொள்வதுடன், அதனை சுமூகமாக தீர்க்கும் வகையில் செயற்படவேண்டும்

ஒரு குறித்த பிரச்சினையை பூதாகரமாக்கி தேசிய ரீதியில் சமூகத்தின் நல்லிணக்கத்தை சீர்குலைக்க விளையும் சக்திகள் வன்மையாகக் கண்டிக்கப்படவேண்டும். அரசியல் சார்ந்தோர் தங்களது அறிக்கைகளை விடும்போது இன, சமூக நல்லிணக்கத்தை கருத்திற்கொண்டு பொறுப்புணர்வுடன் அறிக்கையிடுமாறும் செயற்படுமாறும் தயவாய் வேண்டுகிறோம்.

பொறுப்புவாய்ந்த திணைக்களங்கள் மற்றும் அரச அமைப்புகள் குறித்த பிரச்சினை ஏற்படும்போது சாதுரியமாகவும் துரிதமாகவும் நல்லிணக்கத்திற்கு பங்கம் ஏற்படாத வகையிலும் தீர்த்துக்கொள்வதனூடாக எதிர்காலத்தில் நல்லிணக்கத்தை முன்னெடுக்க ஒத்துழைப்பு நல்க வேண்டும்.

இன்றைய மாணவர் சமூகம் நாளைய தலைவர்களாக உருவாக்கப்படவேண்டும் என்ற நோக்கை கருத்திற்கொண்டு மாணவர்களை நல்வழிப்படுத்தும் செயற்பாட்டில் கல்விச் சமூகம் கரிசனைகொள்ள வேண்டும் என வேண்டுகின்றோம்.

நம் நாட்டில் வாழும் அனைவரும் எதிர்காலத்தில் சகல இன, சமூக கலாசார விடயங்களுக்கு மதிப்பளிக்கும் வகையில் நல்லிணக்கமாகவும் சுதந்திரமாகவும் வாழ்வதற்கான சூழ்நிலைகளை கட்டியெழுப்புவதற்கு நாம் அனைவரும் ஒன்றிணைந்து செயற்படுவோம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

## சண்முகா கல்லூரி அபாயா சர்ச்சை; ஆசிரியை பஹ்மிதா - ஹக்கீம் சந்திப்பு



(பதுர்தீன் சியானா)

திருகோணமலை சண்முகா இந்து மகளிர் கல்லூரி அபாயா சர்ச்சையில் பாதிக்கப்பட்ட ஆசிரியை பஹ்மிதா ரமீஸ், நேற்று முன்தினம் (09) ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீமை சந்தித்துள்ளார்.

இச்சந்திப்பு கட்சித் தலைமையகம் தாருஸ்ஸலாமில் இடம்பெற்றுள்ளது.

பாதிக்கப்பட்ட ஆசிரியை நீதிமன்றத்தை நாடியபோது மீண்டும் அதே பாடசாலைக்கு பணியமர்த்தியமை தொடர்பில் ஆராயப்பட்டதுடன், மேல் நடவடிக்கைகள் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது.

அத்துடன், தற்போதைய நிலைவரம், மாகாண கல்வி அமைச்சினால் அனுப்பப்பட்டுள்ள கடிதங்கள் தொடர்பில் ஆராயப்பட்டதுடன், இது தொடர்பில் தொலைபேசி ஊடாக மாகாண கல்விப் பணிப்பாளருடன் பேசப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தக் கலந்துரையாடலின்போது கிழக்கு மாகாண முன்னாள் அமைச்சர் எம்.எஸ்.உதுமாலெப்பை கலந்துகொண்டதும் குறிப்பிடத்தக்கது.

## நாடித்துடிப்பில் உடல் சமநிலையை அறிந்து சிகிச்சையளிக்கும் யுனானி மருத்துவ முறை

(பைஷல் இஸ்மாயில்)

யுனானி வைத்தியர் வைத்திய கலாநிதி ஹக்கீம் அஜ்மல்கான் 1868ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 11ஆம் திகதி இந்தியாவில் பிறந்து யுனானி மருத்துவத்தின் வளர்ச்சிக்கும், உயர்ச்சிக்கும் வித்திட்டு அளப்பரிய சேவைகளையும் செய்தவராவார். அவரின் பிறந்த தினத்தையும், யுனானி மருத்துவத்துறைக்கு அவர் செய்த அளப்பரிய சேவைகளையும் கருத்திற்கொண்டு முதன்முதலாக 2017ஆம் ஆண்டு CRIUM Hyderbadஇல் கொண்டாடப்பட்டது. அன்றிலிருந்து ஒவ்வொரு வருடமும் பெப்ரவரி 11ஆம் திகதி உலக யுனானி தினம் சர்வதேச ரீதியாக கொண்டாடப்பட்டு வருகின்றது. இத்தினத்தின் முக்கிய நோக்கம் யுனானி மருத்துவமுறை குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்துவதாகும்.

மருத்துவத்தின் தந்தையான புஹ்ராத் என அழைக்கப்படும் ஹிப்போகிரட்டீஸ் (Hippoocrates) இன் humoral theory இனூடாக கிரேக்கத்தில் ஆரம்பமான யுனானி வைத்தியம் இந்தியாவினூடாக அரபு வைத்தியம் என்ற பெயரில் அரபிகளின் கரையோர வருகையுடன் 10 – 12 ஆம் நூற்றாண்டுகளில் வந்தடைந்தது. அரசர்களின் குடும்ப வைத்தியராக காலாகாலம் அவர் பணியாற்றியதிலிருந்து இலங்கை மண்ணில் இவ்வைத்தியத்துறை சேர் றாசிக் பரீட் மற்றும் வைத்தியர் கே.பாலசிங்கத்தின் அயராத முயற்சியால் ராஜகிரிய சுதேச மருத்துவக் கல்லூரியில் 1929ஆம் ஆண்டு இணைக்கப்பட்டது.

இந்த வைத்திய முறைகளை கற்பிப்பதற்காக இந்தியாவிலிருந்து விரிவுரையாளர்கள் கொண்டுவரப்பட்டு யுனானி மருத்துவக் கல்வியை பலருக்கும் வழங்கியதுடன், இப்போது கொழும்பு பல்கலைக்கழகத்தின் ஒரு பகுதியாக மிளிர்ந்து நிற்கின்றது.

அங்கு ஆயுர்வேத, யுனானி, சித்த மருத்துவ முறைகள் கற்றுக்கொடுக்கப்பட்டு இன்றும் அதன் சேவைகள் தொடர்ந்துகொண்டே இருக்கின்றன. இலங்கையில் ஆசியாவுக்குரிய எல்லா சுதேச வைத்திய முறைகளும் 1961 act of Ayurveda என்ற சட்டத்தில் ஆயுர்வேத என்ற சொல்லிற்குள்ளே இந்த வைத்திய முறைகள் கொண்டுவரப்பட்டுள்ள விடயம் குறிப்பிடத்தக்கதாகும்.



Masih ul Mulk Hakim Ajmal Khan (1868-1927)
A Founder & First Chancellor (1920-1927)
Jamia Millia Islamia

Humoral theoryயை அடிப்படையாகக் கொண்ட யுனானி மருத்துவம் ஒரு holistic approach யைக் கொண்டுள்ளது. இதன்மூலம் நோய்களிலிருந்து சிகிச்சை பெறவும் நோய் வரும்முன் காக்கவும் பல நுட்பங்களைக் கொண்டுள்ளது. நாடித்துடிப்பின் ஓட்டத்தினை வைத்து உடல் சமநிலைக் குழப்பத்தை அறிந்து அதற்கேற்ப சிகிச்சையளிக்கும் உன்னதமான ஒரு முறையே யுனானி வைத்திய முறையாகும்.

"நல்ல ஆரோக்கியம் மற்றும் நல்வாழ்வுக்கான யுனானி மருத்துவத்தில் உணவு மற்றும் ஊட்டச்சத்து" என இவ்வாண்டு சர்வதேச மாநாட்டின் கருப்பொருளாக எடுக்கப்பட்டு இன்று கொண்டாடப்படுகின்றது. உணவே ஆற்றலின் அடிப்படை ஆதாரம் என்பதை நாம் அனைவரும் அறிவோம். உடலின் இயல்பான வளர்ச்சி மற்றும் அதனுடன் சேர்ந்ததான ஆரோக்கிய பராமரிப்பு சார்ந்துள்ள ஆரோக்கியமான உணவு போன்ற விடயங்கள், உடலின் இயற்கையான பாதுகாப்பு அமைப்பை மேம்படுத்துதல், நோய் எதிர்ப்புச் சக்தி உகந்த ஆரோக்கியத்தை பேணுவதற்கும் நோய்களைத் தடுப்பதற்கும் முக்கியமானதாக இருக்கின்றன.

யுனானி மருத்துவத்தில், ஆரோக்கியத்தைப் பேணுவதற்கும் பல்வேறு நோய்கள் மற்றும் சீர்குலைவுகளைத் தடுப்பதற்கும் ஆரோக்கியமான உணவுப் பழக்க வழக்கங்களுக்கு விரிவான வழிகாட்டுதல்கள் வகுக்கப்பட்டுள்ளன.

யுனானி வைத்திய முறையின் சேவை அனைத்து மக்களையும் சென்றடைந்து ஆரோக்கியமான வாழ்க்கை முறையுடன் வாழவேண்டும் என்பதற்காக இத்தினம் கொண்டாடப்படுகின்றது.




# ஹிஜாப், காவி உடை என எதையும் கல்வி நிலையங்களுக்கு அணிந்து வரக்கூடாது

## கர்நாடகா உயர்நீதிமன்றம் இடைக்கால உத்தரவு



ஹிஜாப் விவகாரத்தில் தொடர்ந்து பதற்றமான ஒரு சூழல் நிலவிவரும் நிலையில், இந்த வழக்கில் கர்நாடக உயர் நீதிமன்றம் முக்கிய உத்தரவைப் பிறப்பித்துள்ளது.

கர்நாடகாவில் முஸ்லிம் மாணவிகள் ஹிஜாப் அணிந்து வர பல்வேறு கல்லூரிகளும் எதிர்ப்புத் தெரிவித்து வருகின்றன.

குறிப்பாக உடுப்பி, மங்களூர், சிக்மங்களூர், சிவமொக்கா போன்ற மாவட்டங்களில் ஹிஜாப் விவகாரம் விஸ்வரூபம் எடுத்து வருகிறது.

கர்நாடகா மாநிலத்திலுள்ள பல பியூ கல்லூரிகளும் ஹிஜாப் அணிந்து வரத் தடை விதிக்கப்படுகிறது. இதை எதிர்த்து இஸ்லாமியப் பெண்கள் போராட்டம் நடத்தி வருகின்றனர். முதலில் போராட்டம் நடத்திய இஸ்லாமியப் பெண்களை சில கல்லூரி நிர்வாகங்கள் உள்ளே அனுமதிக்க மறுத்தன. பின்னர், உள்ளே அனுமதித்தாலும் அவர்களை தனியாக அமரவைத்து, பாடங்களை நடத்தவில்லை எனக் கூறப்படுகிறது. இது கடும் சலசலப்பை ஏற்படுத்தியது.

குறிப்பாக, முஸ்லிம் பெண்கள் ஹிஜாப் அணிந்து வர எதிர்ப்புத் தெரிவித்து, சில மாணவிகள் காவி ஷோல் அணிந்து வந்தனர். மேலும், சில இந்துத்துவ மாணவர்களும் காவி நிறத் துண்டு அணிந்து வந்ததால் பதற்றம் அதிகரித்தது. இந்த ஹிஜாப் விவகாரத்தில் கர்நாடகா மாநிலத்தில் கடந்த சில நாட்களாக நடந்துவரும் விவகாரங்கள், அனைவரும் கடும் அதிர்ச்சியை ஏற்படுத்தும் வகையில் உள்ளது.

இதையடுத்து இது தொடர்பாகக் கர்நாடகா உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டிருந்தது. இந்த வழக்கைக் கர்நாடகா உயர்நீதிமன்றத்தில் தலைமை நீதிபதி தலைமையிலான 3 நீதிபதிகள் அமர்வு முன் விசாரித்து வந்தது. இதற்கிடையே இந்த வழக்கை உச்சநீதிமன்றம் விசாரிக்க வேண்டும் என மனுத் தாக்கல் செய்யப்பட்டது. இருப்பினும், இந்த விவகாரத்தில் முதலில் உயர்நீதிமன்றம் விசாரிக்கட்டும் என உச்சநீதிமன்றம் தெரிவித்துவிட்டது.

இந்நிலையில், இந்த வழக்கில் நேற்று கர்நாடகா உயர்நீதிமன்றத்தில் இடைக்கால உத்தரவைப் பிறப்பித்துள்ளது. அதாவது, ஹிஜாப், காவி உடை என எதையும் கல்வி நிலையங்களுக்கு அணிந்து வரக்கூடாது என்று இடைக்கால உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. மேலும், வழக்கு நீதிமன்றத்தில் இருப்பதால் உத்தரவு பிறப்பிக்கப்படும்வரை சீருடையை மட்டுமே மாணவர்கள் அணிந்து வரவேண்டும் என்றும் கூறப்பட்டுள்ளது.

ஹிஜாப் விவகாரத்தால் தொடர்ந்து பதற்றமான சூழல் ஏற்பட்டுள்ள நிலையில், அங்கு கல்லூரிகள் மூடப்பட்டுள்ளன. இந்தச் சூழலில் பாடசாலைகள், கல்லூரிகளைத் திறக்கவும் கர்நாடகா உயர்நீதிமன்றம் உத்தரவிடப்பட்டுள்ளது.

மேலும், ஹிஜாப்புக்கு அனுமதி கேட்ட வழக்கு விசாரணை திங்கட்கிழமைக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது. ஹிஜாப் விவகாரத்தால் தொடர்ந்து பதற்றமான சூழல் ஏற்பட்டுள்ள நிலையில், அங்கு கல்லூரிகள் மூடப்பட்டிருந்தன. இந்தச் சூழலில் பாடசாலை, கல்லூரிகளைத் திறக்கவும் கர்நாடகா உயர்நீதிமன்றம் உத்தரவிடப்பட்டுள்ளது.

**சர்வதேச பயணிகளுக்கு...**

# 2 டோஸ் தடுப்பூசி போதும் 7 நாட்கள் தனிமை கட்டாயமில்லை

**மத்திய அரசு அறிவிப்பு**



*(திருச்சி எம்.கே.ஷாகுல் ஹமீது)*

இந்தியாவுக்கு வரும் சர்வதேச பயணிகளுக்கான கொரோனா கட்டுப்பாடுகளை தளர்த்தி மத்திய அரசு அறிவித்துள்ளது. 2 டோஸ் தடுப்பூசி செலுத்திக்கொண்ட சர்வதேச பயணிகளுக்கு இனி 7 நாட்கள் தனிமைப்படுத்துதல் இல்லை எனவும் தெரிவித்துள்ளது.

தொற்று குறைவால் விமான நிலையங்களில் வெளிநாட்டுப் பயணிகளுக்கு ஆர்.டி.பி.சி.ஆர். கட்டாயம் இல்லை என தெரிவித்துள்ளது. சர்வதேச விமானப் பயணிகளுக்கான தளர்வு 14ஆம் திகதிமுதல் அமுலுக்கு வருகிறது. கொரோனா தொற்று அதிகம் இருந்ததால் வெளிநாடுகளிலிருந்து இந்தியா வரும் பயணிகள் கட்டாயம் ஆர்.டி.பி.சி.ஆர். பரிசோதனை செய்யவும், 7 நாட்கள் தனிமைப்படுத்திக்கொள்ளவும் மத்திய அரசு அறிவித்திருந்தது. ஓமிக்ரொன் அதிகம் பரவக்கூடிய அபாயமுள்ள நாடுகள் என பட்டியலிடப்பட்ட நாடுகள் குறித்த பட்டியலை நீக்கம் செய்துள்ளது சுகாதாரத்துறை. வெளிநாட்டிலிருந்து வரும் பயணிகள் 14 நாட்கள் சுயமாக தங்கள் உடல்நிலையை கவனித்துக்கொள்ள சுகாதாரத்துறை அறிவுறுத்தியுள்ளது.

கொரோனா பரவல் மற்றும் அதைத் தொடர்ந்து ஏற்பட்டுள்ள ஓமிக்ரொன் பரவல் காரணமாக சர்வதேச விமானப் போக்குவரத்து சேவை நிறுத்திவைக்கப்பட்டுள்ளது. இந்தியாவிற்கு வரும் பயணிகள் அனைவரும் தங்களது அனைத்து விவரங்களையும், கடந்த 14 நாட்களில் சென்றுவந்த நாடுகளின் விவரங்களையும், சுவிதா இணையதளத்தில் பதிவிட வேண்டும் என்றும் தெரிவித்திருந்தது.

பிரிட்டன், தென்னாபிரிக்கா, பிரேஸில், போஸ்ட்வானா, சீனா, மொரீஷியஸ், நியூசிலாந்து, ஜிம்பாப்வே, சிங்கப்பூர், ஹொங்கொங், இஸ்ரேல், தான்சானியா, கானா, கொங்கோ, எத்தியோப்பியா, கஜகஸ்தான், கென்யா, நைஜீரியா, டுனீசியா, ஜாம்பியா ஆகிய நாடுகளிலிருந்து வரும் பயணிகள், இந்தியா வந்ததும் மேற்கொள்ளப்பட்ட கொரோனா பரிசோதனை சான்றுகளை அரசிடம் சமர்ப்பிக்க வேண்டும்.

இதில் நெகட்டிவாக வந்தால் அவர்கள் தங்களை 7 நாட்கள் வீடுகளில் தனிமைப்படுத்திக்கொள்ள வேண்டும் எனவும் அறிவித்திருந்தது. தற்போது இந்தியா வரும் சர்வதேச பயணிகளுக்கான கொரோனா கட்டுப்பாடுகளை மத்திய அரசு தளர்த்தியுள்ளது.

# இலங்கை சிறையிலிருந்து விடுதலை: சென்னை சென்றடைந்தனர் 9 மீனவர்கள்



இலங்கை கடற்படையால் கைது செய்யப்பட்ட தமிழக மீனவர்கள் 9 பேர் நேற்று சென்னையை சென்றடைந்துள்ளனர்.

இராமேஸ்வரம், நாகப்பட்டினம், புதுக்கோட்டை ஆகிய பகுதிகளிலிருந்து மீனவர்கள் கடலுக்கு மீன் பிடிக்கச் செல்வது வழக்கம். கடலுக்கு மீன்பிடிக்கச் செல்லும் மீனவர்கள் எல்லை மீறி மீன் பிடித்ததாகக் கூறி இலங்கை கடற்படையினர் அவர்களை கைதுசெய்து சிறையில் அடைத்துவருகின்றனர். அந்தவகையில் கடந்த 2021ஆம் ஆண்டு டிசம்பர் 18ஆம் திகதி கடலில் மீன்பிடித்துக்கொண்டிருந்த நாகப்பட்டினம், புதுக்கோட்டை இராமேஸ்வரம் பகுதிகளைச் சேர்ந்த மீனவர்கள் இலங்கை கடற்படையினரால் சுற்றிவளைக்கப்பட்டனர்.


எல்லை தாண்டி மீன் பிடித்ததாகக் கூறி இலங்கை கடற்படையினர் அவர்களை கைதுசெய்ததுடன், அடுத்த சில தினங்களில் இராமேஸ்வரம், புதுக்கோட்டை, நாகப்பட்டினம் என அடுத்தடுத்த மாவட்டங்களைச் சேர்ந்த 54 மீனவர்களை கைதுசெய்து, அவர்களின் படகுகள் மற்றும் மீன்பிடி சாதனங்களையும் பறிமுதல் செய்தனர். இதைத் தொடர்ந்து அவர்கள் இலங்கை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டனர். இந்த விவகாரம் குறித்து உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டும் என தமிழக முதலமைச்சர் ஸ்டாலின் வெளியுறவுத்துறை அமைச்சர் ஜெய்சங்கருக்கு கடிதம் எழுதினார்.

இதைத் தொடர்ந்து கடந்த ஜனவரி 2ஆம் திகதி மீனவர்கள் 54 பேரை இலங்கை நீதிமன்றம் விடுதலை செய்து உத்தரவிட்டதால், இலங்கையிலுள்ள இந்திய தூதரக அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டனர். அவர்களுக்கு மருத்துவப் பரிசோதனை செய்யப்பட்டு தமிழகம் அனுப்ப இலங்கையிலுள்ள இந்தியத் தூதரகம் நடவடிக்கை எடுத்தது. இதில் தமிழக மீனவர்கள் பலருக்கு கொரோனா பாதிப்பு ஏற்பட்டிருந்தது தெரியவந்தது.

இதனால் பாதிக்கப்பட்டவர்களுக்கு சிகிச்சையும், அவர்களுடன் இருந்தவர்களை தனிமைப்படுத்தும் நடவடிக்கையில் இந்தியத் தூதரக அதிகாரிகள் ஈடுபட்டனர். இருப்பினும் கொரோனாவால் பாதிக்கப்படாத மீனவர்களை தமிழகம் அனுப்பிவைக்க தமிழக அரசு கோரிக்கை விடுத்த நிலையில், இராமேஸ்வரம் மீனவர்கள் மரியஸ்மைல்சன், சங்கர், சக்திவேல், மலையன், எட்வர்ட் ஹென்றி, ஜெயகணேஷ் ஆகிய 6 பேரும், புதுக்கோட்டை மீனவர்கள் சந்தோஷ், பிரதீப், வீரபாண்டி ஆகிய 3 பேரும் என 9 மீனவர்களை விமானம் மூலம் தமிழகத்துக்கு அனுப்ப இந்தியத் தூதரக அதிகாரிகள் முடிவு செய்தனர்.

இந்நிலையில், இலங்கையிலிருந்து சென்னைக்குச் சென்று வந்த பாரத் மிஷன் எயார் இந்தியா விமானத்தில் நேற்று 9 மீனவர்கள் சென்னையை சென்றடைந்தனர். மீனவர்களுக்கு கடவுச்சீட்டு இல்லாத காரணத்தினால் இந்தியத் தூதரகம் எமர்ஜென்சி செர்டிபிகேட் வழங்கி, அவர்களை தமிழகத்திற்கு அனுப்பி வைத்துள்ளது. சென்னையை அடைந்த மீனவர்களை இராமேஸ்வரத்திலிருந்து வந்த மீன்வளத்துறை அதிகாரிகள் வரவேற்று, தனி வேனில் அவர்களின் சொந்த ஊருக்கு அழைத்துச் சென்றனர். அத்துடன், இந்தியத் தூதரக பராமரிப்பில் இருக்கும் 45 மீனவர்கள் கொரோனா தொற்று பாதிப்பு முழுமையாக குணமடைந்த பிறகு தமிழகம் அழைத்து வருவார்கள் என்று தெரிகிறது.

# பாடல்கள் எழுதி கிடைக்கும் ஊதியத்தை நா.முத்துக்குமார் குடும்பத்துக்கு அளிக்கும் எஸ்கே



தமிழ் சினிமாவின் முன்னணி பாடலாசிரியராக விளங்கியவர் நா.முத்துகுமார். பத்து ஆண்டுகளுக்கும் மேலாக தமிழ் சினிமாவில் அதிக பாடல்களை எழுதியவர் என்ற சாதனையைப் பெற்றவர்.

பாடலாசிரியராக உச்சத்தில் இருந்தபோதே உடல்நலக் குறைவு காரணமாக மரணமடைந்தார். அவரது மறைவு ரசிகர்களிடையே பெரும் சோகத்தை ஏற்படுத்தியது. அவரது வரிகளை ரசிகர்கள் தங்கள் சமூக வலைதளங்களில் அதிகம் பகிர்ந்து அவரைக் கொண்டாடி வருகின்றனர்.

இந்நிலையில், நடிகர் சிவகார்த்திகேயன் தான் எழுதும் பாடல்களுக்கான ஊதியத்தை நா.முத்துகுமாரின் குடும்பத்துக்கு வழங்கிவருவதாக தகவல் வெளியாகியுள்ளது. சிவகார்த்திகேயனின் 'கேடி பில்லா கில்லாடி ரங்கா' படத்தில் ''தெய்வங்கள் எல்லாம் தோற்றே போகும்...'' பாடலை நா.முத்துகுமார் எழுதியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

'கோலமாவு கோகிலா' படத்தில் ''கல்யாண வயசு..'' பாடலை முதன்முதலாக சிவகார்த்திகேயன் எழுதினார். பின்னர் டாக்டர் படத்தின் அனைத்து பாடல்களையும் சிவகார்த்திகேயன் எழுதினார். தற்போது சூர்யாவின் எதற்கும் துணிந்தவன், நடிகர் விஜய்யின் பீஸ்ட் ஆகிய படங்களில் சிவகார்த்திகேயன் பாடல் எழுதியுள்ளார்.

# லதா மங்கேஷ்கரின் சொத்துகள் யாருக்கு?

இந்தியத் திரையுலகின் குரலாக கடந்த 75 வருடங்களுக்கும் மேலாக ஒலித்துவந்த பின்னணிப் பாடகி லதா மங்கேஷ்கர் கடந்த ஞாயிற்றுக்கிழமை காலமானார். திருமணமே செய்துகொள்ளாமல் வாழ்ந்து மறைந்தவர் லதா.

இத்தனை வருடங்களாக அவர் சம்பாதித்து சேர்த்த சொத்துகளின் மதிப்பு 200 கோடி ரூபாவுக்கும் மேல் இருக்கும் என்கிறார்கள். அவர் சொந்தமாக வாங்கிய வீடுகள், நிலங்கள், வாடகைக்கு விடப்பட்டுள்ள இடங்கள், சேர்த்துவைத்துள்ள தங்கம் என அதில் அடங்குமாம். மேலும், அவர் பாடிய பாடல்களுக்காக ஒரு வருடத்திற்கும் சுமார் 5 கோடிக்கும் அதிகமாக அவருக்கு ரொயல்டி தொகை வருகிறதாம்.

குடும்பத்தில் மூத்தவராக இருந்த லதா மங்கேஷ்கருக்கு ஆஷா போஸ்லே, மீனா கட்கர், உஷா மங்கேஷ்கர் என மூன்று தங்கைகளும், ஹிருதயநாத் மங்கேஷ்கர் என்ற தம்பியும் உள்ளார். லதாவுடன் பிறந்த இவர்களும் நன்றாகவே செட்டிலானவர்கள்தான். லதாவின் சொத்துகள் அனைத்தும் இவர்களுக்குத்தான் மாற்றப்படும் என்றும் ஒரு தகவல் இருக்கிறதாம். அதேசமயம், லதா அவருடைய தந்தையார் பெயரில் அறக்கட்டளையொன்றை உருவாக்கி அந்தப் பெயரில் தன்னுடைய சொத்துகளை எழுதிவைத்துள்ளதாகவும் ஒரு தகவல் வெளியாகியுள்ளதாம்.

இருப்பினும், இன்னும் சில நாட்களில் லதா மங்கேஷ்கரின் வழக்கறிஞர், சொத்துகள் பற்றிய அறிவிப்பை வெளியிடுவார் என்றும் பொலிவுட் வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை, லதா மங்கேஷ்கரின் அஸ்தியை வியாழக்கிழமை காலை நாசிக்கில் அமைந்துள்ள கோதாவரி ஆற்றங்கரையில் அமைந்திருக்கும் புனித ராமகுண்டத்தில் கரைத்தனர்.

புனித ராமகுண்டத்தில் நேற்று நடைபெற்ற மிகச் சிறிய சடங்கில், லதா மங்கேஷ்கரின் உறவினர் ஆதிநாத் மங்கேஷ்கர், சகோதரி ஆஷா போஸ்லே உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். முன்னதாக, அவரது உறவினர்கள், பூசாரிகள் கலந்துகொண்ட ஒரு சிறிய பிரார்த்தனைக் கூட்டம் நடத்தப்பட்டது.

மகாராஷ்டிரா மாநிலம் நாசிக்கில் அமைந் திருக்கும் புனித தீர்த்தங்களில் ராம குண்டம் மிக முக்கியத்துவம் வாய்ந்ததாகவும். 300 ஆண்டுகள் பழைமையான இந்தக் குளம், 1696ஆம் ஆண்டு சித்தாராவ் கடர்கர் என்பவரால் கட்டப்பட்டதாகக் கூறப்படுகிறது. புராணங்களின்படி, இராமபிரான், 14 ஆண்டுகள் வனவாசத்தின்போது, தினமும் இந்தக் குளத்தில் வந்துதான் நீராடியதாக ஐதீகம்.

# உலக செய்திகள்

## தொடரும் போர் பதற்றம்

# உக்ரைனுக்கு 80 தொன் ஆயுதங்கள் அனுப்பிவைத்த அமெரிக்கா



ரஷ்யா - உக்ரைன் போர் பதற்றம் தொடரும் நிலையில் விமானங்கள் வழியே 80 தொன் ஆயுதங்களை உக்ரைனுக்கு அமெரிக்கா அனுப்பிவைத்துள்ளது.

இதுகுறித்து உக்ரைன் பாதுகாப்பு அமைச்சர் ஒலெக்சீ ரெஜ்னிகோவ் தெரிவிக்கையில்,

அமெரிக்காவிலிருந்து மொத்தம் 10 விமானங்கள் உக்ரைனை வந்தடைந்துள்ளன. ஒரே நாளில் 2 விமானங்கள் வந்துள்ளன. இந்த 2 விமானங்களில் உக்ரைனுக்கு மொத்தம் 80 தொன் ஆயுதங்கள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன - என்றார்.

ஒட்டுமொத்தளவில் உக்ரைனுக்கு 45 விமானங்கள் வரை ஆயுதங்களை அனுப்பிவைக்க அமெரிக்கா திட்டமிட்டுள்ளது. இதனால் ரஷ்யா - உக்ரைன் இடையேயான எல்லை விவகாரம் தீவிரமடைந்து மற்ற நாடுகளையும் கவலைகொள்ள வைத்துள்ளது.

**ரஷ்யா விரைந்த பிரிட்டன் வெளியுறவுச் செயலர்**

உக்ரைன் எல்லையில் ரஷ்யப் படை குவிப்பு காரணமாக எழுந்துள்ள பதற்றத்தைத் தணிக்கும் முயற்சியாக பிரிட்டன் வெளியுறவுச் செயலாளர் லிஸ் டிரஸ் ரஷ்யாவுக்கு விரைந்துள்ளார்.

ரஷ்ய விடயம் குறித்து லிஸ் டிரஸ் தெரிவிக்கையில்,

உக்ரைனை ரஷ்யா ஆக்கிரமித்தால், அது சம்பந்தப்பட்ட அனைத்து நாடுகளிலும் கடுமையான பின்விளைவுகளை ஏற்படுத்தும்.அத்தகைய சூழலைத் தவிர்க்க ரஷ்யாவுக்கு வாய்ப்புள்ளது. அந்த நாடு பேச்சுமூலம் சுமுகத் தீர்வு காண்பதற்கான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும் - என்றார்.

சோவியத் ஒன்றியம் கடந்த 1991ஆம் ஆண்டில் சிதறியபோது, அதில் அங்கமாக இருந்த உக்ரைன் சுதந்திர நாடாக அறிவித்துக்கொண்டது. தனது எல்லையையொட்டி அமைந்துள்ள அந்த நாடு, சோவியத் ஒன்றியத்துக்கு எதிராக உருவாக்கப்பட்ட நேட்டோ அமைப்பில் இணைந்தால் அது தங்களது பாதுகாப்புக்கு அது மிகப்பெரிய அச்சுறுத்தலை ஏற்படுத்தும் என்று ரஷ்யா கருதுகிறது.

உக்ரைனை தங்களது அமைப்பில் இணைக்க மாட்டோம் என்று நேட்டோ உறுதிமொழி அளிக்க நேட்டோவுக்கு அழுத்தம் கொடுக்கும் வகையில், உக்ரைன் எல்லையருகே சுமார் ஒரு இலட்சம் படையினரை ரஷ்யா குவித்துள்ளது. இதனால் அந்த நாடு உக்ரைனை ஆக்கிரமிக்கும் என்ற அச்சம் எழுந்துள்ளதால் ரஷ்யாவுக்கும், அமெரிக்கா உள்ளிட்ட நேட்டோ உறுப்புநாடுகளுக்கும் இடையே பதற்றம் நிலவி வருகிறது.

இந்நிலையில், நேட்டோ - மேற்கத்தேய கூட்டணி இணைந்து அட்ரியாட்டிக் கடல் பகுதியில் இராணுவ பயிற்சிகளை மேற்கொண்டு வருகின்றன. அதேநேரத்தில் துருக்கியின் தென்பகுதியில் பயிற்சிகளை மேற்கொள்ள ரஷ்யாவின் போர்க்கப்பல்கள் போஸ்போரஸ் நீர்வழித்தடத்திற்கு இரவுவேளைகளில் செல்கின்றன.


மேலும், உக்ரைன் மீது முழுமையாக படையெடுப்பதற்குத் தேவையான இராணுவத்தில் 70 சதவீதம் அளவுக்கு ரஷ்யா திரட்டியுள்ளதாக அமெரிக்க அதிகாரிகள் தெரிவிக்கின்றனர். ஆனால், உக்ரைன் மீது படையெடுக்கும் எண்ணம் இல்லை என ரஷ்யா தொடர்ந்தும் கூறிவருகிறது. ஆனால், ரஷ்யாவின் கூற்றை நம்ப நாங்கள் தயாரில்லை என அமெரிக்க அரசு தெரிவித்துள்ளது.

இது குறித்து வெள்ளை மாளிகை செய்தித் தொடர்பாளர் ஜென் சாகி தெரிவிக்கையில்,

ரஷ்யாவின் அடுத்தகட்ட நடவடிக்கைகளை எங்களால் கட்டுப்படுத்த முடியாது. ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புட்டின் என்ன செய்வார் என்ற முன்னறிவிப்பு எதுவும் எங்களிடம் இல்லை. ரஷ்யாவின் கூற்றை நம்ப நாங்கள் தயாராக இல்லை. உக்ரைன் மீது ரஷ்யா படையெடுத்தால் மிகப்பெரிய பின்விளைவுகள் ஏற்படும் - என்றார்.

ஒருபுறம் அண்டைநாடான உக்ரைன் மீது படையெடுக்கவில்லை என பல முறை ரஷ்யா மறுப்பு தெரிவித்து வந்தபோதிலும், எல்லை பகுதியில் படைகளை குவித்துவருவது இருதரப்பிலும் பதற்றநிலையை ஏற்படுத்தியுள்ளது.

# உயிரிழந்த நட்சத்திரம்: படம் பிடித்த நாசா



விண்வெளியில் இறந்த நட்சத்திரத்தின் கடைசித் தருணங்களை நாசா விஞ்ஞானிகள் முதன்முறையாக படம் பிடித்துள்ளனர்.

பூமியிலிருந்து 44 ஒளி ஆண்டுகள் தொலைவிலுள்ள G29-38 என்று அழைக்கப்படும் நட்சத்திரத்தை நாசா விஞ்ஞானிகள் சந்திரா ஆய்வகம் மூலம் ஆய்வுசெய்து வந்தனர்.

அப்போது அந்த நட்சத்திரத்தின் மையப் பகுதியில் மற்ற விண்கற்கள் மோதியதைக் கண்டுபிடித்தனர். மோதிய வேகத்தில் G29-38 நட்சத்திரத்தில் 18 இலட்சம் டிகிரி பரன்ஹீட் வரை வெப்பம் உண்டானதால் அந்த நட்சத்திரம் இறந்துபோனதையும் ஆய்வாளர்கள் உறுதிசெய்துள்ளனர்.

# கொலம்பியாவில் சினிமா பாணியில் 4 தொன் கொக்கெய்ன் பறிமுதல்



கொலம்பியாவில் சினிமா பாணியில் நடுக்கடலில் நீர்மூழ்கிக் கப்பலை துரத்திச்சென்று அதிலிருந்து 4 தொன் மதிப்புள்ள கொக்கெய்ன் போதைப்பொருளை கடற்படையினர் கைப்பற்றியுள்ளனர்.

தெற்கு பசுபிக் கடலில் நீர்மூழ்கிக் கப்பலொன்று போதைப்பொருளை ஏற்றிக்கொண்டு மத்திய அமெரிக்க பகுதிக்கு சென்றுகொண்டிருப்பதாக கொலம்பிய கடற்படைக்கு தகவல் கிடைத்தது.

இதனையடுத்து கொலம்பிய கடற்படையினர் அந்த நீர்மூழ்கிக் கப்பலை சினிமாவில் வருவதுபோல் துரத்திச்சென்று பிடித்தனர். பின்னர் அந்த கப்பலை சோதனை செய்ததில் 200 கோணிப்பைகளில் செவ்வக வடிவில் கொக்கெய்ன் பொட்டலங்கள் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது. அவற்றின் மதிப்பு 150 மில்லியன் டொலர் என்பது குறிப்பிடத்தக்கது.

# ஆண்குழந்தை பிறக்க கர்ப்பிணியின் தலையில் ஆணியை அடித்த ஹீலர்



ஆண்குழந்தை பிறக்க பாகிஸ்தான் கர்ப்பிணியின் தலையில் ஆணியை அடித்த வைத்தியரை பொலிஸார் தேடி வருகின்றனர்.

பாகிஸ்தானின் பெஷாவர் நகரின் வடமேற்கு பகுதியிலுள்ள மருத்துவமனைக்கு கடந்த சில நாட்களுக்கு முன்னர் பெண் ஒருவர் வந்துள்ளார். அவர் தனது தலையிலிருந்த ஆணியை அப்புறப்படுத்த வேண்டும் என்று கோரினார். அதிர்ச்சியடைந்த மருத்துவர்கள் தலையில் ஆணி எப்படி வந்தது எனக் கேள்வி எழுப்பியுள்ளனர்.

அவர், "நான் கர்ப்பமாக இருக்கிறேன். இந்தப் பிரசவத்தில் ஆண் குழந்தை பிறக்க சடங்குகளைச் செய்யுமாறு உள்ளூர் ஹீலரை கேட்டுக்கொண்டேன். அவரோ, எனது தலையில் 5 சென்றிமீற்றர் அளவிலான ஆணிகள் ஐந்தை அடித்து அனுப்பினார். ஆனால், எனக்கு அதனால் கடுமையான வலி ஏற்பட்டுள்ளது. எனவே அதை அகற்றவேண்டும்" என்றார்.

"அந்த ஆணிகள் மூளையில் தொடவில்லை. ஆணி அறையப்பட்டதால் மிகுந்த வலியிலிருந்த பெண் முதலில் தானே ஆணியை அறைந்துகொண்டதாகக் கூறினார். பின்னர்தான் அவரின் தலையில் ஆணியை அந்த ஹீலர் அறைந்தது தெரியவந்தது" என்று மருத்துவர்கள் தெரிவித்துள்ளர்.

ஏற்கனவே தனக்கு மூன்று பெண்குழந்தைகள் உள்ள நிலையில் தான் மீண்டும் கர்ப்பமானதாகவும் நான்காவதாக ஆண்குழந்தை பிறக்கவேண்டும் என தனது கணவர் ஆசைப்படுவதாகவும் தெரிவித்துள்ளார்.

நகரின் பல்வேறு இடங்களில் சாமியார்களையும் மதகுருக்களையும் சந்தித்த தனது கணவர் இறுதியாக ஹீலர் ஒருவரை சந்தித்துள்ளார்.

தனது மத நம்பிக்கைப்படி கர்ப்பமாக இருக்கும் பெண்ணின் தலையில் ஆணி அடித்தால் நான்காவதாக கண்டிப்பாக ஆண் குழந்தை பிறக்கும் என அந்த ஹீலர் தெரிவித்துள்ளார்.

மருத்துவர்கள் அந்தப் பெண்ணின் தலையிலிருந்து ஆணியை அப்புறப்படுத்தி அனுப்பினர். இது குறித்து பொலிஸுக்கு தகவல் கொடுக்கப்பட்டது.

இதனையடுத்து மருத்துவமனை சிசிடிவி கெமரா காட்சிகளைக் கொண்டு அந்தப் பெண்ணை பொலிஸார் தேடி வருகின்றனர். அவரை விசாரித்து அந்த வைத்தியரை கைதுசெய்யப்போவதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## கனடா லொறி ஓட்டுநர்களின்...

# போராட்டம் நிறுத்தப்பட வேண்டும்: பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ ஆவேசம்

**பொருளாதார பாதிப்பு ஏற்படும் - அமெரிக்கா எச்சரிக்கை**



கனடாவில் கட்டாய கொரோனா தடுப்பூசிக்கு எதிராக லொறி ஓட்டுநர்கள் நடத்தும் போராட்டம் நிறுத்தப்பட வேண்டும் என்று அந்நாட்டு பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ கேட்டுக்கொண்டுள்ளார்.

இதேவேளை, கனடாவில் லொறி ஓட்டுநர்களின் போராட்டத்தினால் பொருளாதார பாதிப்பு ஏற்படும் என அமெரிக்கா எச்சரித்துள்ளது.

**வீதி மறியல்**

கனடாவில் லொறி ஓட்டுநர்களுக்குத் தடுப்பூசி கட்டாயமாக்கப்பட்டதைக் கண்டித்து, கனரக லொறிகளை வீதிகளின் குறுக்கே நிறுத்தி அவர்கள் மறியலில் ஈடுபட்டுள்ளதால், கனடாவை அமெரிக்கா உடன் இணைக்கும் முக்கிய வீதி மூடப்பட்டுள்ளது.

கனடாவிலிருந்து 75 சதவீத ஏற்றுமதிகள் அமெரிக்காவுக்கு அனுப்பப்படும் நிலையில், 10 நாட்களுக்கு மேலாகத் தொடரும் இந்த வீதி மறியலால், இரு நாடுகளுக்கும் இடையே தினமும் 8,000 லொறிகள் சென்றுவரும் அம்பாசடர் பாலத்தில் போக்குவரத்து ஸ்தம்பித்துள்ளது.

இதனால் கனடாவின் பொருளாதாரம் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது. நூற்றுக்கும் மேற்பட்ட லொறிகளில் ஓட்டுநர்களின் குழந்தைகளும் உள்ளதால், அவர்களின் உடல் நலன்கருதி பொலிஸார் லொறிகளை வேகமாக அப்புறப்படுத்தி வருகின்றனர்.

இந்நிலையில், கனடா நாடாளுமன்றத்தில் ஜஸ்டின் ட்ரூடோ உரையாற்றுகையில்,

"கொரோனா பெருந்தொற்றால் அனைவரும் சோர்வடைந்துள்ளனர். குறிப்பாக, சுகாதாரப் பணியாளர்கள். நாம் அவர்களுக்கு உறுதுணையாக இருக்க கடமைப்பட்டுள்ளோம்.

கொரோனா தடுப்பூசிக்கு எதிரான லொறி ஓட்டுநர்களின் போராட்டம் நமது நாட்டின் பொருளாதாரத்தை பாதிக்கிறது, கனடாவாழ் மக்களின் அன்றாட வேலையை பாதிக்கிறது, நமது ஜனநாயகத்தை பாதிக்கிறது. இத்தகைய சூழலில், லொறி ஓட்டுநர்கள் தங்களது போராட்டத்தை நிறுத்த வேண்டும்" என்று ஆவேசமாக பேசினார்.

கனடா தலைநகர் ஒட்டாவாவில் சில ஓட்டுநர்களின் போராட்டத்தைக் கட்டுப்படுத்த சில தினங்களுக்கு அவசரநிலை பிரகடனப்படுத்தப்பட்டது. இந்நிலையில், நாடாளுமன்றத்தில் ஜஸ்டின் ட்ரூடோ இவ்வாறு பேசியிருக்கிறார். மேலும், தலைநகர் ஒட்டாவாவில் கூடுதல் பொலிஸாரை அனுப்ப பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ அனுமதி வழங்கியுள்ளார்.

இஸ்லாமிய வெறுப்பு, யூத-விரோத மற்றும் பிற வெறுக்கத்தக்க கருத்துகளை ஆதரிக்கும் தீவிர வலதுசாரி நபர்களால் கனடாவில் இந்த எதிர்ப்புப் போராட்டங்கள் ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதாக அரசியல் நிபுணர்கள் கருத்து தெரிவிக்கின்றனர்.

## அதிவேக இணைய சேவைக்காக நிலைநிறுத்தப்பட்ட...

# 40 செயற்கைக்கோள்கள் மின் காந்தப் புயலால் சேதம்




விண்வெளியில் ஏற்பட்ட மின் காந்தப் புயல் காரணமாக எலான் மஸ்கின் ஸ்டார் லிங்க் நிறுவனம் அதிவேக இணைய சேவைக்காக விண்ணில் நிலைநிறுத்திய 40 செயற்கைக்கோள்கள் சேதமடைந்துள்ளன.

சூரியனின் மேற்பரப்பிலிருந்து கரோனல் மாஸ் எஜெக்ஷன் என்ற ஒரு மாபெரும் உமிழ்வு வெளியேறி, பூமியின் வளிமண்டலத்துக்கு மிக அருகே புவி காந்த புயலாக உருவெடுத்தது. இந்நிலையில், கடந்த 3ஆம் திகதி பூமிக்கு மிக அருகிலுள்ள புவி வட்ட பாதையில் நிலைநிறுத்தப்பட்ட 49 ஸ்டார் லிங்க் செயற்கோள்களில் 40 செயற்கைக்கோள்கள் புவி காந்த புயலால் ஏற்பட்ட மிகையான இழுவையால் பாதிக்கப்பட்டு சேதமடைந்தன.

இருப்பினும், இந்த செயற்கோள்கள் பூமியின் வளிமண்டலத்துக்குள் மீண்டும் நுழையும் எனவும், இவை மற்ற செயற்கைக்கோள்களுடன் மோத வாய்ப்பில்லை எனவும், சேதமடைந்த செயற்கைக்கோள்களின் பாகங்கள் பூமியில் வீழ்ந்து மக்களுக்கு பாதிப்பு ஏற்படும் வாய்ப்பும் இல்லை எனவும் ஸ்டார் லிங்க் நிறுவனம் தெரிவித்துள்ளது.

# மடகஸ்கரைத் தாக்கிய 'பட்சிராய்' சூறாவளியால் 92 பேர் உயிரிழப்பு



மடகஸ்கர் தீவை தாக்கிய பட்சிராய் (Batsirai) சூறாவளியால், உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 92 ஆக உயர்ந்துள்ளது.

இரண்டு வாரங்களுக்கு முன் ஏற்பட்ட அனா (Ana) சூறாவளியால் 55 பேர் உயிரிழந்து, ஒரு இலட்சத்து 30,000 பேர் வீடுகளை விட்டு வெளியேறிய நிலையில், தற்போது தாக்கிய பட்சிராய் (Batsirai) சூறாவளியால் 91,000 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

வெள்ளத்தில் மூழ்கியும், இடிபாடுகளில் சிக்கியும் இதுவரை 92 பேர் உயிரிழந்துள்ளனர். அதிகம் பாதிக்கப்பட்ட இகோங்கோ (Ikongo) மாநிலத்தில் மட்டும் 60 பேர் உயிரிழந்தனர்.

# உலக சம்பியனை வீழ்த்துமா இலங்கை?

## ஆஸி. அணியுடனான 20 சர்வதேச தொடர் இன்று ஆரம்பம்



ஏ.அகீல் சிஹாப்

தசுன் சானக்க தலைமையிலான இலங்கை கிரிக்கெட் அணியானது ஆரோன் பிஞ்ச் தலைமையிலான அவுஸ்திரேலிய அணியுடன் 5 போட்டிகள் கொண்ட இருபதுக்கு 20 சர்வதேச தொடரில் விளையாடுவதற்காக அவுஸ்திரேலியாவுக்கு இருதரப்பு கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ளது. அந்தவகையில் இரு அணிகளுக்கும் இடையிலான முதலாவது இருபதுக்கு 20 சர்வதேச கிரிக்கெட் போட்டி இன்று இலங்கை நேரப்படி பிற்பகல் 1.30 மணிக்கு சிட்னி கிரிக்கெட் மைதானத்தில் ஆரம்பமாகிறது.

### நேருக்கு நேர்


இதுவரையில் இரு அணிகளுக்கும் இடையில் நடைபெற்ற இருபதுக்கு 20 சர்வதேச போட்டிகள் தொடர்பில் அவதானம் செலுத்துகின்றபோது, மொத்தமாக 17 போட்டிகள் நடைபெற்றுள்ளன. கடந்த 2007ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 20ஆம் திகதி இலங்கை - அவுஸ்திரேலிய அணிகளுக்கிடையில் முதல் முறையாக இருபதுக்கு 20 சர்வதேச போட்டி நடைபெற்றது. அந்தப் போட்டியில் அவுஸ்திரேலிய அணி 10 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் இலகு வெற்றிபெற்றது.

அன்றிலிருந்து இன்றுவரையில் நடைபெற்ற 17 போட்டிகளில் அவுஸ்திரேலிய அணி 9 போட்டிகளில் வெற்றிபெற்றிருக்கும் அதேவேளை, இலங்கை அணி 8 போட்டிகளில் வெற்றிபெற்றிருக்கிறது. இலங்கை அணி கடந்த 2017ஆம் ஆண்டு அவுஸ்திரேலிய அணியுடன் பெற்ற இருபதுக்கு 20 வெற்றியின் பின்னர் தொடர்ச்சியாக 5 போட்டிகளில் தோல்வியைத் தழுவியிருக்கிறது.

எனவே, இன்று ஆரம்பமாகின்ற போட்டியானது இலங்கை அணிக்கு மிக முக்கியமான ஒரு போட்டியாக இருக்கிறது. காரணம், இலங்கை அணி தொடர்ச்சியாக 5 போட்டிகளில் தோல்வியைத் தழுவி கடந்த 5 ஆண்டுகளாக அவுஸ்திரேலியா அணியுடன் இருபதுக்கு 20 வெற்றியைப் பெறவில்லை. எனவே, 5 வருட தோல்விக்கு முற்றுப்புள்ளி வைக்குமா என்பதை பொறுத்திருந்து பார்க்கலாம்.



Win Percentage




கடந்த ஒக்டோபர் மாதம் ஐக்கிய அரபு இராச்சியத்தில் நடைபெற்ற ஐ.சி.சி. இருபதுக்கு 20 உலகக்கிண்ணத் தொடரில் அவுஸ்திரேலிய அணியை குழுநிலைப் போட்டியில் எதிர்கொண்ட இலங்கை அணி 7 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் தோல்வியை சந்தித்தது. குறித்த உலகக்கிண்ணத் தொடரில் அவுஸ்திரேலிய அணி இறுதிப்போட்டியில் நியூசிலாந்தை வீழ்த்தி சம்பியன் பட்டம் வென்றிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.




### T20 தொடர்களில் ஆதிக்கம் செலுத்தும் இலங்கை

இலங்கை - அவுஸ்திரேலிய அணிகளுக்கிடையில் இதுவரையில் 6 இருதரப்பு இருபதுக்கு 20 சர்வதேச தொடர்கள் நடைபெற்றுள்ளன. இதில் இலங்கை அணி 4 தொடர்களை கைப்பற்றியிருக்கும் அதேவேளை, அவுஸ்திரேலிய அணி 2 தொடர்களை கைப்பற்றியிருக்கிறது. இருதரப்பு தொடர்களின் அடிப்படையில் பார்க்கின்றபோது இலங்கை அணிதான் ஆதிக்கம் செலுத்துகிறது.

### இந்தாண்டில் முதல் போட்டி

இலங்கை அணி கடந்த ஒக்டோபரில் ஐ.சி.சி. இருபதுக்கு 20 சர்வதேச தொடரில் விளையாடியதன் பின்னர் தற்போது முதல் முறையாக இருபதுக்கு 20 சர்வதேச போட்டியில் களமிறங்குகிறது. அத்துடன், இந்தாண்டில் முதல் இருபதுக்கு 20 சர்வதேச போட்டியாகவும் இது அமைகிறது. இதனால் இந்தத் தொடர் எதிர்பார்ப்புமிக்க ஒரு தொடராகவும் அமைந்திருக்கிறது.



# சட்டச் சிக்கலால் தாமதமாகும் பதக்க விழா

(அக்ஷரா)

2022 பீஜிங் குளிர்கால ஒலிம்பிக் போட்டிகளில் டீம் ஃபிகர் ஸ்கேட்டிங் போட்டிக்கான பதக்க விழா தாமதமாவதற்கு ரஷ்யாவின் 15 வயதான கமிலா வலீவாவின் ஊக்கமருந்து எதிர்ப்பு சோதனை சம்பந்தப்பட்ட ஒரு சட்டச்சிக்கலே காரணம்.

சர்வதேச ஸ்கேட்டிங் யூனியன், சட்டச்சிக்கலால் தாமதம் ஏற்பட்டதாக ஒப்புக்கொண்டது. பீஜிங் 2022இற்கு முன் வலீவாவால் எடுக்கப்பட்ட போதைப்பொருள் சோதனையை உள்ளடக்கியதாக விளையாட்டுகள் இப்போது உறுதிப்படுத்தியுள்ளன. கடந்த திங்கட்கிழமை நடைபெற்ற குழு நிகழ்வில் ரஷ்ய ஒலிம்பிக் கமிட்டி வெற்றிபெற்றது. வலீவா, அணியின் வெற்றிக்கு முக்கிய பங்கு வகித்தார்.

ஷார்ட் புரோகிராம் மற்றும் ஸ்கேட்டிங் ஆகிய இரண்டிலும் பெண்கள் ஒற்றையர் நிலைகளுக்கு அவர் தலைமை தாங்கினார். வலீவா நான்கு மடங்கு தாண்டுதலை இரண்டு முறை நிகழ்த்தினார். குளிர்கால ஒலிம்பிக் போட்டிகளில் இதுவரை யாரும் செய்யமுடியாத சாதனையாக இது இருந்தது. ஊக்கமருந்து இதற்கு காரணமாக இருக்கலாம் என்ற சந்தேகம் எழுந்துள்ளது.

வலீவாவின் பிரச்சினையின் சரியான தன்மை தெளிவாக இல்லை. இருப்பினும், சம்பந்தப்பட்ட மருந்து செயல்திறனை மேம்படுத்தவில்லை என்று பரவலான கூற்றுகள் உள்ளன. அதாவது, “ஊக்கமருந்து எதிர்ப்பு விதி மீறப்பட்ட நேரத்தில், 16 வயதை எட்டாத ஒரு விளையாட்டு வீரராக'' வலீவா ஊக்கமருந்து எதிர்ப்பு மீறலில் குற்றவாளியாக இருந்தால் அதிகாரபூர்வமாக அடையாளம் காணமுடியாது. இந்த சிக்கலால் தற்போது பல சட்டக் குழுக்கள் ஈடுபட்டுள்ளன என்பதை இன்சைட்தே கேம்ஸ் புரிந்துகொள்கிறது.

வலீவா அனுமதிக்கப்பட்டால், அவர் 16 வயதுக்கு மேற்பட்டவராக இருந்திருந்தால் தண்டனைகள் மிகக் குறைவாக இருக்கும், மேலும் அவரது சகாக்கள் ஆற்றிய பங்கு நெருக்கமான ஆய்வுக்குட்படுத்தப்படும். அது அரசு வழங்கும் ஊக்கமருந்து திட்டத்திற்கு தண்டனையாக இந்த ஒலிம்பிக்கில் தனது சொந்த பெயரிலும் கொடியிலும் போட்டியிட தடை விதிக்கப்பட்ட ஒரு நாட்டிற்கு மற்றொரு அவமானமாக இருக்கும்.

விளையாட்டு செய்திகள்

thamilansports@gmail.com

# வடக்கு – கிழக்கு மோதல் கோல்களின்றி சமநிலையில் நிறைவு

இலங்கை உதைபந்து சம்மேளனத்தின் ஏற்பாட்டில் நடைபெற்று வருகின்ற மாகாண அணிகளுக்கிடையிலான சுதந்திர கிண்ண உதைபந்தாட்ட லீக் தொடரின் எதிர்பார்ப்புமிக்க வடக்கு – கிழக்கு மாகாண அணிகளுக்கிடையிலான போட்டி கோல்கள் எதுவுமின்றி சமநிலையில் நிறைவுக்கு வந்தது.

நாவலப்பிட்டியில் நேற்று மாலை ஆரம்பமான குறித்த போட்டியின் ஆரம்பத்திலிருந்து இரு அணிகளும் சமபலத்துடன் மோதியதால் போட்டியின் முதல் பாதி கோல்கள் எதுவுமின்றி நிறைவுக்கு வந்தன. பரபரப்புகளுக்கு மத்தியில் ஆரம்பமான இரண்டாவது பாதிலும் இரு அணிகளும் கோல்களை பெறாததால் இறுதியில் போட்டி சமநிலையில் நிறைவுக்கு வந்தது.

இதன் மூலம் தொடரில் தோல்வி காணாத அணிகளாக வடக்கு, கிழக்கு மாகாண அணிகள் திகழ்கின்றன.




# ஒருநாள் தொடர் இந்தியா வசம்

## ஆறுதல் வெற்றியை நோக்கி இன்று களமிறங்கும் மே.இ. தீவுகள்




சுற்றுலா மேற்கிந்திய தீவுகள் அணியுடனான இரண்டாவது ஒருநாள் சர்வதேச போட்டியில் 44 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றிபெற்ற இந்திய அணி, ஒரு போட்டி எஞ்சியிருக்கும் நிலையில் ஒருநாள் தொடரை வென்ற நிலையில் ஆறுதல் வெற்றியை நோக்கி மேற்கிந்திய தீவுகள் அணி இன்று களமிறங்குகிறது.

ஐ.சி.சி. உலகக்கிண்ண சுப்பர் லீக் தொடரின் 3 போட்டிகள்கொண்ட ஒருநாள் சர்வதேச தொடர், 3 போட்டிகள்கொண்ட இருபதுக்கு 20 சர்வதேச தொடரில் விளையாடுவதற்காக மேற்கிந்திய தீவுகள் கிரிக்கெட் அணி இந்தியாவுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ளது. அந்த வகையில் முதல் தொடரான 3 போட்டிகள்கொண்ட ஒருநாள் தொடரின் முதல் போட்டியில் இந்திய அணி வெற்றிபெற்றிருந்த நிலையில், இரண்டாவது போட்டி நேற்று முன்தினம் அஹமதாபாதில் நடைபெற்றது.

போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி சூர்யகுமார் யாதவின் அரைச்சதத்தின் உதவியுடன் 50 ஓவர்கள் நிறைவில் 9 விக்கெட்டுகளை இழந்து 237 ஓட்டங்களை பெற்றது. 238 என்ற சாதாரண வெற்றி இலக்கை நோக்கி பதிலுக்குக் களமிறங்கிய மேற்கிந்திய தீவுகள் அணி 46 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 193 ஓட்டங்களை மாத்திரம் பெற்று தோல்வியைத் தழுவியது.

போட்டியின் ஆட்டநாயகனாக 4 விக்கெட்டுகளை வீழ்த்திய பிரசித் கிருஷ்ணா தெரிவானார். இரு அணிகளுக்கும் இடையிலான மூன்றாவதும், இறுதியுமான போட்டி இன்று அஹமதாபாதில் நடைபெறுகின்ற நிலையில், மேற்கிந்திய தீவுகள் அணி ஆறுதல் வெற்றி பெறுமா என்பதை பொறுத்திருந்து பார்க்கலாம்.

# முதல் வெற்றியை பதிவுசெய்த தம்புள்ள; கண்டிக்கு ஐந்தாவது வெற்றி

இலங்கை கிரிக்கெட் சபையின் ஏற்பாட்டில் நடைபெற்று வருகின்ற 5 அணிகள் பங்கேற்கும் நெஷனல் சுப்பர் லீக் கிரிக்கெட் தொடரில் நேற்று நடைபெற்ற இரு போட்டிகளில் தம்புள்ள அணி முதல் வெற்றியை பதிவுசெய்த அதேவேளை, கண்டி அணி தனது ஐந்தாவது வெற்றியை பதிவு செய்தது.

தம்புள்ள, ரங்கிரி சர்வதேச கிரிக்கெட் மைதானத்தில் நடைபெற்ற காலி – தம்புள்ள அணிகளுக்கிடையிலான போட்டியில் தம்புள்ள அணி 5 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது. போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய காலி அணி 33.4 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 125 ஓட்டங்களை மாத்திரம் பெற்றது. 126 என்ற இலகுவான வெற்றி இலக்கை நோக்கி பதிலுக்கு களமிறங்கிய தம்புள்ள அணி 24.5 ஓவர்களில் 5 விக்கெட்டுகளை இழந்த நிலையில் வெற்றி இலக்கை அடைந்தது.



மறுமுனையில் கண்டி, பல்லேகல சர்வதேச கிரிக்கெட் மைதானத்தில் நடைபெற்ற கொழும்பு – கண்டி அணிகளுக்கிடையிலான போட்டியில் கண்டி அணி 7 பந்துகள் மீதமிருக்க, 6 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது. போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய கொழும்பு அணி 49.3 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 271 ஓட்டங்களை பெற்றது.

272 என்ற வெற்றி இலக்கை நோக்கி பதிலுக்குக் களமிறங்கிய கண்டி அணி 48.5 ஓவர்களில் 4 விக்கெட்டுகளை மாத்திரம் இழந்து வெற்றி இலக்கை அடைந்தது. இதன்மூலம் தொடரில் 5ஆவது வெற்றியை பதிவுசெய்த கண்டி அணி 24 புள்ளிகளுடன் புள்ளிப்பட்டியலில் முதலிடத்தில் காணப்படுகிறது.






Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7